www.Padasalai.Net www.CBSEtips.in

TEACHER'S CARE PUBLICATION TCA KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
# மேல்நிலை முதலாமாண்டு
# 2023 - 2024

15-10-2023 அன்று நடைபெற்ற
தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் 100-க்கு 97-வினாக்கள் நமது TCA வழங்கிய முதல் பதிப்பு புத்தகத்தில் இருந்து நேரடியாக கேட்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**97 / 100**



15-10-2023 அன்று நடைபெற்ற தேர்வின்

## வினா,விடை,விளக்கம்

1,500 மாணவர்களுக்கு தலா 36,000 ரூபாய்

புத்தகத்தை amazon.in இணையதளத்தில் பெற்று பயனடையலாம்

amazon.in

முன் பதிவிற்க்கான எண்கள்

95665 35080 93602 68118
76399 67359 63690 36346

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

கால அளவு: 2 மணி நேரம் CODE: XI 23

பதிவெண் Roll No:

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வு

(பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கானது)

## தேர்வு எழுதுபவர்களுக்கான அறிவுரைகள்

**வினா நூல் தொகுப்பைத் திறப்பதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.**

1) இவ்வினாத் தொகுப்பு 100 வினாக்களைக் கொண்டது.

2) அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.

3) விடைகளை OMR விடைத்தாளில் குறிக்க வேண்டும்.

4) ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளிலிருந்து சரியான விடையினைக் கண்டறிந்து நிழலிடப்பட (Shading) வேண்டும். '✓' மற்றும் '✗' ஆகிய குறியீடுகளை OMR விடைத்தாளில் குறிக்கக்கூடாது.

5) விடைகளை கண்டறிய மேற்கொள்ளும் வழிமுறைகளை வினா நூல் தொகுப்பில் எங்கு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். OMR விடைத்தாளிலோ அல்லது தனித்தாளிலோ செய்யக்கூடாது.

6) தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பையோ அல்லது OMR விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

7) தேர்வு முடிந்த பிறகு OMR விடைத்தாளை மட்டும் அறைக்கண்காணிப்பாளரிடம் கொடுக்கவும். வினாநூல் தொகுப்பை தேர்வர் எடுத்துச் செல்லலாம்.

8) ஏதேனும் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏழு இலக்க பதிவெண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

பக்கத்தைத் திருப்பிப் பதிலளிக்கத் தொடங்கவும்

XI -23
{P.T.O.}

www.Padasalai.Net

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

## தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் கேட்கப்பட்ட வினா அமைப்பு முறை (2023 - 2024) அக்டோபர்

| | |
|---|---|
| செய்யுள் | 29 |
| உரைநடை | 21 |
| இலக்கணம் | 22 |
| துணைப்பாடம் | 08 |
| மொழிப்பயிற்சி | 16 |
| திருக்குறள் | 04 |
| மொத்தம் | 100 |

- மேலும், அக்டோபர் (2023) அன்று நடைப்பெற்ற அரசு திறனறித் தேர்வு வினாத்தாளில் 100 வினாக்களில், 97 வினாக்கள் TCA - வின் தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வு புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.
- மேலும் (2023) திறனறித் தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினா அமைப்பு முறையில் பகுதி - ஆ - 97% முழுமையாக இடம்பெற்றுள்ளன.

www.Padasalai.Net

TEACHER'S CARE PUBLICATION
HEAD OFFICE : 21/46, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1.
CONTACT : 95665 35080, 97862 69980

BRANCH OFFICES

Branch Office 1 : 14, 1st Floor, 63 KPRS Tower, Thennur High Road, Trichy-620017.

Branch Office 2 : 266-C, Advaitha Ashram Road, (Opp. To New Bus Stand), Salem-636004

Branch Office 3 : 23, North Veliveethi, Pooja Complex, Simmakkal, Madurai- 625001

TRICHY : 76399 67359, SALEM : 9360268118, MADURAI : 96555 37380
Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

www.Padasalai.Net www.CBSEtips.in


# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

## TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy : 76399 67359** **Salem : 93602 68118**


## தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வு - அக்டோபர் - 2023

**1) "மழையும் புயலும்" என்னும் நூலின் ஆசிரியர்**

(அ) மு. வரதராசனார் (ஆ) இரா.பி. சேது

(இ) ப. ஜீவானந்தம் (ஈ) வ. இராமசாமி

**விடை: (ஈ) வ. இராமசாமி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 100**

100

அவற்றுக்கெல்லாம் பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களில் பெயர் வைத்திருக்கிறார்கள். உவம உருபு மறைந்து வந்தால், அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

இந்தத் திருக்குறளில் உவம உருபு இல்லை. இதை நாங்கள் உரைநடையிலும் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் 'இணை ஒப்பு' (analogy) என்கிறோம்.

ஊர் கூடித் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள். ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது, புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று எழுதினார் வ.ராமசாமி, மழையும் புயலும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**சங்கப் புலவர்:** என்னே செறிவு!

**இணையத் தமிழன்:** ◆ அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவோம்.

◆ (த.தி.தேர்வு, அக்டோபர் 2022)

**சங்கப் புலவர்:** இலக்கணத்தில் இது உண்டே! தொல்காப்பியர், "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும் (செய்யுளியல், 192) என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

**இணையத் தமிழன்:** நீங்கள் குறிப்பிட்ட இரண்டையும் நாங்கள் ◆ இலக்கணை என்கிறோம்.

சிந்தனையில் அலைகளின் நுட்பங்கள் விளங்கும். மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும் என எங்கள் காலத் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் இப்படி எழுதியிருக்கிறார்.

**சங்கப் புலவர்:** மோனையும் எதுகையும் செய்யுளில் வருமாயின் இனிய ஓசையின்பம் விளையும். இவற்றினை நீவிர் உரைநடையில் பயன்படுத்துவீரோ?

**இணையத் தமிழன்:** ஆம். இதோ! தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே,

கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்;
குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்!
கோலமாமயில் தோகை விரித்தாடும்;
தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும்;

இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்திறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த் திவலைகள் பாலாவிபோற் பரந்தெழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாம்" என்று சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை, தமிழின்பம் என்னும் நூலில் எழுதியுள்ளார்.

**சங்கப் புலவர்:** அருமை! உணர்வு வெளிப்பாட்டிற்கும் சொல்லப்படும் கருத்திற்கு அழுத்தம் தரவும் நீவிர் உரைநடையில் வேறு என்ன உத்திகளைப் பயன்படுத்துவீர்?

**இணையத் தமிழன்:** இதற்காகச் சொல்லையோ கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு! சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்ய மு.வரதராசனார், தம் நாட்டுப்பற்று என்னும் கட்டுரைக்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2) பொருந்தாத இணையைத் தேர்க

(அ) பீடு - இழிவு (ஆ) விசும்பு - வானம்

(இ) ஊழி - யுகம் (ஈ) ஊழ் - முறை

**விடை: (அ) பீடு - இழிவு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 183**

183

- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.
- பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. த.தி.தேர்வு அக்-2022
- பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது
- அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| விசும்பு | – வானம் |
| ஊழி | – யுகம் |
| ஊழ் | – முறை |
| தண்பெயல் | – குளிர்ந்த மழை |
| ஆர்தருபு | – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த |
| பீடு | – சிறப்பு |
| ஈண்டி | – செறிந்து திரண்டு |

Q-2 2023

**நூல்குறிப்பு**

- பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
- பாடப்பகுதியிலுள்ள பாடலை எழுதியவர் **கீரந்தையார்.**
- இந்நூல் **"ஓங்கு பரிபாடல்"** எனும் புகழுடையது.
- **இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.** (த.தி.தேர்வு அக்-2022)
- உரையாசிரியர்கள் இதில் எழுபது பாடல்கள் இருப்பதாக கூறியுள்ளனர்.
- இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை , சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்.

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| ஊழ்ஊழ் | – அடுக்குத் தொடர் |
| வளர்வானம் | – வினைத் தொகை |
| செந்தீ | – பண்புத்தொகை |
| வாரா (ஒன்றன்) | – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| கிளர்ந்த | – கிளர் + த் (ந்) + த் + அ |
| கிளர் | – பகுதி |
| த் | – சந்தி |
| த்(ந்) | – ந் ஆனது விகாரம் |
| த் | – இறந்தகால இடைநிலை |
| அ | – பெயரெச்ச விகுதி |

**நினைவில் நிறுத்துவோம்**

- இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.
- 1300 ஆண்டுகளுக்குமுன் **மாணிக்கவாசகர்** திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்.

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**

**..................................................**

**சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" - (திருவாசகம் 3 - 1 - 6)**

- அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத்துகள் போல அவை நுண்மையாக இருக்கின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. விசும்பில் **ஊழி ஊழ் ஊழ்** செல்லக் கரு வளர் வானத்து இசையில் தோன்றி – என்னும் பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல்
   (அ) முல்லைப்பாட்டு (ஆ) காசிக்காண்டம் (இ) பரிபாடல் (ஈ) பெருமாள் திருமொழி
2. **"உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;**
   **உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"**
   **– இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்**


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3) இலக்கணக் கட்டுக்கோப்பு குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருக்கும் பாவகையைத் தேர்க.

(அ) வெண்பா (ஆ) அகவற்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

**விடை: (ஆ) அகவற்பா**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 90**

## 2.8. பா - வகை, அலகிடுதல்

- **யாப்பின் உறுப்புகள் ஆறு** : எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்று ஆறு உறுப்புகளைக் கொண்டது யாப்பு.
- **பாக்கள் நான்கு வகைப்படும்** : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்பாக்கள் உள்ளன.
- **ஓசை நான்கு வகைப்படும்:** செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்று நான்கு வகைப்படும்.



### செப்பல் ஓசை

- செப்பலோசை வெண்பாவிற்குரியது.
- அறம் கூறும் குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

### அகவல் ஓசை

- அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது.
- இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா. * Q-3/2023
- சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் அகவற்பாவில் அமைந்தவை.
- சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்? விடை : அகவற்பா(த.தி.தே 22-23)

### துள்ளல் ஓசை

- செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது துள்ளல் ஓசை.
- இது கலிப்பாவுக்கு உரியது.

### தூங்கல் ஓசை

- தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது.

### பா வகைகள்

**வெண்பாவின் வகைகள் - (5)**

1. குறள் வெண்பா
2. சிந்தியல் வெண்பா
3. நேரிசை வெண்பா
4. இன்னிசை வெண்பா
5. பஃறொடை வெண்பா

**ஆசிரியப்பாவின் வகைகள் - 4**

1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக்குறள் ஆசிரியப்பா
3. நிலைமண்டில ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா




TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

4) “கடுங்காற்று, மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது” என்று காற்றின் வேகத்தைக் குறிப்பிடுபவர்

(அ) குடபுலவியனார் (ஆ) ஐயூர்முடவனார்

(இ) வெண்ணிக் குயத்தியார் (ஈ) மதுரை இளநாகனார்

**விடை: (ஈ) மதுரை இளநாகனார்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 13**

13

| | | |
|---|---|---|
| 2 | அக்டோபர் - நவம்பர் மாதங்களில் மழை பெய்யும். | ஜீன் - செப்டம்பர் மாதங்களில் மழை பெய்யும். |
| 3 | இப்பருவக்காற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகாவின் உட்பகுதிகள், மழைப்பொழிவின் 35% சதவீதத்தைப் பெறுகின்றன. | இந்தியாவின் ஒட்டு மொத்த மழைப்பொழிவின் 75% மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது. |



- ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும்.
- அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறது.
- இந்தியாவின் முதுகெலும்பு **வேளாண்மை.**
- இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் காற்று பங்கெடுக்கிறது.
- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றுக் கொடுக்கிறது.

### 1.2.6. தடம் பதிக்கும் காற்று



- வடகிழக்குப் பருவ காலங்களில், தாழ்வுமண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறுகிறது.
- (*) காற்றின் ஆற்றலை **வளி மிகின் வலி இல்லை** (புறம். 31) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். (த.தி.தேர்வு - அக்டோபர் - 2022)
- A-4 2023 மதுரை இளநாகனார் (புறம். 55) கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### 1.2.7. ஆற்றலாகக் காற்று



- காற்று உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.
- தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது.
- விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகிறது.
- பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தைக் காற்றில் சுமந்து, புவியின் உயிர்ச் சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
- உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் காற்றே உள்ளது.
- "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்" எனும் புதுமொழிக்கு வித்தாவது காற்று.
- புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான காற்றைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும்போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகிறது.



- உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் **இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது.**
- உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் **தமிழகம் முதலிடம்** வகிக்கிறது.
- காற்றை உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் **இரண்டாம் இடத்தை இந்தியா** வகிக்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

5) “மாசற விசித்த வார்புறு வள்பின்”

- இவ்வரி இடம் பெற்றுள்ள நூல்

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு

(இ) ஏலாதி (ஈ) கார் நாற்பது

**விடை: (அ) புறநானூறு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 189**

189

- இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது.

**பகுபத உறுப்பிலக்கணம்**

தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து
தணி – பகுதி, த் – சந்தி
த்(ந்) – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – சாரியை.
து – படர்க்கைவினைமுற்று விகுதி

Q – 45/2023

**இலக்கணக் குறிப்பு**

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்
காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை

**சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்**

- ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்.
- களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார் அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.
- உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார்.
- அப்பாடல் - “மாசற விசித்த வார்புறு வள்பின் ...” புறம் 50

இ – 5/2023

**பயிற்சி வினாக்கள்**

1. “நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம் தண்ணிய அமுதால் எங்கள் கோபத் தீத் தணிந்தது என்னா”
- இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?
(அ) முல்லைப்பாட்டு (ஆ) நீதி வெண்பா
(இ) திருவிளையாடற் புராணம்
(ஈ) பெருமாள் திருமொழி

2. “புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப் பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்”
- இப்பாடல் வரிகளின் ஆசிரியர்
(அ) குலசேகராழ்வார் (ஆ) அதிவீரராபாண்டியர்
(இ) பரஞ்சோதி முனிவர் (ஈ) தமிழழகனார்

7. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் புராணம் எத்தனை காண்டங்களை உடையது?
(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

8. திருவிளையாடற் புராணத்தில் இல்லாத காண்டம் எது?
(அ) இலங்கா காண்டம் (ஆ) கூடற் காண்டம்
(இ) திருவாலவாய்க் காண்டம்
(ஈ) வஞ்சிக்காண்டம்

9. திருமறைக்காட்டில் பிறந்தவர்?
(அ) குலசேகராழ்வார்
(ஆ) அதிவீராபாண்டியர்
(இ) பரஞ்சோதி முனிவர் (ஈ) அருணகிரியார்

6) ”ஆலத்து மேல குவளை குளத்துள

வாலின் நெடிய குரங்கு” - இப்பாடலடிகளில் பயின்று வந்துள்ள பொருள்கோள் வகை

(அ) நிரல்நிறைப் பொருள்கோள் (ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள் (ஈ) தாப்பிசைப் பொருள்கோள்

**விடை: (இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 78**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY



### 3. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

- ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா. ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு. - மயிலைநாதர் உரை

Q-6 | 2023

- மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும்.
- இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே - நன்னூல்: 417

**நினைவில் நிறுத்துவோம்!**

✓ காமராசர் நகர் இங்கேயா இருக்கிறது? - அறியா வினா
✓ இந்த வழியாகச் செல்லுங்கள் - சுட்டுவிடை
✓ எனக்கு எழுதித் தருகிறாயா? - ஏவல் வினா
✓ எனக்கு யார் எழுதித் தருவார்கள்? - வினா எதிர் வினாதல் விடை

1. ஆதிரை ஏதோ எழுதுகிறாள் போலிருக்கிறதே - அறியா வினா
2. கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். - நேர்விடை
3. அப்படியா என்ன தலைப்பு - அறியா வினா
4. கல்வியில் சிறக்கும் தமிழர் - நேர்விடை
5. நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா? - ஐய வினா
6. ஏன் வராமல் - வினா எதிர் வினாதல் விடை

7) பொருத்தி விடை தேர்க

1) தேடித்தேடி - i) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

2) அழுத குழந்தை - ii) வினைமுற்றுத் தொடர்

3) வளர்ந்தது தமிழ் - iii) பெயரெச்சத் தொடர்

4) ஊரின்கண் நீங்கினார் - iv) அடுக்குத் தொடர்

(அ) 4, 3, 2, 1 (ஆ) 3, 4, 1, 2

(இ) 4, 2, 1, 3 (ஈ) 4, 2, 1, 3

**விடை: (அ) 4, 3, 2, 1**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 66, 69, 70**

www.Padasalai.Net www.CBSEtips.in


TEACHER'S CARE PUBLICATION
TCA
KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

**15-10-2023 அன்று நடைபெற்ற**
**தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் 100-க்கு 97-வினாக்கள் நமது TCA வழங்கிய முதல் பதிப்பு புத்தகத்தில் இருந்து நேரடியாக கேட்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**97 / 100**



**15-10-2023 அன்று நடைபெற்ற தேர்வின்**
# வினா,விடை,விளக்கம்

**1,500 மாணவர்களுக்கு தலா 36,000 ரூபாய்**

புத்தகத்தை *amazon.in* இணையதளத்தில் பெற்று பயனடையலாம்

amazon.in

முன் பதிவிற்க்கான எண்கள்

95665 35080
76399 67359
93602 68118
63690 36346


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## 2.2. தொகைநிலைத் தொடர்கள்

### சொற்றொடர் :

- சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது "சொற்றொடர்" அல்லது "தொடர்" எனப்படும்.

  எ.கா. நீர் பருகினான், வெண்சங்கு ஊதினான்.

### தொகைநிலைத் தொடர்

- பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனைத் **தொகைநிலைத்தொடர்** என்று கூறுவர். எ.கா. **கரும்பு தின்றான்.**
- மேற்கண்ட தொடர் கரும்பைத் தின்றான் என்னும் பொருளை உணர்த்துகிறது. இத்தொடரில் உள்ள இரண்டு சொற்களுக்கு நடுவில் ஐ என்னும் **உருபுமறைந்து** நின்று, அப்பொருளைத் தருகிறது. எனவே, இது **தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

**தொகைநிலைத்தொடர்கள் ஆறு வகைப்படும்**

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

**தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும் அவை:**

**1. வேற்றுமைத்தொகை**

- எ.கா. **மதுரை சென்றார்.**
- இத்தொடர் **மதுரைக்குச் சென்றார்** என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையில் என்னும் **வேற்றுமை** உருபு இல்லை. அது தொக்கி நின்று பொருளை உணர்த்துகிறது.
- இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

### உருபும் பயனும் உடன்தொக்க தொகை

எ.கா. **தேர்ப்பாகன்**

- இத்தொடர் **"தேரை ஓட்டும் பாகன்"** என விரிந்து பொருளை உணர்த்துகிறது. கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கிடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபும் "ஓட்டும்" என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.
- இவ்வாறு ஒரு தொடரில் **வேற்றுமை** உருபும் அதன் பொருளை **விளக்கும் பயனும்** சேர்ந்து மறைந்து வருவது **உருபும் பயனும் உடன் தொக்க தொகை** எனப்படும். இதுவும் **வேற்றுமைத் தொகையே** ஆகும்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in





22) காலம் கரந்த ______ வினைத்தொகை?

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்

இ) உவமைத்தொகை ஈ) பெயரெச்சம்

23) கொல்களிறு - இலக்கணக் குறிப்பு?

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை

24) அடித்தல் - இலக்கணக் குறிப்பு?

அ) முதனிலைத் தொழிற்பெயர்

ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர்

ஈ) தொழிற்பெயர்

25) கண்ணன் என்னும் சொல்?

அ) பகாப்பதம் ஆ) பகுப்பதம்

இ) இடைப்பகாப்பதம் ஈ) உரிப்பகாப்பதம்

## 2.3. தொகாநிலைத்தொடர்




- ஒரு தொடரில் சொற்களுக்கு இடையில் சொல்லோ உருபோ மறைந்து வராமல் வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும். எ.கா. காற்று வீசியது, குயில் கூவியது
- முதல் தொடரில் "காற்று" என்னும் எழுவாயும் "வீசியது" என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறுசொல் வேண்டாது பொருளை உணர்த்துகின்றது.
- அதேபோன்று இரண்டாவது தொடரிலும் எழுவாயும் பயனிலையும் தொடர்ந்து நின்று குயில் கூவியது என்னும் பொருளைத் தருகின்றது.

### 1. எழுவாய்த்தொடர்

- எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த்தொடர் ஆகும்.
  இனியன் கவிஞர் - பெயர் ➤ பேருந்து வருமா? - வினா
- காவிரி பாய்ந்தது - வினை
- மேற்கண்ட மூன்று தொடர்களிலும் பெயர், வினை, வினா ஆகியவற்றுக்கான பயனிலைகள் வந்து எழுவாய்த் தொடர்கள் அமைந்துள்ளன.

### 2. விளித்தொடர்

- விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.
  நண்பா எழுது! - "நண்பா" என்னும் விளிப்பெயர் "எழுது" என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்துள்ளது.

### 3. வினைமுற்றுத்தொடர்

- வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர் ஆகும்.
- பாடினாள் கண்ணகி "பாடினாள்" என்னும் வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக்கொண்டு முடிந்துள்ளது.

### 4. பெயரெச்சத்தொடர்

- முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சத்தொடர் எனப்படும்.
- கேட்ட பாடல் "கேட்ட" என்னும் எச்சவினை "பாடல்" என்னும் பெயரைக் கொண்டு முடிந்துள்ளது.

### 5. வினையெச்சத்தொடர்

- முற்றுப் பெறாத வினை வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத்தொடர் ஆகும்.
- பாடி மகிழ்ந்தனர் "பாடி" என்னும் எச்சவினை "மகிழ்ந்தனர்" என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

### 6. வேற்றுமைத்தொடர்

- வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள் ஆகும். சான்று: கட்டுரையைப் படித்தாள்.
- இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.
- அன்பால் கட்டினார் - (ஆல்) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
- அறிஞருக்குப் பொன்னாடை (கு) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

### 7. இடைச்சொல் தொடர்

- இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது **இடைச்சொல் தொடர்** ஆகும்.
- மற்றொன்று - **மற்று + ஒன்று**. "**மற்று**" என்னும் இடைச்சொல்லை அடுத்து "**ஒன்று**" என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

### 8. உரிச்சொல் தொடர்

- உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.
- சாலச் சிறந்தது "**சால**" என்பது உரிச்சொல். அதனைத் தொடர்ந்து "**சிறந்தது**" என்ற சொல்நின்று மிகச் சிறந்தது என்ற பொருளைத் தருகிறது.

### 9. அடுக்குத் தொடர்

Q-7/2023

- ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடர் ஆகும்.
- வருக! வருக! வருக! ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் அடுக்கி வந்துள்ளது.

**நினைவில் நிறுத்துவோம்**

1) இறங்கினார் முகமது - வினைமுற்றுத் தொடர்
2) அவர் பாடகர் - எழுவாய்த் தொடர்
3) படுவதும் கேட்பதும் - இடைச்சொல்
4) கேட்ட பாடல் - பெயரெச்சத் தொடர்
5) கேட்காத பாடல் - எதிர்மறை பெயரெச்சத் தொடர்
6) அடுக்கடுக்காக - அடுக்குத்தொடர்
7) பாடல்களைப் பாடுவதும் - இரண்டம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்
8) அவருக்குப் பொழுது போக்கு - நான்காம் வேற்றும் தொகை நிலைத் தொடர்

**வண்ணச்சொற்களின் தொடர் வகைகள்**

- <u>பழகப் பழகப்</u> பாலும் புளிக்கும் - அடுக்குத்தொடர்
- <u>வடித்த கஞ்சியில்</u> சேலையை அலசினேன் - பெயரெச்சத்தொடர்
- மேடையில் <u>நன்றாகப் பேசினான்</u> - வினையெச்சத்தொடர்
- <u>வந்தார் அண்ணன்</u> - வினைமுற்றுத்தொடர்
- அரிய <u>கவிதைகளின் தொகுப்பு</u> இது - ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

ஒன்றுக்கும் மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம். வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களைச், செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன. எ.கா. கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி

8) நற்சொல் கேட்க தெய்வத்திற்குக் கொண்டுவந்த பொருட்களாக நப்பூதனார் கூறுபவை

(அ) தேங்காய், பழம் (ஆ) நெல், முல்லைப்பூ

(இ) கற்பூரம், ஊதுபத்தி (ஈ) நெல், பழம்

**விடை: (ஆ) நெல், முல்லைப்பூ**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 172**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

19) எட்டையபுரத்தின் ஏந்தல் என்று அறியப்பட்டவர்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) சி.சு. செல்லப்பா ஈ) கவிமணி

20) குழந்தைகளுக்கான நீதிகளைப் பாடலில் தந்தவர்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) தமிழ்ஒளி ஈ) தேவரசன்



## 5.2.1 முல்லைப்பாட்டு - நப்பூதனார்

### நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
- த.தி.தேர்வு அக்-2022
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
- த.தி.தேர்வு அக்-2022
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்
- அடி – 1 - 17

### முல்லைப் பாட்டின் நூல் குறிப்பு

📖 முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1-17 அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைபாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது; முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

### சொல்லும் பொருளும்

- நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
- நேமி - சக்கரம்
- கோடு - மலை
- கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
- நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
- தூஉய் - தூவி
- விரிச்சி - நற்சொல்
- சுவல் - தோள்

### பாடலின் பொருள்

- அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.
- துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.
- அங்கு, சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஒர் இடைமகள் கண்டாள். குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஒட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

9) “உண்டோம்” என்ற பகுபதத்தில் “ஓம்” என்னும் விகுதி

(அ) தன்மை ஒருமை வினைமுற்று விகுதி (ஆ) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

(இ) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

(ஈ) முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**விடை: (ஆ) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Material Reference Book**

**பகுபத உறுப்புகள்**

- பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

**பகுதி**

- சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில்
- ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.
  - ✓ படித்தான் – படி என்பது பகுதி
  - ✓ ஓடினான்- ஓடு என்பது பகுதி
  - ✓ வந்தான் – வா என்பது பகுதி

**விகுதி**

சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| **உண்டோம்** | **ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி** | **அம், ஆம், எம், ஏம், ஓம்** |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு |

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



10) சௌம்ய நாராயணன் திருக்கோவில் அமைந்துள்ள இடம்

(அ) திருப்பாதிரிப் புலியூர் (ஆ) திருவெறும்பூர்

(இ) திருக்கோட்டியூர் (ஈ) திருநின்றவூர்

**விடை: (இ) திருக்கோட்டியூர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 130**

130

சொல்லுங்கள் என்னும் செய்தி, **பூரணரால் திருவரங்கத்திற்கு** அனுப்பப்பட்டதன் அடிப்படையிலேயே வந்துள்ளோம். மனம் தளர வேண்டாம். நமது வருகையை அவருக்குத் தெரிவியுங்கள்.

**(வீட்டினுள்ளிருந்து வந்த பூரணர் வாசலில் மூவர் நிற்பதைப் பார்த்துத் திகைக்கிறார்)**

**கூரேசர்:** சுவாமிகளே! வணக்கம்! தங்கள் கட்டளைப்படி **புனித திருமந்திரத் திருவருளுக்காக** வந்துள்ளோம்.

**பூரணர்:** அடியவர்களே வணக்கம்! (இராமானுசரைப் பார்த்து) **தண்டு, கொடியுடன்** உங்களை மட்டும் தானே வரச் சொன்னேன்

**இராமானுசர்:** ஆம் சுவாமி! தங்கள் கட்டளை கிடைத்த பின்பே புறப்பட்டோம்.

**பூரணர்:** பிறகெதற்குத் தாங்கள் உறவுகளை உடன் அழைத்து வந்துள்ளீர்கள்?

**இராமானுசர்:** சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக் கூடாது. தங்கள் விருப்பப்படியேதான் வந்துள்ளேன். தாங்கள் கூறிய **தண்டு, கொடிக்கு இணையானவர்கள்** இவர்கள். எனவே அடியவர்களாகிய எங்கள்மேல் **கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும்.**

**பூரணர்:** உடையவர்களே! நான் கூறும் மந்திர மறைபொருள் திருவரங்கனின் திருவருளால் கிடைக்கப் பெற்றது. இது நமது **பரம ஆச்சாரியார் ஆளவந்தார்** அவர்களால் **எனக்கு மட்டுமே கிடைத்த அரிய பொக்கிசம்.** இதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் நாள்தோறும் தியானிப்பதால், **பிறவித்தளை நீங்கும். இறைவனடி செல்ல இயலும்.** இளையாழ்வாரே! இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன்.

**(மூவரும் வீட்டினுள் சென்று மூன்று மனைப்பலகையில் அமர, பூரணர் எதிர் மனைப்பலகையில் அமர்கிறார்)**

**இராமானுசர்:** கோபம் கொள்ளாது திருவருள் கொண்டமைக்குத் தலைவணங்குகிறோம் சுவாமி!

**பூரணர்:** ஆண்டவனின் அடியவர்களுக்குத் **திருமந்திரம்** உரைப்பதில் நாம் உளம் மகிழ்கிறோம்.

**(மூவரும் கைகூப்பி நன்றி கூறுகின்றனர்)**

**பூரணர்:** நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள். கூறப் போகின்ற **திருமந்திர மறைபொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும்.** வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறுவீர்கள் எனில் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் **தண்டனையாக நரகமே** கிட்டும்.

**(மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)**

**பூரணர்:** ஆச்சாரிய நியமத்தை மீறிய பாவிகளாக நீங்கள் மாற மாட்டீர்கள் என்னும் நம்பிக்கையுடன் திருமந்திரத்தைக் கூறுகிறேன். செவிகளைக் கூர்மைப்படுத்திக் கேளுங்கள். நான் கூறும் திருமந்திரத்தை நீங்களும் சேர்ந்து சொல்லுங்கள்.

**"திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்து நாராயணனை வணங்குகிறேன்".**

**(பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொல்கின்றனர்.)**

**பூரணர்:** உங்கள் வாழ்வில் இன்றைய நாள் மிகவும் நல்ல நாள். இறைவனின் திருவருளால் இன்று திருமந்திரம் உமக்குக் கிடைத்தது.

இராமானுசர்: உங்கள் திருவருளும் அதில் உள்ளது சுவாமிகளே !

**பூரணர்:** நான் கூறிய கருத்தைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். ஆசிரியர் கட்டளையை மீறிவிட வேண்டாம்.

மூவரும்: நினைவில் உள்ளது சுவாமிகளே! ஆண்டவனின் அடியவர்களாகிய எங்களுக்கு, திருவருள் கொண்டு திருமந்திரம் கூறியமைக்கு மிக்க நன்றி சுவாமிகளே!

## காட்சி - 2

இடம்: திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவில் — 2-10|2023

**பாத்திரங்கள்:** இராமானுசர், கூரேசர், முதலியாண்டான், பூரணரின் சீடர், பொதுமக்கள்

**பொதுமக்களில் ஒருவர்:** எல்லாரும் வேகமா எங்கே போறாங்க?

**பொதுமக்களில் மற்றொருவர்:** உமக்குச் சேதி தெரியாதா? வைணவ சாமியாரு ஒருத்தரு **பெறவிப் பிணிகளைத் தீர்க்குற மந்திரத்தெச்** சொல்லப் போறாராம்.

**பொதுமக்களில் இன்னொருவர்:** அப்படியா சேதி! வாங்க நாமும் போகலாம்.

**(கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நிற்க, கீழே பொதுமக்களுடன் கூரேசரும், முதலியாண்டானும் நிற்கின்றனர்)**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



11) திருத்தணிகையுலா கூறும் ஐம்பெறுங்காப்பிய முறை வைப்பு

(அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

(ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி

(இ) சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம், மணிமேகலை

(ஈ) சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

**விடை: (ஈ) சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 206**

206

- மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.
- மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

**சொல்லும் பொருளும்**

சுண்ணம் – நறுமணப்பொடி,
காருகர் – நெய்பவர் (சாலியர்),
தூசு – பட்டு, துகிர் – பவளம்,
வெறுக்கை – செல்வம், நொடை – விலை,
பாசவர் – வெற்றிலை விற்போர்,
ஓசுநர் – எண்ணெய் விற்போர்,
கண்ணுள் வினைஞர் – ஓவியர்,
மண்ணீட்டாளர் – சிற்பி, கிழி – துணி.
- த. தி. தேர்வு -அக்-2022

- இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர்.
- பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.
- இவ்வாறாகப் பழுதின்றிக் கைத் தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.
- இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன.
- இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா - த. தி. தேர்வு -அக்-2022
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்" - திருத்தணிகையுலா.

**இலக்கணக் குறிப்பு**

வண்ணமும் சுண்ணமும் – எண்ணும்மை
பயில்தொழில் – வினைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு – பகுதி
இ(ன்) – இறந்த கால இடைநிலை
'ன்' புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி - த. தி. தே -அக்-2022

**உரைப்பாட்டு மடை**
**(உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)**

உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப் பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு. வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

**நூல் வெளி**

- சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பாடப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

12) இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது

(அ) வழா நிலை (ஆ) கால வழுவமைதி

(இ) வழுவமைதி (ஈ) வழுநிலை

**விடை: (இ) வழுவமைதி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 72**

72

| | | |
|---|---|---|
| படர்க்கை | படர்க்கைப் பெயர்கள்<br>படர்க்கை வினைகள் | அவன், அவள், அவர், அது, அவை.<br>வந்தான், சென்றாள், படித்தனர் பேசினார்கள்<br>பறந்தது பறந்தன... |

**அஃறிணைக்குரிய பால் பகுப்புகள்**

- அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும். எ.கா. யானை, புறா, மலை.
- அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும். எ.கா : பசுக்கள், மலைகள்.

**மூவிடம்**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

**வழு – வழாநிலை - வழுவமைதி**

1. வழு

- இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
- இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும் வழு எனப்படும்.

2. வழாநிலை

- இலக்கணப் பிழைகள் இல்லாதிருப்பின் அவை வழாநிலை எனப்படும்.

**வழுவமைதி:**

- வழுவமைதி என்பது இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

| | வழு | வழா நிலை |
|---|---|---|
| திணை | செழியன் வந்தது | செழியன் வந்தான் |
| பால் | கண்ணகி உண்டான் | கண்ணகி உண்டாள் |
| இடம் | நீ வந்தேன் | நீ வந்தாய் |
| காலம் | நேற்று வருவான் | நேற்று வந்தான் |
| வினா | ஒரு விரலை காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல். | இருவிரல்களைக் காட்டி எது சிறியது எது? பெரியது என்று கேட்டல். |
| விடை | கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல். | கண்ணன் எங்கே இருக்கிறார் என்ற வினாவிற்கு கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல். |
| மரபு | தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல். | தென்னைமரங்கள் உள்ள பகுதியை தென்னந்தோப்பு என்று கூறுதல். |

**வழுவமைதியின் வகைகள் – ஐந்து**

ஐந்து வகை

- மரபு வழுவமைதி
- திணை வழுவமைதி
- கால வழுவமைதி
- பால் வழுவமைதி
- இட வழுவமைதி

1. திணை வழுவமைதி

TEACHER'S CARE ACADEMY

13) பொருத்தி விடை தேர்க

| | |
|---|---|
| 1) அரும்பு | - i) பூ விரியத் தொடங்கும் நிலை |
| 2) போது | - ii) மரம், செடியினின்று பூ கீழே விழுந்த நிலை |
| 3) வீ | - iii) பூ வாடின நிலை |
| 4) செம்மல் | - iv) பூவின் தோற்றநிலை |

(அ) 3, 4, 2, 1 (ஆ) 2, 4, 1, 3

(இ) 4, 1, 2, 3 (ஈ) 2, 3, 4, 1

**விடை: (இ) 4, 1, 2, 3**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 3**


3

1.1.5. பூவின் நிலைகள்

➤ பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.

Q-13/2023

✓ அரும்பு: பூவின் தோற்றநிலை
✓ போது: பூ விரியத் தொடங்கும் நிலை
✓ மலர்(அலர்): பூவின் மலர்ந்த நிலை
✓ வீ: மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
✓ செம்மல்: பூ வாடின நிலை

1.1.6. உலகப் பெருந்தமிழர் - தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

➤ இவர் தமிழாசிரியர்.
➤ நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்.
➤ சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
➤ திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்திருப்பவர்.
➤ பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.
➤ தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர்.
➤ தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்.
➤ விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர்.

பாவாணர் நூலகம்

➤ தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்.
➤ இன்றளவும் இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கி வருபவர்.
➤ இயற்றியவை: இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப்பாடினிய உரை, தேவநேயம் முதலியவை)
➤ தமிழ்ப் பணியைத் தரமுயர்த்திய நல்முத்துக்களில் இவரும் ஒருவர்.



TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY

14) " மாதவி வேலிப் பூகவனம்தொ றும் வயலக டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே"
என்ற கம்பரின் வரிகளில் உயிரென சுட்டப்படுவது

(அ) சரயு ஆறு (ஆ) கங்கை ஆறு

(இ) பிரம்மபுத்திரா ஆறு (ஈ) கோதாவரி ஆறு

**விடை: (அ) சரயு ஆறு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 194**

194

29. குண்டலம் என்பது ________
(அ) காதில் அணிவது (ஆ) கழுத்தில் அணிவது
(இ) மார்பில் அணிவது (ஈ) தலையில் அணிவது

30. சிலம்பு என்பது________
(அ) காதில் அணிவது (ஆ) கழுத்தில் அணிவது
(இ) காலில் அணிவது (ஈ) தலையில் அணிவது

31. இடையில் அணியும் அணிகலன்______
(அ) சிலம்பு (ஆ) சூழி
(இ) சுட்டி (ஈ) அரைநாண்

32. நெற்றியில் அணியும் அணிகலன்_____
(அ) சிலம்பு (ஆ) சூழி
(இ) சுட்டி (ஈ) அரைநாண்

33. குழை என்பது ___ இல் அணியும் அணிகலன்
(அ) தலை (ஆ) கழுத்து
(இ) இடை (ஈ) காது

34. திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் நூலை இயற்றியவர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) குமரகுருபரர்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

35. இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப்பாடும் இலக்கியம்?
(அ) தூது (ஆ) உலா
(இ) பரணி (ஈ) பிள்ளைத்தமிழ்

36. குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்து முகமைசைந்து ஆடும் பருவம்?
(அ) காப்பு (ஆ) செங்கீரை
(இ) தால் (ஈ) வருகை

37. "குண்டலமும் குழைகாதும்" - இலக்கணக்குறிப்பு?
(அ) உம்மைத்தொகை
(ஆ) எண்ணும்மை
(இ) உவமைத்தொகை
(ஈ) வியங்கோள் வினைமுற்று

38. "செங்கீரை" என்பது?
(அ) செடி (ஆ) காற்று
(இ) மரம் (ஈ) கீற்று

39. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பருவத்திற்கு பாடப்படும் பாடல்கள்?
(அ) 8 (ஆ) 10 (இ)6 (ஈ) 18

40. "சிறுபறை" என்பவை எவ்வகைப் பிள்ளைத்தமிழில் இடம் பெறும்?
(அ) ஆண்பால் (ஆ) பெண்பால்
(இ) பொது
(ஈ) இவற்றில் எதுவும் இல்லை

41. பிளைத்தமிழில் முதற்பருவம்?
(அ) செங்கீரை (ஆ) அம்புலி
(இ) காப்பு (ஈ) தால்

## 5.6.2. கம்பராமாயணம் - கம்பர்



❖ கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் – பாரதியார்

### பாலகாண்டம் - ஆற்றுப்படலம்

தா துகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போ தவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்க டோறும்
மா தவி வேலிப் பூக வனம்தொ றும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே. (31)

Q-14|2023

பாடலின் பொருள்

➢ மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந் தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயுஆறு.

➢ அது, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

### பாலகாண்டம் - நாட்டுப்படலம்

(இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன்கவி காட்டுகிறது.)

www.Padasalai.Net www.CBSEtips.in



15) "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
"வாரல்" என்பனபோல் மறித்துக்கை காட்ட"
- இப்பாடல் அடிகளில் இடம் பெற்றுள்ள அணி

(அ) நிரல் நிறை அணி (ஆ) தன்மையணி
(இ) தற்குறிப்பேற்ற அணி (ஈ) தீவக அணி

**விடை: (இ) தற்குறிப்பேற்ற அணி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 94**

TEACHER'S CARE ACADEMY

94

## 2.9. அணி

- மக்களுக்கு அணிகலன்கள் அழகு அது சேர்ப்பன போன்று செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன அணிகள்.

### தற்குறிப்பேற்ற அணி

- இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

எ.கா. போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'

B-15/2023 (*)

### பாடலின் பொருள்

- கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

### அணிப்பொருத்தம்

- கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.
- ஆனால் இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார்.
- இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

### தீவக அணி

- தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள்.
- ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்தி பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

**தீவகம் மூன்று வகைப்படும்**

1) முதல்நிலைத் தீவகம் 2) இடைநிலைத் தீவகம், 3) கடைநிலைத் தீவகம்

எ.கா. சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,
மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து

**பாடலின் பொருள்**
- ✓ சேந்தன - சிவந்தன
- ✓ தெவ்- பகைமை
- ✓ சிலை- வில்
- ✓ மிசை- மேலே
- ✓ புள்- பறவை

### பாடலின் பொருள்

- அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன; வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

TEACHER'S CARE ACADEMY

16) கரிசல் எழுத்தாளர்களில் மூத்தவர்

(அ) கி. இராஜ நாராயணன் (ஆ) கு. அழகிரிசாமி

(இ) சா. கந்தசாமி (ஈ) பூமணி

**விடை: (ஆ) கு. அழகிரிசாமி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 132**

132

**பூரணர்:** விடை தருவதற்கு முன்பு, நான் மற்றொன்றையும் அளிக்கிறேன். இதோ என் மகன் **சௌம்ய நாராயணனைத்** தங்களிடம் அடைக்கலமாக அளிக்கிறேன். ஏற்றுக்கொண்டு விடை பெறுங்கள் எம் பெருமானே!

**இராமானுசர்:** சுவாமிகளே! முன்பு கிடைப்பதற்கரிய திருமந்திரத்தை எமக்களித்தீர்கள். இன்றோ உங்களின் அன்புத் திருமகனையும் எமக்களித்துள்ளீர்கள். நான் பெரும்பேறு பெற்றவன் ஆகிவிட்டேன். மிக்க மகிழ்ச்சி. விடை தாருங்கள்! புறப்படுகிறோம்!

**(பூரணர் விடைதர இராமானுசர் சௌம்ய நாராயணனுடன் முன் செல்ல கூரேசரும் முதலியாண்டானும் பின் தொடரப் புறப்பட்டுச் செல்கின்றனர்.)**

**பயிற்சி வினாக்கள்:**

1. புனித திருமந்திரத்தை இராமானுசருக்குக் கூறியவர் ____

அ) முதலி ஆ) திருமால் இ) கூரேசர் ஈ) பூரணர்

2. புனித திருமந்திரத்தை மக்கள் அனைவருக்கும் கூறியவர் ____

அ) முதலி ஆ) இராமானுசர்

இ) கூரேசர் ____ ஈ) பூரணர்

3. இராமானுசரின் செயலால் மனம் திருந்தியவர்

அ) முதலி ஆ) பொதுமக்கள்

இ) கூரேசர் ஈ) பூரணர்

4. "கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரிதண் பறம்பு நாடே" – இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு

இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

5. பறம்புமலை என்று அழைக்கப்படும் மலை ____

அ) சுவாமி மலை ஆ) பழனி மலை

இ) கொல்லி மலை ஈ) பிரான் மலை

6. பிரான் மலை அமைந்துள்ள மாவட்டம்?

அ) கன்னியாக்குமரி ஆ) தேனி

இ) சிவகங்கை ஈ) தருமபுரி

## 3.9. ஒருவன் இருக்கிறான் - கு. அழகிரிசாமி

**நினைவில் நிறுத்துவோம்:** Q-16

- **ஒருவன் இருக்கிறான்** கதை **'கு.அழகிரிசாமி சிறுகதைகள்'** என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
- கு.அழகிரிசாமி, அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர்; **மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக்** கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்.
- **கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர்** எனலாம். Q-16/2023
- **கி.ரா.வுக்கு இவர் எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம்** வாய்ந்தவை.
- படைப்பின் உயிரை முழுமையாக உணர்ந்திருந்த கு.அழகிரிசாமி பல இதழ்களில் பணியாற்றியவர்; மலேசியாவில் இருந்தபோது அங்குள்ள படைப்பாளர்களுக்குப் படைப்பு தொடர்பான பயிற்சி அளித்தவர்.
- இவர் **பதிப்புப்பணி, நாடகம்** எனப் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழ் **இலக்கியத்தில்** ஆர்வம் கொண்டு **திறனாய்வு நூல்களையும் படைத்தவர்.**

**முன்தோன்றிய மூத்தகுடி:**

**"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசு பட அமர் உழக்கி" - மதுரைக்காஞ்சி 127-13**

**திருவாரூர் மாவட்டத்தின் ஆலங்கானம்**

www.Padasalai.Net

17) வட இந்தியப் பெருங்கடலில் உருவான புயல்காற்றிற்கு தாய்லாந்து சூட்டிய பெயர்

(அ) பெய்ட்டி (ஆ) கஜா

(இ) பிஜ்லி (ஈ) ஜல்

**விடை: (அ) பெய்ட்டி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 104**

104

- வங்கக் கடலில் வீசும் புயலும், அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளைத் தாக்கும் புயல்களும் இடம்புரிப் புயல்கள்! ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள் வலம்புரி புயல்கள்!
- பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ் இந்த விளைவை 1835 -ல் கண்டுபிடித்தார். புயலின் இந்த இரு வகை சுழற்சிக்குக் கொரியாலிஸ் விளைவு என்று பெயர்.




### புயலுக்குப் பெயர் சூட்டல் ஏன்?

- புயலுக்கு முன்பு பேரழிவு பற்றிய விழிப்புணர்வு, தயாரிப்பு, பேரிடர் மேலாண்மை, பாதிப்புக் குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்குப் புயலின் பெயர்கள் உதவும்.
- வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000 ஆம் ஆண்டில் தொடங்கியது.

* Q-17/2023

- புது தில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.
- வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன.
- இதில் இந்தியா கொடுத்து ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் (நான்கு பூதங்கள்), கடைசியாக லெஹர் (அலை), இன்னும் வரவிருப்பவை மேக், சாஹர், வாயு. 'கஜா' புயலின் பெயர் இலங்கை தந்தது. அடுத்து வந்த 'பெய்ட்டி' புயல் பெயர் தாய்லாந்து தந்தது.

- இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியமாய் அமையும்போது இனிமையும் மகிழ்வும் ஒருங்கே பெறுகிறோம்.
- அதே இயற்கையின் அசைவு சீற்றமாய் ஊழித்தாண்டவமாய் மாறுகையில் எதிர்நிற்க இயலாமல் தோற்றுத்தான் போகின்றோம்.

### புயலிலே ஒரு தோணி:

- (பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர். அவ்வாறு குடியேறிய இனங்களில் தமிழினமும் ஒன்று. தமிழ்க்குடிகள் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசிய நாடுகளில் நெடுங்காலமாக வாழ்ந்துவருகின்றனர். நூலாசிரியர் அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் இந்தோனேசியாவில் மெயின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதைதான் புயலிலே ஒரு தோணி என்னும் புதினம். கடற்பயணத்தில் கண்ட காட்சிகளும் அதன் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளும்தான் இக்கதைப்பகுதி)

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

18) கைமுறை - இலக்கணக் குறிப்பு தருக

(அ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(ஆ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(இ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**விடை: (அ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 214**

214

3. விரிந்தன கொம்பில் கொய்த
வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
இரும்புழைப் புண்போல் நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
தடவிலா தனித்தேன் அந்தோ! (2401)

பொருள்: என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்ட தனால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன. சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்.

| சொல்லும் பொருளும் | |
|---|---|
| கொம்பு | கிளை |
| புழை | துளை |
| கான் | காடு |
| தேம்ப | வாட |
| அசும்பு | நிலம் |

4. உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொ த்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
விரும்பிய உணவு தேடச்
செய்முறை அறியேன்; கானில்
செல்வழி அறியேன்; தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள். (2403)

Q 80 2023

Q 18 2023

பொருள்: நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்; நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன். உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்; காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்; என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே

| சொல்லும் பொருளும் | |
|---|---|
| உய்முறை | வாழும் வழி |
| ஓர்ந்து | நினைத்து |
| கடிந்து | விலக்கி |

இயற்கை கொண்ட பிரிவு

5. நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. 2410

பொருள்: நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள, மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள, பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

| சொல்லும் பொருளும் | |
|---|---|
| உவமணி | மணமலர் |
| படலை | மாலை |
| துணர் | மலர்கள் |

இலக்கணக் குறிப்பு

- ✓ காக்கென்று - காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்
- ✓ கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை
- ✓ காய்மணி, உய்முறை, செய்முறை - வினைத்தொகைகள் - (த. தி. தேர்வு -அக்-2022)
- ✓ மெய்முறை - வேற்றுமைத்தொகை
- ✓ கைமுறை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை. Q – 18/2023

பகுபத உறுப்பிலக்கணம்

அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

Q 84 2023

பகுபத உறுப்பிலக்கணம்

ஒலித்து - ஒலி + த் + த் + உ;
ஒலி - பகுதி;
த் - சந்தி;
த் - இறந்த கால இடைநிலை;
உ - வினையெச்ச விகுதி

TEACHER'S CARE ACADEMY

19) இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கவிதைத் தொகுப்பு நூலான கீதாஞ்சலி எம்மொழியில் மொழிபெயர்த்தமைக்கு அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது?

(அ) வங்க மொழி (ஆ) ஜப்பானிய மொழி

(இ) ஆங்கில மொழி (ஈ) பிரெஞ்சு மொழி

**விடை: (இ) ஆங்கில மொழி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 30**



30

* அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டுவீசியது என்று சொல்கிறார்கள்.
* அந்தத் தொடருக்குப் பொருள், 'விடைதர அவகாசம், வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள். 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர். (த.தி.தே. அ - 2022)
* இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது எனலாம்.

1.5.3. மொழிபெயர்ப்புக் கல்வி

- மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.
- பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.
- மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மையைப் பெறமுடியும்.
- நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.
- இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1.5.4. இலக்கிய இறக்குமதி

- பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.
- இலக்கியம் என்பது தன் பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது.
- அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது.
- அத்தகைய மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.
- ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.

ஷேக்ஸ்பியர்

- 18ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.
- இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின.
- தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.
- மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது.
- ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது; கம்பன் இருந்திருக்க முடியாது. இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.



TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



20) "சந்தாசாகிப்" மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டவர்

(அ) கால்டுவெல் (ஆ) ஹிராஸ் பாதிரியார்

(இ) கா.ப. செய்கு தம்பிப் பாவலர் (ஈ) கான்சுடான்சு சோசப் பெசுகி

**விடை: (ஈ) கான்சுடான்சு சோசப் பெசுகி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 215**

215

**இஸ்மத் சன்னியாசி - தூய துறவி**

- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் **இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார்.** த. தி. தேர்வு -அக்-2022
- இந்தப் பாரசீகச் சொல்லுக்குத் தூய துறவி என்றுபொருள்.
- **தேம்பா + அணி** எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.
- கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது.
- இப்பெருங்காப்பியம் **3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615** பாடல்களைக் கொண்டுள்ளது. **17ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி.**
- இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி. **தமிழின் முதல் அகராதியான சதுரகராதி,** (த. தி. தேர்வு -அக்-2022)
- தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.

**பயிற்சி வினாக்கள்**

1. பொருத்தி விடை தேர்க

(a) சேக்கை - 1) பயனுள்ள
(b) யாக்கை - 2) கட்டி
(c) பிணித்து - 3) உடல்
(d) வாய்ந்த - 4) படுக்கை

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3
(இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

2. பொருத்தி விடை தேர்க

(a) இளங்கூழ் - 1) அசைந்து
(b) காய்ந்தேன் - 2) இளம்பயிர்
(c) தயங்கி - 3) கிளை
(d) கொம்பு - 4) வருந்தினேன்

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

3. பொருத்தி விடை தேர்க

(a) அசும்பு - 1) வாட
(b) தேம்ப - 2) காடு
(c) கான் - 3) மாலை
(d) படலை - 4) நிலம்

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

4. அறியேன் – பகுபத உறுப்பிலக்கணம்

(அ) அறி + ய் + ஏ + ஏன் (ஆ) அறி + ய் + ஏன்
(இ) அறி + ய் + வ் + ஏன் (ஈ) அறி + ய் + ஆ + ஏன்

(இ) தூய துறவி (ஈ) குரு

7. சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டவர்?

(அ) கால்டுவெல் (ஆ) வீரமாமுனிவர்
(இ) தத்துவப்போதகர் (ஈ) எல்லீஸ்

8. சந்தாசாகிப் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை யாருக்கு வழங்கினார்?

(அ) கால்டுவெல் (ஆ) வீரமாமுனிவர்
(இ) தத்துவப்போதகர் (ஈ) எல்லீஸ்

9. இஸ்மத் சன்னியாசி என்னும் சொல் எம்மொழிச் சொல்?

(அ) சீனம் (ஆ) பாரசீகம்
(இ) உருது (ஈ) இந்தி

10. தேம்பாவணி என்னும் காப்பியத்தை இயற்றியவர்?

(அ) கால்டுவெல் (ஆ) வீரமாமுனிவர்
(இ) தத்துவப்போதகர் (ஈ) எல்லீஸ்

11. கான்சுடான்சு சோசப் பெசுகி என்னும் இயற்பெயர் கொண்டவர்?

(அ) கால்டுவெல் (ஆ) வீரமாமுனிவர்
(இ) தத்துவப்போதகர் (ஈ) எல்லீஸ்

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



21) உழிஞை, தும்பை - ஆகிய புறத்திணைகளின் போர்ச் செயல்கள் முறையே

(அ) கோட்டையைக் காத்தல், மாற்றரசனோடு போரிடல்

(ஆ) மாற்றரசனோடு போரிடல், நிரை மீட்டல்

(இ) நிரை மீட்டல், மாற்றரசனோடு போரிடல்

(ஈ) கோட்டையைச் சுற்றி வளைத்தல், வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடல்

**விடை: (ஈ) கோட்டையைச் சுற்றி வளைத்தல், வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடல்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 88**

Q- 21 / 2023 88

**உழிஞைத்திணை**

- மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.



வேலிகளில் எறிப்படரும் நீண்ட கொடியே உழிஞைக் கொடி. இதன் கூட்டிலைகளும் மலர்களும் சிறியவை; மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை முடக்கத்தான் (முடக்கொற்றான்) எனக் கூறுகின்றனர்.

**வினா:** மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற தன் வீரர்களுடன் கோட்டையைச் சுற்றி வளைத்தல்
**விடை:** உழிஞைத் திணை (தமிழ்.தி.தே 22-23) Q-21 / 2023

**தும்பைத் திணை**

- பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச்சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை.
- போரிடுகின்ற அரசர்கள் இருவரும் தும்பைப் பூ மாலையையே சூடியிருப்பார்கள்.
- போர்த்திணைகள் படிப்படியாக வளர்ந்த நிலையில், போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.



எல்லா இடங்களிலும் வளரக் கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி தும்பை.

**வாகைத்திணை**

- போரிலே வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது வாகைத்திணை.
- வாகை என்றாலே வெற்றி என்று பொருள்.



மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் வாகை பூ.

**பாடாண்திணை**

- பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது பாடாண்திணை (பாடு+ஆண்+திணை = பாடாண்திணை).

**பொதுவியல் திணை**

- வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை.

**கைக்கிளை**

- கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்.

**பெருந்திணை**

- பெருந்திணை என்பது பொருந்தாக் காமத்தைக் குறிக்கிறது.

**பயிற்சி வினாக்கள்**

1. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது ______
அ) அகத்திணை ஆ) புறத்திணை
இ) முல்லைத்திணை ...

5. கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்பது எத்திணை

TEACHER'S CARE ACADEMY

22) “குட்டி இளவரசன்” என்னும் தமிழ் நூலின் ஆசிரியர்

(அ) வெ. ஸ்ரீராம் (ஆ) எம்.பி. அகிலா

(இ) வல்லிக் கண்ணன் (ஈ) அழ. வள்ளியப்பா

**விடை: (அ) வெ. ஸ்ரீராம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 143**

143

## 4.1.3. தமிழ் நூல்களும் ஆசிரியரும்

1. நாம் ஏன் தமிழ் கற்க வேண்டும் - முனைவர் சேதுமணி மணியன்
2. தவறின்றித் தமிழ் எழுதுவோம் - மா. நன்னன்
3. பச்சை நிழல் - உதயசங்கர்
4. குயில்பாட்டு - பாரதியார்
5. அதோ அந்தப் பறவை போல - ச. முகமது அலி
6. உலகின் மிகச்சிறிய தவளை - எஸ்.ராமகிருஷ்ணன்
7. திருக்குறள் தெளிவுரை - வ.உ.சிதம்பரனார்
8. சிறுவர் நாடோடிக் கதைகள் - கி.ராஜநாராயணன்
9. **ஆறாம் திணை - மருத்துவர் கு.சிவராமன்**
10. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் - நீலமணி
11. அன்றாட வாழ்வில் அறிவியல் - ச.தமிழ்ச்செல்வன்
12. காலம் - ஸ்டீபன் ஹாக்கிங்
13. சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று - தமிழில் வல்லிக்கண்ணன்
14. குட்டி இளவரசன் - தமிழில் வெ.ஸ்ரீராம்
15. ஆசிரியரின் டைரி - தமிழில் எம்.பி.அகிலா
16. தேன்மழை - சுரதா
17. திருக்குறள் நீதி இலக்கியம் - க.த.திருநாவுக்கரசு
18. நாட்டார் கலைகள் - அ.கா.பெருமாள்
19. என் கதை - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்
20. வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்
21. நாற்காலிக்காரர் (நாடகம்) - ந.முத்துசாமி ♦ (த.தி.தேர்வு, அக்-2022)
22. அறமும் அரசியலும் - மு.வரதராசனார்
23. அபி கவிதைகள் - அபி
24. எண்ணங்கள் - எம்.எஸ். உதயமூர்த்தி
25. யானை சவாரி - பாவண்ணன்
26. கல்மரம் - திலகவதி
27. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் - ந. முருகேசபாண்டியன்










23) பெண்பாற் பிள்ளைத் தமிழின் கடைசி மூன்று பருவங்கள்

(அ) சிற்றில், சிறுபறை, சிறுதேர் (ஆ) காப்பு, செங்கீரை, தால்

(இ) கழங்கு, அம்மானை, ஊசல் (ஈ) முத்தம், வருகை, அம்புலி

**விடை: (இ) கழங்கு, அம்மானை, ஊசல்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 192**

TEACHER'S CARE ACADEMY

**பகுபத உறுப்பிலக்கணம்**

பதிந்து – பதி +த்(ந்) + த் + உ
பதி – பகுதி
த் – சந்தி (ந்-ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**அணிகலன்கள்**

சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
அரைநாண் - இடையில் அணிவது
சுட்டி - நெற்றியில் அணிவது
குண்டலம், குழை - காதில் அணிவது
சூழி - தலையில் அணிவது

**சொல்லும் பொருளும்**

- பண்டி - வயிறு, அசும்பிய - ஒளிவீசுகிற, முச்சி - தலையுச்சிக் கொண்டை

**செங்கீரைப்பருவம்**

- செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும்.
- இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்து முகமசைந்து ஆடும்.
- குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.
- 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.
- இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர்.
- பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ்.
- பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும்.
- இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.
- **குமரகுருபரரின் காலம் 17ஆம் நூற்றாண்டு. (த.தி.தேர்வு அக்-2022)**
- இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். கந்தர் கலிவெண்பா, மீனாட்சிஅம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.



**1. இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி. (த.தி.தேர்வு அக்-2022)**

2. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) சிற்றில், சிறுபறை, சிறுதேர்

D-23 | 2023

3. பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – கழங்கு, அம்மானை, ஊசல்

**பயிற்சி வினாக்கள்**

1. "செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாட" - இடம்பெற்ற நூல்?
(அ) முல்லைப்பாட்டு
(ஆ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
(இ) நீதி வெண்பா (ஈ) பூத்தொடுத்தல்

4. "பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்" - இவ்வரிகள் இடம்பெற்ற நூல்
(அ) முல்லைப்பாட்டு
(ஆ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
(இ) நீதி வெண்பா (ஈ) பூத்தொடுத்தல்

24) "மார்கழித் திங்கள்" - இலக்கணக் குறிப்பைத் தேர்க

(அ) அன்மொழித்தொகை (ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(இ) உம்மைத் தொகை (ஈ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**விடை: (ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 67**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE PUBLICATION
TCA
KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

**15-10-2023 அன்று நடைபெற்ற**
**தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் 100-க்கு 97-வினாக்கள் நமது TCA வழங்கிய முதல் பதிப்பு புத்தகத்தில் இருந்து நேரடியாக கேட்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**97 / 100**



15-10-2023 அன்று நடைபெற்ற தேர்வின்
# வினா,விடை,விளக்கம்

**1,500 மாணவர்களுக்கு தலா 36,000 ரூபாய்**

புத்தகத்தை *amazon.in* இணையதளத்தில் பெற்று பயனடையலாம்

amazon.in

முன் பதிவிற்க்கான எண்கள்

95665 35080
76399 67359
93602 68118
63690 36346

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

67

3. பண்புத்தொகை

➢ நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் பண்பு உருபுகளும் "மை" என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும். செங்காந்தள் செம்மையாகிய காந்தள், வட்டத்தொட்டி வட்டமான தொட்டி, இன்மொழி - இனிமையான மொழி.

❖ இருபெயரொட்டுப் பண்புத்தொகை

➢ சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும். எ.கா. மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு.

➢ திங்கள், பாம்பு ஆகிய பொதுப் பெயர்களுக்குமுன் மார்கழி, சாரை எனும் சிறப்புப் பெயர்கள் வந்து மார்கழி ஆகிய திங்கள் என்றும் சாரை ஆகிய பாம்பு என்றும் இருபெயரொட்டாக வந்துள்ளன.

Q-24 2023

4. உவமைத்தொகை

➢ உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும். எ.கா. மலர்க்கை (மலர் போன்ற கை)

➢ உவமை - கை, உவமேயம் - மலர் (பொருள்) இடையே 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

5. உம்மைத்தொகை

➢ இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகையாகும். உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

எ.கா. அண்ணன் தம்பி. தாய்சேய் அண்ணனும் தம்பியும், தாயும் சேயும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

6. அன்மொழித்தொகை

➢ வேற்றுமை. வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும். எ.கா. சிவப்புச் சட்டை பேசினார், முறுக்கு மீசை வந்தார்.

➢ இவற்றில் சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார், முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகைநிலைத்தொடர் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன.

25) தெருக்கூத்து கலையில் "அருச்சுனன் தபசு" நிகழ்த்தப்படுவதற்கான காரணம்

(அ) வெற்றி வேண்டி (ஆ) இறையருள் வேண்டி

(இ) மழை வேண்டி (ஈ) பாதுகாப்பு வேண்டி

**விடை: (இ) மழை வேண்டி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 40**

www.Padasalai.Net TEACHER'S




- விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர்.
- தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர்.
- புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக் குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

### 1.6.9. தெருக்கூத்து



- நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது.
- கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.
- திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது.
- களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது.
- பின்னர்க் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது.
- இதில் ஒரு கதையை **இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு** ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர்.
- திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.
- தெருக்கூத்து வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது.
- அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது.
- கூத்துக்கலைஞர், கூத்தைக் கற்றுக்கொடுப்பவர் ஆகியோரின் அடிப்படையிலும் காலம், இடம் போன்றவற்றின் அடிப்படையிலும் கூத்து நிகழ்த்தப்படுவதில் சிறுசிறு மாறுபாடுகள் உள்ளன.
- தெருக்கூத்து, பொழுதுபோக்குக் கூறுகளைப் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது.
- இதனைக் கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

25/2023

26) "ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!"

- இதில் அவனும் யானும் என்பது

(அ) மனிதனும் கடவுளும் (ஆ) நன்பனும் கவிஞனும்

(இ) தலைவனும் தலைவியும் (ஈ) கடவுளும் கவிஞனும்

**விடை: (ஈ) கடவுளும் கவிஞனும்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 210**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

2. மீட்சி விண்ணப்பம் என்னும் கவிதைத் தொகுப்பை இயற்றியவர்?
(அ) கண்ணதாசன் (ஆ) உமா மகேஸ்வரி
(இ) கு.ப.ராஜகோபாலன்
(ஈ) தி.சொ.வேணுகோபாலன்

3. மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்?
(அ) கண்ணதாசன்
(ஆ) உமா மகேஸ்வரி
(இ) கு.ப.ராஜகோபாலன்
(ஈ) தி.சொ.வேணுகோபாலன்

4. "சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்" - இவ்வரிகள் எத்தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

5. "அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை"
இவ்வரிகள் எத்தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

6. "காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை" -இவ்வரிகள் எத்தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
(அ) கண்ணதாசன் (ஆ) உமா மகேஸ்வரி
(இ) கு.ப.ராஜகோபாலன்
(ஈ) தி.சொ.வேணுகோபாலன்

7. "கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை" -
இவ்வரிகள் எத்தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

8. தி.சொ.வேணுகோபாலன் பிறந்த ஊர்?
(அ) திருவையாறு (ஆ) திருப்பரங்குன்றம்
(இ) திருச்சிற்றம்பலம் (ஈ) திருவதிகை

## 5.8.1. காலக்கணிதம் - கண்ணதாசன்



கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
2-26 2023 ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதிதாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!
- த. தி. தேர்வு -அக்-2022

புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்க ள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!
*மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! *

- 'காலக்கணிதம்' என்னும் இப்பாடப்பகுதி கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- கண்ணதாசன் அவர்களின் இயற்பெயர் 'முத்தையா'
- இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர்.
- பெற்றோர் : சாத்தப்பன் – விசாலாட்சி

27) சிங்கம் மாமிசத்தை உண்ணும் போது, எலும்பு அதன் மேல்வாயில் குத்தியது
- அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான சொற்களைத் தேர்க.
(அ) ஊண், அண்ணம் (ஆ) ஊன், அன்னம்
(இ) ஊன், அண்ணம் (ஈ) ஊண், அன்னம்

**விடை: (இ) ஊன், அண்ணம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 144**

144

7. பொருத்தி விடை தேர்க
a) சிறுவர் நாடோடிக் கதைகள் 1) மருத்துவர் கு.சிவராமன்
b) ஆறாம் திணை 2) கி.ராஜநாராயணன்
c) அன்றாட வாழ்வில் அறிவியல் 3) ஸ்டீபன் ஹாக்கிங்
d) காலம் 4) ச.தமிழ்ச்செல்வன்
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3
இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

8. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் என்னும் நூலை இயற்றியவர் ____
அ) முனைவர் சேதுமணி மணியன்
ஆ) நீலமணி
இ) மா. நன்னன் ஈ) ச. முகமது அலி

9. பொருத்தி விடை தேர்க
a) தேன்மழை 1) அ.கா.பெருமாள்
b) திருக்குறள் நீதி இலக்கியம் 2) சுரதா
c) நாட்டார் கலைகள் 3) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்
d) என் கதை 4) க.த.திருநாவுக்கரசு
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3
இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

10. பொருந்தாத இணைகளைத் தேர்க.
1) வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்
2) நாற்காலிக்காரர் - ந. முத்துசாமி
3) அறமும் அரசியலும் - பாவண்ணன்
4) யானை சவாரி - மு. வரதராசனார்
அ) 2, 3 ஆ) 2, 1 இ) 4, 3 ஈ) 4, 1

11. பொருந்தாத இணைகளைத் தேர்க.
1 நாட்டார் கலைகள் - மு. வரதராசனார்
2) அபி கவிதைகள் - அபி
3) எண்ணங்கள் - எம்.எஸ்.உதயமூர்த்தி
4) யானை சவாரி - ராஜம் கிருஷ்ணன்
அ) 2, 3 ஆ) 2, 1 இ) 4, 3 ஈ) 4, 1

12. கல்மரம் என்னும் நூலை இயற்றியவர் _
அ) ந. முருகேசபாண்டியன்
ஆ) திலகவதி
இ) ந. முத்துசாமி ஈ) எஸ்.ராமகிருஷ்ணன்

13. ந. முருகேசபாண்டியன் அவர்கள் எழுதிய நூல் ____
அ) சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று
ஆ) பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள்
இ) அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
ஈ) உலகின் மிகச்சிறிய தவளை

14. குட்டி இளவரசன் என்னும் நூலைத் தமிழில் எழுதியவர் ____
அ) வெ.ஸ்ரீராம் ஆ) எம்.பி. அகிலா
இ) வல்லிக்கண்ணன் ஈ) எஸ்.ராமகிருஷ்ணன்

15. ஆசிரியரின் டைரி என்னும் நூலைத் தமிழில் எழுதியவர் ____
அ) வெ.ஸ்ரீராம் ஆ) எம்.பி. அகிலா
இ) வல்லிக்கண்ணன் ஈ) எஸ்.ராமகிருஷ்ணன்

16. சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று என்னும் நூலைத் தமிழில் எழுதியவர்?
அ) வெ.ஸ்ரீராம் ஆ) எம்.பி. அகிலா
இ) வல்லிக்கண்ணன் ஈ) எஸ்.ராமகிருஷ்ணன்

## 4.1.4. அகராதி கண்டு பொருள் கூறுக

1. அடவி - காடு
2. அவல் ◆ - பள்ளம் ,விளைநிலம், குளம்
3. சுவல் - மேட்டு நிலம், தோள், கழுத்து
4. செறு ◆ - வயல் , பாத்தி, செய்
5. பழனம் ◆ - பொய்கை,மருதநிலம், நீர் நிலச் சேறு, நிலம்
6. புறவு ◆ - காடு, முல்லை நிலம், புறம்பு, புறா, முல்லைக்கொடி

◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)

7. அகன்சுடர் - உயர்ந்ததீபம்
8. கட்புள் - விழித்திருக்கும் பறவை
9. திருவில் - வானவில்
10. ஆர்கலி - கடல், மழை, பறவை
11. கொடுவாய் - வளைந்த வாய்
12. ஊண் - உணவு
13. ஊன் - இறைச்சி, உடம்பு Q-27
14. அண்ணம் - மேல் வாயின் உட்புறம் 2022
15. அன்னம் - சோறு, பறவை
16. திணை - ஒழுக்கம், பிரிவு
17. தினை - ஒருவகை சிறுதானியம்
18. வெள்ளம் - நீர்ப்பெருக்கு
19. வெல்லம் - இனிப்புப்பொருள்
20. அவிர்தல் - விளங்குதல்
21. கங்குல் - இரவு
22. அழல் - நெருப்பு
23. கனலி - நெருப்பு, ஞாயிறு
24. உவா - முழுநிலவு
25. மன்றல் - திருமணம்
26. அகராதி - அகரமுதலி
27. மருள் - மயக்கம், வியப்பு
28. அடிச்சுவடு - காலடியின் அடையாளம்
29. தூவல் - மழை, இறகு, பேனா, ஓவியம்
30. தால் - நாக்கு
31. அகவுதல் - அழைத்தல், ஒலித்தல், பாடுதல்
32. அணிமை - அண்மை, அருகு, பக்கம்
33. உழுவை - புலி
34. ஏந்தொழில் - மிகுந்த அழகு
35. மிரியல் - மிளகு

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net

28) “சுடுமண் சிலைகள்” என்னும் குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றவர்

(அ) சா. கந்தசாமி (ஆ) கி. ராஜநாராயணன்

(இ) ராஜம் கிருஷ்ணன் (ஈ) ஜெயகாந்தன்

**விடை: (அ) சா. கந்தசாமி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 121**

121

## 3.6. பாய்ச்சல் - சா. கந்தசாமி

### நினைவில் நிறுத்துவோம்:

- 'தக்கையின் மீது நான்கு கண்கள்' என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சா.கந்தசாமி. இவர் மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகத்தில் மிகவும் புகழ்பெற்றார். 'விசாரணைக் கமிஷன்' என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்.
- சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார். Q—28/2022
- நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.




**முன்தோன்றிய மூத்தகுடி:**

"ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்ட த்து தொண்டியோர்" Q—88/2023

- சிலப்பதிகாரம், ஊர்காண்காதை 107-108

இராமநாதபுரம் மாவட்டத்தின் தொண்டி

- உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான்.
- கலைநிகழ்வின் ஊடாக அவன் பெருமிதம் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும்.
- தன் கலையைப் பின்பற்ற, தகுந்த வாரிசு உருவாகிறபோது அவன் கொள்கிற மகிழ்ச்சி அளப்பரியது.

### பாய்ச்சல்:

- தெருமுனையில் ஏதோ சத்தம் ஆளோடித் தூணைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த அழகு தலையை நீட்டிப் பார்த்தான், இவனையொத்த சிறுவர்கள் புழுதி பறக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். என்னவோ நடக்கிறது என்று நினைத்துச் சாலைக்கு வந்தான். தெருவின் முனையில் பெரிய கூட்டம். மேளம் கடகடவென்று இரைந்து கொண்டிருந்தது. ஊருக்கு இவன் புதிதாகையால் என்ன நடக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.
- நாதசுரமும் மேளமும் ஒன்றாக இழைந்து ஒலித்தன. இவன் குனிந்து பார்த்தான். **இரண்டு கால்கள் மின்னல் வெட்டி மறைவது போலத் துள்ளிப் பாய்ந்து சென்றன.** அந்தக் கால்கள் மனிதக் கால்களிலிருந்து மாறுபட்டு, பச்சையா ... தீர்மானிக்க முடியாத
- **ஆள் உயரக் குரங்கு ஒன்று** மரத்தின் மேலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தான் கண்டதை இவனால் நம்ப முடியவில்லை. **கண்ணுக்குத் தெரிந்தது நிஜமா என்கிற தவிப்பு.**
- இப்போது **தான் கண்டது குரங்கல்ல, இது - அனுமார் நினைவு இவனுக்கு வந்தது. இது அனுமார்தான்.** மனத்தில் அனுமாரைக் காணும் ஆவல் பெருக முண்டியடித்துக் கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்தான்.
- அனுமார் வலது காலையும் இடது காலையும் மாறி மாறித் தரையில் உதைத்து வேகமாகக் கைகளை வீசி நடக்க ஆரம்பித்தார்.
- இவனும் கூட்டத்தோடு பின்னால் நடந்தான். கொஞ்சதூரம் சென்றதும் அனுமார் ஒரு தொங்கிய வாழைத்தாரிலிருந்து கடையில் பழங்களைப் பறித்து எட்டியவர்களுக்கு எல்லாம் கொடுத்தார். இவன் பின்னால் ... பக்கத்தில்



TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



29) கூர்மபுராணம் என்ற நூலை இயற்றியவர்

(அ) செண்பகப் பாண்டியன் (ஆ) வரகுணப் பாண்டியன்

(இ) அதிவீரராம பாண்டியர் (ஈ) சற்குணப் பாண்டியன்

**விடை: (இ) அதிவீரராம பாண்டியர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 175**

175

6. அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல்,
7. அவர் அருகிலேயே அமர்ந்துகொள்ளுதல்,
8. அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல்,
9. அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

**பகுபத உறுப்பிலக்கணம்**

உரைத்த - உரை + த் + த் + அ
உரை- பகுதி
த்- சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

வருக-வா (வரு) + க
வா- பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்)
க - வியங்கோள் வினைமுற்று விகுதி
(த.தி.தேர்வு - அக் – 2022)

**நூல் குறிப்பு**



❖ காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம். இந்நூல் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிவுகள், மறுவாழ்வில் (த.தி.தேர்வு - அக் – 2022) அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது. 'இல்லொழுக்கங் கூறிய' பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

❖ முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம். இவரின் மற்றொரு நூலான வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது. சீவலமாறன் என்ற பட்டப்பெயரும் இவருக்கும் உண்டு. நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் (த.தி.தேர்வு - அக் – 2022) ஆகியனவும் இவர் இயற்றிய நூல்கள்.

Q – 29/2023

**நினைவில் நிறுத்துவோம்**



"ஒப்புடன் முகம் மலர்ந்தே
உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும்
உண்பதே அமிர்தம் ஆகும்
முப்பழமொடு பால் அன்னம்
முகம் கடுத்து இடுவாராயின்
- (த.தி.தே - அக் – 22)
கப்பிய பிசியி னோடு
கடுப்பசி ஆகும் தானே"
- விவேகசிந்தாமணி. (4)

30) கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் காணும் நயங்களைத் தேர்க.

(அ) எதுகை, இயைபு (ஆ) மோனை, இயைபு

(இ) இயைபு, முரண் (ஈ) மோனை, எதுகை

**விடை: (ஈ) மோனை, எதுகை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 180**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

180

**18. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர்.**

பொருள்: சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்.

**நன்றிஇல் செல்வம் (101)**

**19. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய கோடிஉண் டாயினும் இல்.**

பொருள்: பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்கா மலும் இருப்பவர் அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

**20. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள் நச்சு மரம்பழுத் தற்று.**

பொருள்: பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும். அணி: உவமை அணி

**1. குறளின் கருத்தினை விளக்கும் படங்கள்**



முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்



வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்..

"ஐயா... நீங்க....."

"வெளியூருப்பா... வண்டி நின்னு போச்சு...!"

"அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு ஊரு ரொம்ப தூரம்.. வேற வண்டியும் வராது..."

அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்.. சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு.... நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப.... அப்பா சொன்னார். தம்பி... அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு.... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில.. கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க... பாவம் படிச்சவரா இருக்காரு... சூழ்நிலை புரியாம... வரமாட்டேன்னு சொன்னாரு இப்ப வேதனைப்பட்டாரே....

**அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலா தார். (சரியான விடை)**

**ஆ) பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்.**

**இ) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித் தாழாது உஞற்று பவர்.**

31) சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது மற்றும் சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது பெற்று பெண்குலத்திற்கு பெருமை சேர்த்தவர்

(அ) ராஜம் கிருஷ்ணன் (ஆ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

(இ) எம்.எஸ். சுப்புலட்சுமி (ஈ) பாலசரஸ்வதி

**விடை: (ஆ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 127**

www.Padasalai.Net www.CBSEtips.in



127

## 7.4. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்:

- கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் மதுரையின் முதல் பட்டதாரிப்பெண்.
- இந்திய அரசின் தாமரைத் திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்றுப் பெண்குலத்திற்குப் பெருமை சேர்த்தவர்.



- நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றவர்.
- கல்லூரிப் பருவத்தில் காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டு அவரது சர்வோதய இயக்கத்தில் களப்பணி ஆற்றியவர்.
- ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கேற்றவர்.
- நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தவர்.
- "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" (LAND FOR THE TILLER'S FREEDOM - LAFTI) தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்.
- "உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்" என்பதுதான் இவர் மக்களுக்குச் சொல்ல விரும்புவது.
- காந்தியடிகள் மற்றும் வினோபாபாவேயுடன் பணியாற்றியவர்.
- இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு சுனாமி வந்து ஊரெல்லாம் பாதிப்பு அடைந்தபோது குழுவாகச் சென்று மீட்பு பணி செய்தனர்.
- பத்து மகளிரைச் சேர்த்து "களஞ்சியம்" என்னும் பெயரில் மகளிர் குழுவை ஆரம்பித்தார். இன்று பல மாநிலங்களில் இக்குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.
- முப்பது ஆண்டுகளாக அயராது இப்பணியைச் செய்து வருகிறார்.
- நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றவர்.



- தமிழக அரசின் ஔவை விருதையும் தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார்.
- அண்மையில் "தாமரைத்திரு விருதையும்" பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

### பயிற்சி வினாக்கள்:

1. ஐ.நா. அவையில் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர் ____

அ) எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

2. 'காற்றினிலே வரும் கீதமாய்' மக்கள் மனத்தில்

32) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் - இக்குறட்பா இடம்பெற்றுள்ள அதிகாரம்

(அ) மெய் உணர்தல் (ஆ) பெரியாரைத் துணைக்கோடல்

(இ) ஆள்வினை உடைமை (ஈ) குடிசெயல் வகை

**விடை: (இ) ஆள்வினை உடைமை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 180**

TEACHER'S CARE ACADEMY

## ஆள்வினை உடைமை



Q - 32/2023

18. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

பொருள்: சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்.

### நன்றிஇல் செல்வம் (101)

Q-30 2023

19. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

பொருள்: பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

20. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பொருள்: பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும். அணி: உவமை அணி

1. குறளின் கருத்தினை விளக்கும் படங்கள்



முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்..

"ஐயா... நீங்க....."

"வெளியூருப்பா... வண்டி நின்னு போச்சு...!"

"அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு ஊரு ரொம்ப தூரம்.. வேற வண்டியும் வராது..."

அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்.. சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு.... நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப.... அப்பா சொன்னார். தம்பி... அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு.... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில.. கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க... பாவம் படிச்சவரா இருக்காரு... சூழ்நிலை புரியாம... வரமாட்டேன்னு சொன்னாரு இப்ப வேதனைப்பட்டாரே....

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார். (சரியான விடை)

ஆ) பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

33) பொருத்தி விடை தேர்க

1) படாஅ - i) சொல்லிசை அளபெடை

2) உரனசைஇ - ii) ஒற்றளபெடை

3) எடுப்பதூஉம் - iii) செய்யுளிசை அளபெடை

4) எஃஃகிலங்கிய - iv) இன்னிசை அளபெடை

| | |
|---|---|
| (அ) 3, 2, 4, 1 | (ஆ) 2, 1, 3, 4 |
| (இ) 3, 1, 4, 2 | (ஈ) 4, 3, 2, 1 |

**விடை: (இ) 3, 1, 4, 2**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 61**

TEACHER'S CARE ACADEMY

# 2. இலக்கணப்பகுதி

## 2. 1. எழுத்து, சொல்

### எழுத்து

**சார்பெழுத்து**

- உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய **பத்தும் சார்பெழுத்துகள்** ஆகும்.
- ❖ அவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகிய இரண்டு அளபெடைகள் குறித்து இங்குக் காண்போம்.

**அளபெடுத்தல் - நீண்டு ஒலித்தல்.**

- ✱ பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது. எ.கா. அம்மாஅ, தம்பீஇ

**சார்பெழுத்து**
பத்து வகைப்படும்

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

### 1. உயிரளபெடை

- ✓ செய்யுளில் ஓசை குறையும் போது, அதனை நிறைவு செய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது **உயிரளபெடை** எனப்படும்.

**உயிரளபெடை மூன்று வகைப்படும்**
- செய்யுளிசை அளபெடை
- இன்னிசை அளபெடை
- சொல்லிசை அளபெடை

#### அ) செய்யுளிசை அளபெடை

- ✱ செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் **செய்யுளிசை அளபெடை** என்போம்.
- ✱ இதனை **இசைநிறை அளபெடை** என்றும் கூறுவர்.

எ.கா:
ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
உறாஅர்க் குறுநோய் – மொழியிடை
நல்ல படாஅ பறை - மொழியிறுதி

#### ஆ) இன்னிசை அளபெடை

- ❖ செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

எ.கா - கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

#### இ) சொல்லிசை அளபெடை

- ❖ செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும். எ.கா - உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.
- ❖ நசை - விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை எச்சமாக மாறியது.

### 2. ஒற்றளபெடை

- ❖ செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது **ஒற்றளபெடை** ஆகும்.

எ.கா - எங்ங்கிறைவன்
எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்

### பயிற்சி வினாக்கள்

1. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? | அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 12

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net

34) கூற்று - 1: கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது

கூற்று - 2: கருந்துகள் என்பது உண்மையில் கருப்பாக இருக்கும்.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

**விடை: (அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 113**

113

உள்ளது. இது **2009ஆம் ஆண்டு** அமைக்கப்பட்டது. சரி அனைவரும் உள்ளே சென்று இருக்கையில் அமருங்கள்.

(இயக்குநர் தனக்குரிய இடத்தில் அமர்ந்து கொள்கிறார். கோள வடிவமான அவ்வரங்கின் மேல் உள்ள அரைவட்ட வானத்திரை, **செயற்கை வானமாக** விரிகிறது.)

விண்வெளியில் உள்ள **கோள்களின் இயக்கம்** குறித்தான காணொலி சிறிது நேரம் திரையில் வருகிறது. அண்டவெளியின் காலம் குறித்தான விளக்கம் தொடங்குவதற்கு முன் திரையில், **சக்கர நாற்காலியில் அமர்ந்துள்ள ஒருவரின்** படம் தெரிகிறது. அரங்கில் முழு அமைதி. இயக்குநரின் கணீரென்ற குரல் பின்னணியில் விளக்கமளிக்கிறது.

**இயக்குநர்:** இவரை உங்களுக்குத் தெரிகிறதா?

மாணவர்கள் உற்றுப் பார்க்கின்றனர். தலை வலது பக்கம் சாய்ந்திருக்கிறது; கீழிருக்கும் சில பற்கள் மேல் உதட்டை அழுத்தி வெளிவந்து நிற்கின்றன. அவர் அமர்ந்திருப்பது



கணிப்பொறியுடன் சேர்ந்த சக்கர நாற்காலி. அவரின் கன்னத்தின் தசைகள் சிறிது அசைகின்றன. அவரது படத்தின் கீழ்,

**"மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக் கூர்மை"**

**"அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே"**

என்ற தொடர்கள் ஒவ்வோர் எழுத்தாகத் தோன்றுகின்றன. மாணவர்கள் "ஸ்டீபன் ஹாக்கிங், ஸ்டீபன் ஹாக்கிங்" என்று முணுமுணுக்கிறார்கள்.

**இயக்குநர்:** ஆம்! நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர் **தற்காலத்தின் ஐன்ஸ்டைன்** என்று புகழப்படும் ஸ்டீபன் ஹாக்கிங்தான்.

**மாணவர்:** (திரையில் ஸ்டீபன் ஹாக்கிங்கின் தோற்றத்தைப் பார்த்து) இவர் ஏன் இவ்வாறு ஆனார்?

**இயக்குநர்:** இங்கிலாந்தின் மருத்துவமனை ஒன்றில் **1963ஆம் ஆண்டு 21 வயது இளைஞர்** அனுமதிக்கப்பட்டார். மருத்துவத்திற்குப் பின் அவர் இன்னும் சில திங்களே உயிர் வாழ்வார் என்றும் விரைவில் இறந்துவிடுவார் என்றும் மருத்துவர்கள் அறிக்கை தந்தனர். **பக்கவாதம் (Amyotrophic lateral Scleroses) என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன்** அவர், மருத்துவ உலகமே மிரண்டுபோகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார். **1985இல் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும்** திறனை இழந்தார். இறுதியாக எஞ்சியது கன்னத்தின் தசையசைவும் கண்சிமிட்டலும் மட்டுமே. உடலில் மீதமுள்ள அத்தனை உறுப்புகளும் செயலிழந்துவிட்டன. **கன்னத் தசையசைவு மூலம் தன் கருத்தைக் கணினியில் தட்டச்சுசெய்து** வெளிப்படுத்தினார். **அவரின் ஆய்வுகளுக்குத் துணையாகச் செயற்கை நுண்ணறிவுக் கணினி** செயல்பட்டது.

**மாணவர்:** அவரின் ஆராய்ச்சி முடிவுகள் எவ்வாறு அமைந்தன ஐயா?

**இயக்குநர்:** (1) கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் **தப்பித்து வெளியே வரமுடியாது.**

(2) கருந்துளையின் ஈர்ப்பு **எல்லையிலிருந்து (Event Horizon)** கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(3) கருந்துளை உண்மையிலேயே **கருப்பாக இருப்பதில்லை.** கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும்.

ஸ்டீபன் ஹாக்கிங்கின் இந்த ஆராய்ச்சி முடிவு **'ஹாக்கிங் கதிர்வீச்சு'** என்று அழைக்கப்படுகிறது. இது கருந்துளை பற்றிய முந்தைய கருத்துகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங், **கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல்** என்று நிறுவினார்.

**மாணவர்:** யாரெல்லாம் ஸ்டீபன் ஹாக்கிங்கின் அறிவியல் முன்னோடிகளாக இருந்தனர்?

**இயக்குநர்:** **ஐன்ஸ்டைன், நியூட்டன்** முதலானோர் ஸ்டீபன் ஹாக்கிங்கின் முன்னோடிகள். இவர், அவர்களுக்கு நிகராக மதிக்கப்படுகிறார். நியூட்டன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வகித்த கணக்கியல் துறையின் **'லூகாசியன் பேராசிரியர்'** என்ற மதிப்பு மிகுந்த பதவியை ஸ்டீபன் ஹாக்கிங்கும் வகித்திருக்கிறார். ஐன்ஸ்டைன் **ஈர்ப்பலைகள்** குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னார். அவர் காலத்தில் $E = MC^2$ எனும் கோட்பாட்டை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 100 ஆண்டுகளுக்குப் பின் ஈர்ப்பலைகள் இருப்பதை உலகம் கண்டுகொண்டது. கருந்துளை குறித்த தன்னுடைய ஆய்வை ஐன்ஸ்டைன் போல, கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன்

Q-34 Q-34 2023

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net

35) கூலவீதி என்பது

(அ) குப்பைகள் நிறைந்த வீதி (ஆ) மலர்கள் நிறைந்த வீதி

(இ) தானியங்கள் நிறைந்த வீதி (ஈ) மக்கள் கூட்டமாக வாழும் வீதி

**விடை: (இ) தானியங்கள் நிறைந்த வீதி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 206**

206

- மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.
- மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

**சொல்லும் பொருளும்**

சுண்ணம் – நறுமணப்பொடி,
காருகர் – நெய்பவர் (சாலியர்),
தூசு – பட்டு, துகிர் – பவளம்,
வெறுக்கை – செல்வம், நொடை – விலை,
பாசவர் – வெற்றிலை விற்போர்,
ஓசுநர் – எண்ணெய் விற்போர்,
கண்ணுள் வினைஞர் – ஓவியர்,
மண்ணீட்டாளர் – சிற்பி, கிழி – துணி.
- த. தி. தேர்வு -அக்-2022

- இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர்.
- பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.
- இவ்வாறாகப் பழுதின்றிக் கைத் தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைச் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.
- இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன.
- இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு
"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா - த. தி. தேர்வு -அக்-2022
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்" - திருத்தணிகையுலா.

**இலக்கணக் குறிப்பு**

வண்ணமும் சுண்ணமும் – எண்ணும்மை
பயில்தொழில் – வினைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு – பகுதி
இ(ன்) – இ றந்த கால இடைநிலை
'ன்' புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி - த. தி. தே -அக்-2022

**உரைப்பாட்டு மடை**
**(உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)**

உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப் பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு. வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

**நூல் வெளி**

- சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பாடப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.
- இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது; மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.
- இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

36) பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளைத் தேர்க

1) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகும்.

2) வினைத்தொகையில் வல்லினம் மிகும்.

3) பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.

4) விளித்தொடரில் வல்லினம் மிகாது.

(அ) 1 மற்றும் 4 (ஆ) 3 மற்றும் 4

(இ) 3 மற்றும் 4 (ஈ) 1 மற்றும் 2

**விடை: (இ) 3 மற்றும் 4**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA - Material Reference Book**

**2.26. வல்லினம் மிகா இடங்கள்**

- தமிழைப் பிழையின்றி பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணமாகும்.
- அவ்வாறு பிழையின்றி எழுத உதவுவதுதான் ஒற்றுப் பிழையை நீக்கி எழுதுவதாகும்.
- இரண்டு சொற்கள் சேரும்போது வரும்மொழியில் க், ச், ட், த், ப், ற் என்ற வல்லின எழுத்துக்களில் க், ச், த், ப் ஆகிய நான்கு எழுத்துக்களில் ஏதேனும் ஒரு எழுத்து வரும்போது சில இடங்களில் வல்லெழுத்துக்கள் மிகுந்து வரும். சில இடங்களில் மிகுந்து வராது.
- அவ்வாறு வல்லின எழுத்து மிகாமல் வருவதைத்தான் வல்லினம் மிகா இடங்கள் என்று கூறுகிறோம்.

**வல்லினம் மிகா இடங்கள்:**

அது செய்

இது காண்

- அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

எது கண்டாய்?

எவை தவறுகள்?

- **இவ்வினாக்களின் பின் வல்லினம் மிகாது.**

குதிரை தாண்டியது.

கிளி பேசும்.

- **எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.** Q-36 / 2023

அண்ணனோடு போ.

எனது சட்டை.

- **மூன்றாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது**

தந்தையே பாருங்கள்.

மகளே தா.

- **விளித் தொடர்களில் வல்லினம் மிகாது.** ✓ Q-36 / 2023

வந்த சிரிப்பு

பார்த்த பையன்

- **பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.** ✓ Q-36 / 2023

நாடு கண்டான்.

கூடு கட்டு

- **இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.**

வரும்படி சொன்னார்.

பெறும்படி கூறினார்.

- **படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.**

வாழ்க தமிழ்

வருக தலைவா!

➢ **வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.**

குடிதண்ணீர்

வளர்பிறை

திருவளர்செல்வன்

➢ **வினைத்தொகையில் வல்லினம் மிகாது.** Q-36 / 2023

ஒரு புத்தகம்

மூன்று கோடி

➢ எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

தாய்தந்தை

இரவுபகல்

➢ உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

அன்று சொன்னார்.

என்று தருவார்.

அவராவது தருவதாவது

யாரடா சொல்,

ஏனடி செல்கிறாய்?

கம்பரைப்போன்ற கவிஞர் யார்?

37) “காவடியாட்டம்” - இச்சொல்லில் கா என்னும் வேர்ச்சொல் தரும் பொருள்

(அ) பாரந்தாங்கும் கோல் (ஆ) காவல் (இ) சோலை (ஈ) கருணை

**விடை: (அ) பாரந்தாங்கும் கோல்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 38**

38

❖ **(ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல்) ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக் காட்டுவர்.**

### 1.6.3. காவடியாட்டம் Q-37/2023



- கா-என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்
- இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.
- மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர்.
- அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர்.
- மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர்.
- காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர்.
- இலங்கை, மலேசியா உட்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

### 1.6.4. ஒயிலாட்டம்

➢ ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம்.

➢ உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறி மாறி, மனத்தை ஈர்க்கும். Q-91/2023



➢ இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

➢ ஒயிலாட்டத்தை இருவரிசையாக நின்றும் ஆடுகின்றனர்.

➢ ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகிநின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது.

➢ ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு.

➢ இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. (த.தி. தேர்வு. அக்டோபர் 2022)

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

TEACHER'S CARE PUBLICATION
TCA
KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

**தமிழ்மொழி இலக்கியத்
திறனறித் தேர்வை
உறுதியாய் எழுதுவோம்!
தமிழக அரசு வழங்கும்
ஊக்கத் தொகை
36,000 வெல்வோம்!**

11




www.Padasalai.Net

**1,500
மாணவர்களுக்கு
தலா
36,000 ரூபாய்**

தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வு
சிறப்புக் கையேட்டில்
வெறுந்தாளும்–மையும் மட்டும்
நிரம்பியிருக்க வில்லை!
ஆனால் உங்கள் வெற்றிக்குப்பின்
அரசு வழங்கும் பணத்தாள்களும்!
உன் சாதனையின் அடையாளமாய்
உங்கள் பள்ளியின் பெயர் பலகையில்
உன் பெயர் நிச்சயம் நிரம்பியிருக்கும்!

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

38) கீழ்க்காணும் படத்திற்கு பொருத்தமான குறளைத் தேர்க



(அ) வகையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்

(ஆ) குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றும்
குன்றி அனைய செயின்

(இ) கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் எந்தல் இனிது

(ஈ) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை

**விடை: (ஈ) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 199**

199

பொருள்: மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.

**8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை.**

Q– 38/2023

பொருள்: தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

அணி: உவமை அணி

**9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.**

பொருள்: ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

கூடாநட்பு (83)

**10. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து.**

பொருள்: பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர்அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

Q– 95/2023

பகைமாட்சி (87)

**14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**

பொருள்: குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

நல்குரவு (105)

**15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

பொருள்: ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும். அணி: சொற்பொருள் பின்வருநிலை அணி

இரவு (106)

**16. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

பொருள்: தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

**17. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்**
**உள்ளுள் உவப்ப துடைத்து.**

பொருள்: இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



39) பொருந்தாத ஒன்றனைத் தேர்க

(அ) கேட்க வேண்டிய பாடல் (ஆ) சொல்லத்தக்க செய்தி

(இ) ஆடிப்பாடி மகிழ்ந்தனர் (ஈ) எழுந்து நின்ற மாணவன்

**விடை: (இ) ஆடிப்பாடி மகிழ்ந்தனர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 155**

155



**4.2.5. இயல் 5 - தொகுப்பு**

நினைவில் நிறுத்துவோம்:

இ — 39/2023

வேர்ச்சொல் கொண்டு தொடரை உருவாக்கு:

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித்தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | சொல்லிய அம்மா | சொல்லிச் சென்றார் | அம்மா சொல்லாதே | கதையைச் சொன்னார் |
| தா | அம்மா தந்தார் | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | தருவதற்காக வந்தான் |
| பார் | துளிர் பார்த்தாள் | பார்த்த குழந்தை | பார்த்துச் சிரித்தாள் | அங்கே பார் | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | வந்து பார் | குழந்தையே வா! | வாங்கியதைக் கொடு |

40) பிரெஞ்சு மொழியில் வந்த காந்தியின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழாக்கம் செய்தவர்

(அ) கண. முத்தையா (ஆ) குப்புசாமி

(இ) அசோகமித்ரன் (ஈ) ஜெயகாந்தன்

**விடை: (ஈ) ஜெயகாந்தன்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 56**

56

- 'எதற்காக எழுதுகிறேன்?' என்று தான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப்படவும் திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.
- மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர்.

ஜெயகாந்தனைப்பற்றி (ஈ)



அசோகமித்திரன்

✓ "ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்." - அசோகமித்திரன்

> இவருடைய படைப்புப் புதையலிலிருந்து தொகுத்து ஜெயகாந்தம் என்னும் நினைவு இதழ் உருவாக்கப்பட்டது.

✓ "கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம் சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை" வாசகர்களின் கருத்து - தீபம் இதழ் -1967.



கா.செல்லப்பன்

✓ நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் இவைகள்தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர். - என்று கூறுகிறார். -கா.செல்லப்பன்

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

| சிறுகதைத் தொகுப்பு | குறும்புதினங்கள் | புதினங்கள் |
|---|---|---|
| குருபீடம் | பிரளயம் | பாரீசுக்குப்போ! |
| யுகசந்தி | கைவிலங்கு | சுந்தர காண்டம் |
| ஒரு பிடி சோறு | ரிஷிமூலம் | உன்னைப் போல் ஒருவன் |
| உண்மை சுடும் | பிரம்ம உபதேசம் | கங்கை எங்கே போகிறாள் |
| இனிப்பும் கரிப்பும் | யாருக்காக அழுதான்? | ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் |
| தேவன் வருவாரா | கருணையினால் அல்ல | இன்னும் ஒரு பெண்ணின் கதை |
| புதிய வார்ப்புகள் | சினிமாவுக்குப் போன சித்தாளு | ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் |

Q-40|2023

### 1.9.1. மொழி பெயர்ப்புகள்

- வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்)
- ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)
- ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்.

**பாரீசுக்குப்போ ... புதினத்தின் முன்னுரை**



"ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்... ஓர் எழுத்தாளன் ஆத்ம சக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966)

**இன்னுமொரு முகம் (கவிதை)**

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை இது

"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்

திரைப்படமான படைப்புகள்



41) பொருந்தாத இணையைத் தேர்க

(அ) வயிரியம் - கூத்தர் (ஆ) படுகர் - பாணர்

(இ) அசைஇ - இளைப்பாறி (ஈ) ஆரி - அருமை

**விடை: (ஆ) படுகர் - பாணர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 177**

177

**பொருள்**



- நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவுபெறுவதற்கு வழிப்படுத்துதல்.
- பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள் எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்.
- சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையங்கள்.
- அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்' என்று சொல்லுங்கள்.
- அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள்.
- உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.
- நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர்.
- அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

**சொல்லும் பொருளும்**

| | | |
|---|---|---|
| அசைஇ - இளைப்பாறி | வயிரியம் - கூத்தர் | வேவை - வெந்தது |
| அல்கி - தங்கி | இறடி - தினை | பொம்மல் - சோறு |
| கடும்பு - சுற்றம் | நரலும் - ஒலிக்கும் | |
| ஆரி - அருமை | படுகர் - பள்ளம் | |

Q-41 Q-41 Q-41 Q-41|2023

**பகுபத உறுப்பிலக்கணம்**

மலைந்து – மலை + த்(ந்) + த் + உ
மலை – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

பொழிந்த – பொழி + த்(ந்) + த் + அ
பொழி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

42) "இன்மை புகுத்தி விடும்" - இவ்வடிகளுக்குப் பொருந்தும் வாய்பாடு வரிசை

(அ) தேமா புளிமா மலர் (ஆ) தேமா புளிமா காசு

(இ) புளிமா கூவிளம் நாள் (ஈ) புளிமா தேமா பிறப்பு

**விடை: (அ) தேமா புளிமா மலர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 91**

91

| | | |
|---|---|---|
| சீர் | ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர் வெண்சீர் மட்டுமே பயின்று வரும். | ஈரசைச் சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும். |
| தளை | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே பயின்று வரும். | ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். |
| அடி | இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்). | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். |
| முடிப்பு | ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும். | ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு. |

- குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

**அலகிடுதல்**

- செய்யுளின் சீரை அசை பிரித்து நேரசை, நிரையசை என்று பகுத்துக் காண்பதை முன் வகுப்பில் அறிந்துள்ளோம்.
- அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

**அசையும் வாய்ப்பாடும்**

| ஓரசைச் சீர் | ஈரசைச் சீர் | மூவசைச் சீர் | |
|---|---|---|---|
| நேர் - நாள் | நேர் நேர் - தேமா | நேர் நேர் நேர் - தேமாங்காய் | நேர் நேர் நிரை - தேமாங்கனி |
| நிரை - மலர் | நிரை நேர் - புளிமா | நிரை நேர் நேர் - புளிமாங்காய் | நிரை நேர் நிரை - புளிமாங்கனி |
| நேர்பு - காசு | நிரை நிரை - கருவிளம் | நிரை நிரை நேர் - கருவிளங்காய் | நிரை நிரை நிரை - கருவிளங்கனி |
| நிரைபு - பிறப்பு | நேர் நிரை - கூவிளம் | நேர் நிரை நேர் - கூவிளங்காய் | நேர் நிரை நிரை - கூவிளங்கனி |

43) "தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே" என்று பாடியவர்

(அ) பட்டினத்தார் (ஆ) வாணிதாசன்

(இ) அப்துல் ரகுமான் (ஈ) கா. நமச்சிவாயர்

**விடை: (ஈ) கா. நமச்சிவாயர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 148**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in





**இலக்கிய நயம் பாராட்டுக:**

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

- கா. நமச்சிவாயர்

**சான்றோர் வளர் தமிழ்:**

**எதுகை:**

தேனினும் - ஊனினும்
வானினும் – தானனி - அடி எதுகை
தேனினும் – இனியன் - சீர் எதுகை
அணி: உயர்வு நவிற்சி அணி

**மோனை:**

தழைத்தினி – தண்டமிழ்
ஒளிர்வுறும் – ஒண்டமிழ்

❖ குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப், பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

| மாணவர்கள் செல்லும் வழி | |
|---|---|
| இன்சொல் வழி | தீய சொல் வழி |
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

## 4.2.2. இயல் 2 - தொகுப்பு

**நினைவில் நிறுத்துவோம்:**

அந்த இடம் காற்றே! வா
உன்னைப் பாடாமல் இருக்க முடியாது
ஏனெனில் பாட்டின் மூல ஊற்றே நீதான்
.............................
பொய்கையிடம் போனால்
குளிர்ந்து போகிறாய்
பூக்களைத் தொட்டால்
நறுமணத்தோடு வருகிறாய்
புல்லாங்குழலில் புகுந்தால்
இசையாகிவிடுகிறாய்
எங்களிடம் வந்தால் மட்டுமே
அழுக்காகி விடுகிறாய்
மரங்களின் ஊமை நாவுகள் உன்னிடம் மட்டுமே
பேசுகின்றன-



கடல் அலைகள்
உன்னோடு மட்டுமே குதித்துக்
கும்மாளமிடுகின்றன
வயலின் பச்சைப் பயிர்கள்
நீ வந்தால் மட்டுமே ஆனந்த நடனம்
ஆடுகின்றன
நீ என்ன குதூகலமா?
கொண்டாட்டமா? கோலாகலமா?
நெடுநாட்களாகவே எனக்கொரு சந்தேகம்
விளக்குகளிலிருந்து பறிக்கும் சுடர்களை
பூக்களிலிருந்து திருடும் நறுமணத்தை
வீணையிலிருந்து கவர்ந்த இசையை
எங்கே கொண்டு போய்
ஒளித்து வைக்கிறாய்?

-அப்துல் ரகுமான்.

44) கவிஞர் உமாமகேஸ்வரி படைப்புகளில் அல்லாத ஒன்று

(அ) நட்சத்திரங்களின் நடுவே (ஆ) கற்பாவை

(இ) வெறும்பொழுது (ஈ) மீட்சி விண்ணப்பம்

**விடை: (ஈ) மீட்சி விண்ணப்பம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 191**

TEACHER'S CARE ACADEMY

## பயிற்சி வினாக்கள்

1. 'சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்"
- இப்பாடல் வரிகளின் ஆசிரியர்?
(அ) உமா மகேஸ்வரி
(ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார்
(ஈ) பரஞ்சோதி முனிவர்

2. "ஒருவேளை, என் மனமே நூலாகும் நுண்மையுற்றாலொழிய"
- இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல்?
(அ) முல்லைப்பாட்டு
(ஆ) காசிக்காண்டம்
(இ) நீதி வெண்பா (ஈ) பூத்தொடுத்தல்

3. கவிஞர் உமா மகேஸ்வரி எழுதாத கவிதைத் தொகுப்பு ______
(அ) நட்சத்திரங்களின் நடுவே
(ஆ) வெறும் பொழுது
(இ) கனிச்சாறு
(ஈ) கற்பாவை

4. "சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள். இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும்"
- இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?
(அ) முல்லைப்பாட்டு (ஆ) காசிக்காண்டம்
(இ) நீதி வெண்பா (ஈ) பூத்தொடுத்தல்

5. "தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்"
- இப்பாடல் வரிகளின் ஆசிரியர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

6. "என் மனமே நூலாகும் நுண்மையுற்றாலொழிய"
- இப்பாடல் வரிகளின் ஆசிரியர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

7. நட்சத்திரங்களின் நடுவே என்னும் கவிதைத் தொகுப்பை இயற்றியவர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

8. கவிஞர் உமா மகேஸ்வரி வாழ்ந்து வரும் ஊர்?
(அ) ஆண்டிப்பட்டி (ஆ) அரசம்பட்டி
(இ) காளிப்பட்டி (ஈ) முத்தம்பட்டி

9. கற்பாவை என்னும் கவிதைத் தொகுப்பை இயற்றியவர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

10. "இந்தப் பூவை எப்படித் தொடுக்க நான்" – என்று கூறியவர்?
(அ) உமா மகேஸ்வரி (ஆ) பாரதியார்
(இ) பெருஞ்சித்திரனார் (ஈ) பரஞ்சோதி முனிவர்

## 5. 6. பூத்தொடுத்தல் – உமா மகேஸ்வரி



பாடல்

இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?
சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்.
இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்.
தளரப் பிணைத்தால்
மலர்கள் தரையில் நழுவும்.

வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும்
இந்தப் பூவை
எப்படித் தொடுக்க நான்-
ஒருவேளை,
என் மனமே நூலாகும்
நுண்மையுற்றாலொழிய



### நூல் வெளி

✓ கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர்.
✓ தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் வாழ்ந்து வருகிறார். இவர், நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்.
✓ கவிதை, சிறுகதை , புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

45) "தணிந்தது" - இப்பகுபதத்தில் இடம் பெற்றுள்ள சாரியையைத் தேர்க

(அ) து (ஆ) த்
(இ) தணி (ஈ) அ

**விடை: (ஈ) அ**

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 189**

189

- இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது.

**பகுபத உறுப்பிலக்கணம்**

தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து
தணி – பகுதி, த் – சந்தி
த்(ந்) – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – சாரியை,
து – படர்க்கைவினைமுற்று விகுதி

Q – 45/2023

**இலக்கணக் குறிப்பு**

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்
காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை

**சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்**

- ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்.
- களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார் அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.
- உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார்.
- அப்பாடல் - "மாசற விசித்த வார்புறு வள்பின் ..." புறம் 50 Q – 5/2023

**பயிற்சி வினாக்கள்**

1. "நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம் தண்ணிய அமுதால் எங்கள் கோபத் தீத் தணிந்தது என்னா"
- இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?
(அ) முல்லைப்பாட்டு (ஆ) நீதி வெண்பா
(இ) திருவிளையாடற் புராணம்
(ஈ) பெருமாள் திருமொழி

7. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் புராணம் எத்தனை காண்டங்களை உடையது?
(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

8. திருவிளையாடற் புராணத்தில் இல்லாத காண்டம் எது?
(அ) இலங்கா காண்டம் (ஆ) கூடற் காண்டம்

46) "வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது" என்று கூறியவர்

(அ) ஐன்ஸ்டைன் (ஆ) ஸ்டீபன் ஹாக்கிங்

(இ) தாமஸ் ஆல்வா எடிசன் (ஈ) ஐசக் நியூட்டன்

**விடை: (ஆ) ஸ்டீபன் ஹாக்கிங்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 114**

www.Padasalai.Net TEACHER'S



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





இயக்கத்தோடு ஒப்பிட்டு ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்துகொண்டது.

**மாணவர்:** உலகம் புரிந்துகொண்டது என்கிறீர்களே, பொதுமக்கள் எல்லோரும் அதை விளங்கிக் கொண்டார்களா?

**இயக்குநர்:** ஆம். பெரும்பாலும் அறிவியல் உண்மைகளை அறிவியல் அறிஞர்கள்தான் புரிந்துகொள்வார்கள். ஆனால் ஸ்டீபன் ஹாக்கிங், தன் கோட்பாடுகளைப் பொதுமக்களுக்கும் புரியும் வகையில் எளிமையாக விளக்கினார்.

**மாணவர்:** விருதுகளைப் பெருமைப்படுத்திய நாயகர்கள் ஒரு சிலரே! அந்த வகையில் ஸ்டீபன் ஹாக்கிங் என்னென்ன விருதுகளைப் பெற்றார்?

**இயக்குநர்:** அறிவியல் கோட்பாடுகளை எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் சொன்ன அவரின் முயற்சிக்குக் கிடைத்த விருதுகள் பல.

1. அமெரிக்காவின் உயரிய விருதான, அதிபர் விருது (Presidential medal of Freedom)
2. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது
3. உல்ஃப் விருது (Wolf Foundation Prize)
4. காப்ளி பதக்கம் (Copley Medal
5. அடிப்படை இயற்பியல் பரிசு (Fundamental Physics Prize) - என அவர் பெற்ற விருதுகள் அவரால் பெருமையடைந்தன.

**மாணவர்:** அவரின் வாழ்க்கைப் பயணத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் என்று எவற்றையெல்லாம் கூற முடியும்?

**இயக்குநர் :** 2012 இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் 'தொடக்க விழா நாயகர்' என்ற சிறப்பைப் பெற்றார். 'அடுத்த தலைமுறை (The next generation), பெருவெடிப்புக் கோட்பாடு (The Bigbang Theory) உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் பங்கேற்றார். சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். போயிங் 727 என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.

**மாணவர்:** ஸ்டீபன் ஹாக்கிங் வியக்கத்தக்க உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் ஸ்டீபன்.

**இயக்குநர்:** அறிவியல் உலகில் மட்டுமன்றி, சமூக உளவியல் அடிப்படையிலும் தன்னம்பிக்கையின் சிகரமாக விளங்கியவர் ஸ்டீபன் ஹாக்கிங். அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளைத் தகர்த்த மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங். அவரைப் பற்றிய குறும்படத்தை இப்போது திரையில் காண்போம்.

**(திரையில் விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை குறும்படம் திரையிடப்படுகிறது)**

## கற்பவை கற்றபின்...

- "அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அரிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்துக் கொள்ளப்போவதையும் உள்ளடக்கியது". **– ஐன்ஸ்டைன்**
- "வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வென். அதன் மூலம் மனித இனம் தடர வழிவகுப்பேன்." **– ஸ்டீபன் ஹாக்கிங்.**

Q-46/2023

## பயிற்சி வினாக்கள்:

1. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு?
அ) 1986 ஆ) 1987 இ) 1988 ஈ) 1989

2. தற்காலத்தின் ஐன்ஸ்டைன் என்று புகழப்படுவர்?
அ) ஸ்டீபன் ஆ) எடிசன்
இ) அப்துல்கலாம் ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்

3. விண்ணிலுள்ள கருந்துளைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டவர்?
அ) ஸ்டீபன் ஆ) எடிசன்
இ) அப்துல்கலாம் ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்

4. 'ஹாக்கிங் ...

47) "கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே"
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"
- இவ்வடிகளில் இடம்பெறும் கறங்கு என்னும் சொல்லின் பொருள்

(அ) கயிறு (ஆ) வில்
(இ) வாள் (ஈ) காற்றாடி

**விடை: (ஈ) காற்றாடி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 196**

TEACHER'S CARE ACADEMY

## யுத்த காண்டம் - கும்பகருணன் வதைப் படலம்

(உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், கும்பகருணனை எழுப்பும் காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.)

**உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்**
**இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்**
**கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே**
**உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்.**

Q-47/2023

**பாடலின் பொருள்**

➢ உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது.

➢ அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக!

Q-47

## நூல் வெளி

❖ கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி **"இராமாவதாரம்"** எனப் பெயரிட்டார்.
❖ இது **கம்பராமாயணம்** என வழங்கப்பெறுகிறது.
❖ இது ஆறு காண்டங்களை உடையது.
❖ **"கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்"** போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்.
❖ சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர்
❖ திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்.
❖ விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் என்று புகழ்பெற்றவர்.
❖ சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலைஎழுபது முதலிய நூல்களை இயற்றியவர்.

**நினைவில் நிறுத்துவோம்**

■ **உள்ளதை உணர்ந்தபடி கூறுவது கவிதை. கவிஞனின் உலகம் இட எல்லை அற்றது; கால எல்லை அற்றது; கவிஞனின் சிந்தைக்குள் உருவாகும் காட்சியைச் சொல்லைக்கொண்டு எழுப்புகிறான். அவன் கண்ட காட்சிகள் அதற்குத் துணைபுரிகின்றன; கேட்ட ஓசைகள் துணைபுரிகின்றன; விழுமியங்கள் துணைபுரிகின்றன; ஒப்புமைகள் துணைபுரிகின்றன; கலையின் உச்சம் பெறுவதுதான் அவன் எல்லையாகிறது; கம்பன் அப்படிப்பட்ட கவிஞன். அதனால்தான்' கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாரதி பெருமைப்படுகிறார்.**

48) "என்னுடன் ஊருக்கு வருவாயா?" என்ற வினாவிற்கு "வராமல் இருப்பேனா? என்று கூறுவது

(அ) இனமொழி விடை (ஆ) வினா எதிர் வினாதல் விடை

(இ) நேர் விடை (ஈ) மறை விடை

**விடை: (ஆ) வினா எதிர் வினாதல் விடை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 76**

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது. | "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா?" என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல். |

**நினைவில் நிறுத்துவோம்!**

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்
- நன்னூல்,385

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனுமெண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப"
- நன்னூல்,386

## விடைவகை

விடை எட்டு வகைப்படும்

✓ சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை.

* **வெளிப்படை விடைகள்** - சுட்டு விடை, மறை விடை, நேர் விடை ஆகிய முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனப்படும்.

வெளிப்படை விடைகள் (3) → சுட்டு விடை — மறை விடை — நேர் விடை

குறிப்பு விடைகள் → ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை

* **குறிப்பு விடைகள்** - ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்ற ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் என அழைக்கப்படும்.

* வினா : கண் வலிக்கும் என்பது____
விடை: உறுவது கூறல் விடை (த.தி.தே 22-23)

| | | |
|---|---|---|
| சுட்டு விடை | சுட்டிக் கூறும் விடை | 'கடைத்தெரு எங்குள்ளது?' என்ற வினாவிற்கு, 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல். |
| மறை விடை | மறுத்துக் கூறும் விடை | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல். |
| நேர் விடை | உடன்பட்டுக் கூறும் விடை | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் "போவேன்' என்று உடன்பட்டுக் கூறல். |
| ஏவல் விடை | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. | 'இது செய்வாயா?" என்று வினவியபோது, "நீயே செய்"என்று ஏவிக் கூறுவது. |
| வினா எதிர் வினாதல் விடை | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. | 'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது. |
| உற்றது உரைத்தல் விடை | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். | 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று உற்றதை உரைப்பது. |
| உறுவது கூறல் விடை | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். | 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது. |
| இனமொழி விடை | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். | "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது. |

www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY

49) "மகுளி" என்னும் கரிசல் வட்டார வழக்குச் சொல்லின் பொருள்

(அ) மேல் கஞ்சி (ஆ) கம்மங்கஞ்சி

(இ) சோற்றுக் கஞ்சி (ஈ) வரகுக் கஞ்சி

**விடை: (இ) சோற்றுக் கஞ்சி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 110**

110

போகணும் சொல்லு" என்று கேட்டான். "அந்தோ... அங்கெ." என்று கை காட்டினான். அங்கெ என்னொட பிரண்டு சுப்பையான்னு பேரு காலேஜ்ல படிக்கான். லீவுக்கு வந்திருக்கான். அவங்க பிஞ்சையிலேயும் அருகெடுக்கிறாங்க. அங்க போவமா?"

- "ஓ! போவமே"
- அன்னமய்யாவையும் புது ஆளையும் அவர்கள் மந்தகாசத்துடன் வரவேற்றார்கள். புதாளை அவர்கள் தங்களோடு உண்ணும்படி உபசரித்தார்கள். மணி அவர்களோடு வட்டத்தில் சேர்ந்து உட்கார்ந்தார். கையைக் கழுவிக் கொள்ளவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் அவர்களில் யாருமே சாப்பிடுவதற்கு முன்னால் கையைக் கழுவிக் கொள்வதாகத் தெரியவில்லை! அவர்களுக்கானது நமக்கு என்று அவர் கையை நீட்டினார். ஒரு உருண்டை கம்மஞ்சோற்றை அவருடைய இடதுகையில் வைத்தார்கள். இடது கையிலா என்று தயங்கினார். ஆம் இடது கையில் தான் என்று தெரிந்தது. அன்னமய்யாவும் சுப்பையாவும் அப்படித்தான் பெற்றுக்கொண்டார்கள். அவர்களைப் பார்த்து அவரும் இடதுகைச் சோற்றில் ஒரு சிறு பள்ளம் செய்து கொண்டார். அந்தப் பள்ளத்தில் துவையலை வைத்தார்கள். சிறிது சோற்றை எடுத்துத் துவையலில் பட்டதோ படலையோ என்று தொட்டு கழுகி என்று முழுங்கினார்கள். யாரோடும் யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. முழுங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்! அவர்கள் உண்ணுகிற வேகம் ஆர்வம் அனுபவிப்பு இதெல்லாம் பார்த்தபோது இந்த உணவு எவ்வளவு ருசியாக இருக்குமோ என்று பட்டது மணிக்கு. முதலில் கொஞ்சம் வெறும் சோற்றை எடுத்து ருசி பார்த்தார். அந்தச் சோற்றின் நெடி அவரை என்னவோ செய்தது! துவையலோடு சேர்த்துச் சாப்பிட்டால் கொஞ்சம் பரவாயில்லை என்பது போல் பட்டது. அந்தக் கடுமையான பசியிலும் அவரால் அரை உருண்டைக்கு மேல் சாப்பிட முடியவில்லை.
- அன்னமய்யாவும் சுப்பையாவும் ஆளுக்கு ஒரு உருண்டைதான் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்து அவர்கள் மண்ணினால் கைகளைச் சுத்தப்படுத்தியதைப் பார்த்து அவரும் அதேபோல் மண்ணை எடுத்து கைகளில் தேய்த்து சுத்தப்படுத்திக் கொண்டார்.
- அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் கொஞ்சம் ஓய்வாக உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேச ஆரம்பித்தார்கள். சுண்ணாம்பு கேட்கவும் தீப்பெட்டி கேட்கவும் சிலர் பக்கத்துத் தொகுதிகளிடம் போனார்கள். மணி திரும்பவும் படுத்து அமைதியாகக் கண்களை மூடிக்கிடந்தார்.

**வட்டார வழக்குச் சொற்கள்**

- பாச்சல் - பாத்தி
- பதனம் - கவனமாக
- நீத்துப்பாகம் - மேல்கஞ்சி
- கடிச்சு குடித்தல் - வாய்வைத்துக் குடித்தல்
- மகுளி - சோற்றுக் கஞ்சி
- வரத்துக்காரன் - புதியவன்
- சடைத்து புளித்து - சலிப்பு
- அலுக்கம் - அழுத்தம் (அணுக்கம்)
- தொலவட்டையில் - தொலைவில்

**பயிற்சி வினாக்கள்:**

1. கோபல்லபுரத்து மக்கள் என்னும் புதினத்தை இயற்றியவர்?

அ) ப.சிங்காரம் ஆ) மு. மேத்தா

இ) சு. சமுத்திரம் ஈ) கி.ராஜநாராயணன்

2. பொருத்தி விடை தேர்க

a) பாச்சல் - 1) கவனமாக

b) பதனம் - 2) பாத்தி

c) நீத்துப்பாகம் - 3) சோற்றுக்கஞ்சி

d) மகுளி - 4) மேல்கஞ்சி

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3

இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

3. பொருத்தி விடை தேர்க

a) கடிச்சு குடித்தல் - 1) சலிப்பு

b) வரத்துக்காரன் -2) வாய்வைத்துக் குடித்தல்

c) சடைத்து புளித்து - 3) அழுத்தம்

d) அலுக்கம் - 4) புதியவன்

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3

இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

4. பொருந்தாத இணைகளைத் தேர்க.

1) தொலவட்டையில் - தொலைவில்

2) மகுளி - சோற்றுக்கஞ்சி

3) பதனம் - சலிப்பு

4) அலுக்கம் - புதியவன்

அ) 2, 3 ஆ) 2, 1 இ) 4, 3 ஈ) 4, 1

50) “பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு” - என்னும் புதுக்கவிதைக்கு உரியவர்

(அ) தபுசங்கர் (ஆ) வைரமுத்து
(இ) அம்சப் பிரியா (ஈ) உமா மகேஷ்வரி

**விடை: (இ) அம்சப் பிரியா**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 20**

20

### 1.3.7. விருந்தோம்பல் இன்று



- புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர்.
- இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை.
- அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.
- இருப்பினும் திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.
- திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர்.
- அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர்.
- அந்த இல்லவிழா நாள்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.
- காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை 'திருமண ஏற்பாட்டாளர்களே' செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.
- பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.
- அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது.
- காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

* **அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.** (த. தி. தேர்வு . அக் - 2022)
* தமிழர்களின் பாரம்பரிய உணவு. வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர்.
* முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு. வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.
* அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.
* தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

### 1.3.8. ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்

- பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர்.
- மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

**'காலின் ஏழடிப் பின் சென்று"**

**- பொருநராற்றுப்படை, 166**

**உணவு ஆக்கலும் அளித்தலும் என்று பொருள் உணர்த்தும் சுவர் ஓவியம் உள்ள இடம் - சிதம்பரம்**

*"இலையை மடிப்பதற்கு முந்தைய*
*வினாடிக்கு முன்பாக*
*மறுக்க மறுக்க*
*பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்*
*நீண்டு கொண்டிருந்தது*
*பிரியங்களின் நீள் சரடு"* - அம்சப்பிரியா

இ
இ-50/2022



TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



51) வெட்சிப் பூவின் மறுபெயர்

(அ) மல்லிகைப்பூ (ஆ) இட்லிப்பூ

(இ) சங்குப்பூ (ஈ) முல்லைப்பூ

**விடை: (ஆ) இட்லிப்பூ**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 87**



## 2.7. புறப்பொருள் இலக்கணம்

- புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை.
- புறத்திணைகள், வெட்சி முதலாகப் **பன்னிரண்டு** வகைப்படும்.

**புறத்திணை பன்னிரு வகை (12)**

| | |
|---|---|
| 1) வெட்சி | 7) தும்பை |
| 2) கரந்தை | 8) வாகை |
| 3) வஞ்சி | 9) பாடாண் |
| 4) காஞ்சி | 10) பொதுவியல் |
| 5) உழிஞை | 11) கைக்கிளை |
| 6) நொச்சி | 12) பெருந்திணை |

### வெட்சித்திணை

- மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர்.
- ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது.
- ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே, **ஆநிரை கவர்தல் வெட்சித் திணை** எனப்பட்டது.



அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய வெட்சிப்பூ, இட்லிப்பூ என்று அழைக்கப்படுகிறது.

### கரந்தைத் திணை

- கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மக்கள் மீட்கச்செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர். அதனால் **கரந்தைத் திணை** என்று பெயர் பெற்றது.



சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய கரந்தை ஒரு சிறிய செடி. நறுமணம் மிக்க இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் "கொட்டைக் கரந்தை" என்றும் வாடாமல்லி என்றும் கூறுவர்.

### வஞ்சித்திணை

- மண் (நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி **வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது** வஞ்சித்திணை.



பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சி.

### காஞ்சித் திணை

- தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.



கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள காஞ்சி என்பது ஒருவகைக் குறுமரம்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



52) தமிழக வடஎல்லை மீட்புப் போராட்டத்திற்காக ம.பொ. சிவஞானத்திற்கு அழைப்பு விடுத்தவர்

(அ) ம. சங்கரலிங்கம் (ஆ) மங்கலங்கிழார்

(இ) மார்ஷல் நேசமணி (ஈ) தேவசகாயம்

**விடை: (ஆ) மங்கலங்கிழார்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 46**

46

- எதிர்பார்த்தபடியே காவலர்கள் கைது செய்தனர். வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாத கடுங்காவலும் அபராதமும் விதிக்கப்பட்டது.
- கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவல். நான் ஆறுமாதமும் கடுங்காவலை அனுபவித்தேன்.
- சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது.
- என்னளவில் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன்.
- 'சி' வகுப்புச் சோறுதான் என்றாலும், அடிக்கடி பட்டினியைச் சந்தித்தவனுக்கு அதுவே அமுதந்தானே! ஆனால், என் குடும்பத்தின் அவலநிலை நினைவுக்கு வந்தபோதெல்லாம் சிறையில் தரப்பட்ட உணவை மனநிறைவோடு உண்ண முடியாதவனானேன்.
- 1942 ஆகஸ்டு 8ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.
- அன்றுதான் 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது.



- தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது. நாடெங்கும் தலைவர்கள் கைதான நிலையில் நானும் ஆகஸ்டு 13 ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன்.
- காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரை அங்கு நான் கண்டேன்.






காமராசர்



தீரர் சத்தியமூர்த்தி



பிரகாசம்

- சில நாள்களுக்குப் பின் அங்கிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றினர். சிறைச்சாலையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் மேற்கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது.
- கோடைக்காலத்தில் 120 பாகை அளவில் வெயில் காயக்கூடிய பகுதியில் மின்சார விசிறிகூட இல்லாமல் எங்களுடைய நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது.

**1.7.7. 'தமிழகம்' பற்றிய கனவு**

- 1947, ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை நாங்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றோம்.
- இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது.
- ஆசிரியர் மங்கலங்கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றோம். Q - 52/2023
- அவர் சிறந்த தமிழறிஞர். இந்திய விடுதலைக்குப் பிறகு மொழிவாரியாகப் பிரித்தனர்.



மங்கலங்கிழார்

- அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார்.
- அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும், திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது.

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# 11-ஆம் வகுப்பு
# தமிழ்
# திறனறித் தேர்வு
## *Study Material*




## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு

### இவ்வுரை நூலில்.....

- தமிழ் திறனறித் தேர்விற்கு தேவையான அனைத்தும் உள்ளடங்கியுள்ளது
- விரிவான விளக்கம்
- வினா விடை பகுதி
- முந்தைய ஆண்டு தேர்வுகளின் வினாக்கள்
- ஒலி ஒளி காட்சி வீடியோக்கள்
- இணைய வழி தேர்வு
- மாதிரி வினாத்தாள்கள்

கல்வி என்பது எழுத்தறிவைமட்டுமே கொடுக்கக் கூடியதாக இருக்கக்கூடாது!
அது மனிதனைச் சிந்திக்க வைக்கக் கூடியதாகவும்,
புரிந்துகொள்ள வைப்பதாகவும், பொறுமையை வளர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.
-டாக்டர் ராதாகிருஷ்ணன்

TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

1st Edition

www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



53) சிலப்பதிகாரத்தில் சுருளிமலைக்கு வழங்கப்பட்ட பெயர்

(அ) திருமால்குன்றம் (ஆ) திருப்பரங்குன்றம்

(இ) சிறுமலை (ஈ) நெடுவேள்குன்றம்

**விடை: (ஈ) நெடுவேள்குன்றம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 207**

207

- மணிமேகலை காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும் அழைக்கப்பெறுகின்றன .

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள், சேர மரபைச் சேர்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' (த. தி. தேர்வு -அக்-2022) என இக்காப்பியம் படைத்தார் என்பர்.

**நினைவில் நிறுத்துவோம்**

பெருங்குணத்துக் காதலாள் நட ந்த பெருவழி

- காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் திருவரங்கம் மற்றும் உறையூர் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர்.
- தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம்.
- இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம் (அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில், சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன.
- அவ்வழியாகச் சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து, மதுரை செல்லலாம்.
- கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார்.
- மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம் (சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.



Q-53/2023

**பயிற்சி வினாக்கள்**

1. குடிமக்கள் காப்பியம் என்று சிறப்பிக்கப்படும் நூல்?
   (அ) சிலப்பதிகாரம் (ஆ) கம்பராமாயணம்
   (இ) மணிமேகலை (ஈ) சீவக சிந்தாமணி
2. இரட்டைக்காப்பியங்கள் என்று அழைகப்படுவன எவை?
   (அ) சிலப்பதிகாரம், வளையாபதி
   (ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை
   (இ) மணிமேகலை, சீவக சிந்தாமணி
   (ஈ) மணிமேகலை, குண்டலகேசி
3. 'அடிகள் நீரே அருளுக' - என்று கூறியவர்?
   (அ) இளங்கோவடிகள்
   (ஆ) சீத்தலைச் சாத்தனார்
   (இ) திருதக்கதேவர் (ஈ) நாதகுத்தனார்
4. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்?
   (அ) இளங்கோவடிகள் (ஆ) சீத்தலைச் சாத்தனார்
8. சிலப்பதிகாரத்தில் உள்ள காதைகளின் எண்ணிக்கை?
   (அ) 10 (ஆ) 20 (இ) 30 (ஈ) 40
9. நெடுவேள் குன்றம் என்று அழைக்கப்படுவது?
   (அ) பழனிமலை (ஆ) மருதமலை
   (இ) விராலி மலை (ஈ) சுருளி மலை
10. ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு பற்றி கூறும் நூல்?
   (அ) மூவருலா (ஆ) ஞான உலா
   (இ) திருத்தணிகையுலா (ஈ) தமிழ்விடு தூது
11. இந்திரவிழா ஊரெடுத்தகாதை இடம்பெற்றுள்ள காண்டம்?
   (அ) புகார்க்காண்டம் (ஆ) மதுரைக்காண்டம்
   (இ) வஞ்சிக்காண்டம் (ஈ) இவற்றில் ஏதுமில்லை
12. மணிமேகலை கதையுடன் தொடர்புள்ள காப்பியம்?

54) சரியான அகர வரிசையைத் தேர்க

(அ) செந்நாய், நியதி, யாழ், வெய்யோன் (ஆ) வெய்யோன், நியதி, செந்நாய், யாழ்

(இ) நியதி, வெய்யோன், செந்நாய், யாழ் (ஈ) யாழ், செந்நாய், வெய்யோன், நியதி

**விடை: (அ) செந்நாய், நியதி, யாழ், வெய்யோன்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Material Reference Book**

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



Q-54 /2023 TOPIC

## 10. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

❖ வாக்கியத்தில் இடம் மாறி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை அகரவரிசைப்படி வரிசை படுத்துவதே அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் எனப்படும்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

143

1. முதலில் அ,ஆ,இ,ஈ என உயிரெழுத்துத்துக்களை வரிசைப்படுத்த வேண்டும்.

(எ.கா) ஒட்டகம், இலை, அரும்பு, ஊஞ்சல்(வினா)

அரும்பு, இலை, ஊஞ்சல், ஒட்டகம் (விடை)

2. முதல் எழுத்துத் ஒரே எழுத்தாக அமைந்தால் அடுத்ததாக இரண்டாவதாக இருக்கும் எழுத்தை (மெய்யெழுத்துத் ) கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(எ.கா) நன்மை, நம்பகம், நல்லது, நட்சத்திரங்கள் (வினா)

நட்சத்திரங்கள், நம்பகம், நல்லது, நன்மை (விடை)

3. உயிர்மெய் எழுத்துக்களை க,கா,கி,கீ என்றே வரிசைப்படுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் க,ங,ச என்ற முறையில் வரிசைப்படுத்த கூடாது.

மிருகம், முத்து , மௌனம், மதி (வினா)

மதி, மிருகம், முத்து , மௌனம் (விடை)

4. முதலெத்துக்கள் எல்லாம் ஒரே மாதியாக அமைந்தது என்றால் இரண்டாவதாக அமைந்துள்ள உயிர்மெய் மற்றும் மெய்யெழுத்துகளை க,கா,கி,..... என்று வகைப்படுத்தி பின்னர் ங,ஙா, ஙி,ஙீ, ச, சா,சி,சீ ... என்று வரிசைப்படுத்த வேண்டும்.

அணில், அம்பு, அரசன், அரங்கம் (வினா)

அணில், அம்பு, அரங்கம், அரசன் (விடை)

5. க வரிசை போல வேறு எந்த வரிசை வந்தாலும் முதலில் குறில் எழுத்தை வரிசைப்படுத்த வேண்டும். பின்னர் நெடில் எழுத்தை வரிசைப்படுத்த வேண்டும்.

நாணி, நனி, பேணி, பிணி (வினா)

நனி, நாணி, பிணி, பேணி (விடை)

(எ-கா)

அகரவரிசையில் எழுது.

❖ பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு.

விடை - பழங்கள், பாரதம், பின்னிரவு, பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன் பொதுக்கூட்டம், போக்குவரத்து

❖ பூனை, தையல், தேனி, மான், வௌவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், ஓணான், பழம்.

TEACHER'S CARE ACADEMY
TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



55) மா. இராமலிங்கம் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

(அ) இனிக்கும் நினைவுகள் (ஆ) எங்கெங்கு காணினும்

(இ) யாதுமாகி நின்றாய் (ஈ) புதிய உரைநடை

**விடை: (ஈ) புதிய உரைநடை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 98**

98

## 3. துணைப்பாடம்

### 3.1. உரைநடையின் அணிநலன்கள் – எழில்முதல்வன்



சங்ககால இலக்கியம் - நம் பாட்டனார் தோப்பு
இடைக்கால இலக்கியம் - நம் தந்தையார் தோட்டம்
இக்கால இலக்கியம் - நம் பூங்கா



**நினைவில் நிறுத்துவோம்:**

**நூல்வெளி:**




- எழில்முதல்வன் எழுதிய "புதிய உரைநடை" என்னும் நூலிலுள்ள உரைநடையின் அணிநலன்கள் என்னும் கட்டுரையின் சுருக்கம், இங்கு உரையாடல் வடிவமாக மாற்றித் தரப்பட்டுள்ளது.
- மா.இராமலிங்கம் (எ) எழில் முதல்வன் மாநிலக் கல்லூரியில் பயின்று அங்கேயே பேராசிரியர் பணியைத் தொடர்ந்தவர். குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி செய்தவர்.
- மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதிலும் வல்லவர். "இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய்" முதலிய கவிதை நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர்.
- 'புதிய உரைநடை' என்னும் இலக்கிய திறனாய்வு நூலுக்காக 1981 ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். Q-55 | 2023

தொன்று தொட்டு இன்றுவரை நின்று நிலவும் ஊர்கள்,
தொன்மைத் தமிழ் நாகரிகத்தின் வேர்கள்! இலக்கியத்தின் சீர்களில்...

**முன்தோன்றிய மூத்தகுடி:**



"வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"
– சிலப்பதிகாரம், காடுகாண் காதை: 53-55

திண்டுக்கல் மாவட்டத்தின்
சிறுமலை

உள்ளங்கை நெல்லிக்கனி போல என்ற இலக்கியத் தொடரில் இடம்பெற்றுள்ள நயம் – உவமை

56) இரண்டாம் இராசராசனது மெய்க்கீர்த்தியில் “பிறழ்ந்தொழுகுவன” என்று குறிப்பிடப்படுவது

(அ) இளமான்கள் (ஆ) கயற்குலம்

(இ) வண்டுகள் (ஈ) மாமலர்கள்

**விடை: (ஆ) கயற்குலம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 203**

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. "நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும்
எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்"
- இவ்வரிகள் இடம் பெற்ற நூல்?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

6. "பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை"
- இவ்வரிகள் இடம் பெற்ற நூல்?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

7. "முதல்மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகிவிட்டது"
- இவ்வரிகள் இடம் பெற்ற நூல்?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

8. "மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்"
- இவ்வரிகள் இடம் பெற்ற நூல்?
(அ) ஏர் புதிதா (ஆ) அன்னை மொழியே
(இ) ஞானம் (ஈ) சித்தாளு

9. தமிழர் பண்பாட்டின் மகுடம் என்று அழைக்கத்தக்கது?
(அ) பொன்ஏர் பூட்டுதல் (ஆ) கவிதை
(இ) கால்நடை வளர்ப்பு (ஈ) தோட்டப்பராமரிப்பு

10. தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்?
(அ) பாரதியார் (ஆ) உமா மகேஸ்வரி
(இ) கு.ப.ராஜகோபாலன் (ஈ) தமிழகனார்

## 5.7.1. மெய்க்கீர்த்தி - இரண்டாம் இராசராச சோழன்



- அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்.
- அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள்.
- சங்க இலக்கியமான பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள் இதற்கு முன்னோடி!
- பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது; செப்பமான வடிவம் பெற்றது. கல் இலக்கியமாய் அமைந்தது.

இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி
வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய
படியானையே பிணிப்புண்பன
வடிமணிச்சிலம்பே யரற்றுவன
செல்லோடையே கலக்குண்பன
வருபுனலே சிறைப்படுவன
மாவே வடுப்படுவன
மாமலரே கடியவாயின
காவுகளே கொடியவாயின
கள்ளுண்பன வண்டுகளே
பொய்யுடையன வரைவேயே
போர்மலைவன எழுகழனியே
மையுடையன நெடுவரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொ ழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள்வைப்பார்
இசைப் பாணரே கூடஞ்செய்வார்
என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென
நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது
தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர்
தாயராகியும்
மைந்தரில்லொரு மைந்தராகியும்
மன்னுயிர்கட்குயிராகியும்
விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற
அருளென்னவும்
மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற
பனுவலென்னவும்
எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்....

Q-56/2023

➢ இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுப்பேரும் ஓருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன். அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன (மக்கள் பிணிக்கப்படுவதில்லை).

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



57) பொருத்தி விடை தேர்க

1) கொல்லாமை - i) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

2) வென்றவர் - ii) தொடர்மொழி

3) கேடு - iii) வினையாலணையும் பெயர்

4) மாலா பாடினாள் - iv) எதிர்மறைத் தொழிற்பெயர்

(அ) 4, 3, 2, 1 (ஆ) 3, 4, 1, 2 (இ) 4, 3, 1, 2 (ஈ) 2, 4, 1, 3

**விடை: (இ) 4, 3, 1, 2**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 63, 64**

63

## 2.1.1. சொல்

- 'பூ மலர்ந்தது', 'மாடு புல் தின்றது'.
- ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,

**சொல் உணர்த்தும் பாங்கு:**

அ) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
ஆ) மூவகை இடங்களிலும் வரும்.
இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
ஈ) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

மூவகைமொழி = **தனிமொழி, பொதுமொழி, தொடர்மொழி.**

**தனிமொழி**

- ✓ ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது தனிமொழி எனப்படும்.
- ✓ பகாப்பதம்: கண்ணன், படித்தான் – பகுபதம்
- ✓ ஒருமொழி ஒருபொருளனவாம் தொடர்மொழி
- ✓ பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. - (நன்னூல்260)







**தொடர்மொழி** Q-57

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும். எ.கா. கண்ணன் வந்தான். மலர் வீட்டுக்குச் சென்றாள்.

**பொதுமொழி**



- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும். எ.கா. எட்டு – எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

வேங்கை - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.

இவையே என் + து எனவும் வேம் + கை எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும்.

இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாகவும் இருக்கிறது.

## தொழிற்பெயர்

- ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது **தொழிற்பெயர்** எனப்படும். எ.கா: ஈதல், நடத்தல்

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

Q-69/2022

தொழிற்பெயர் (மூன்று வகைப்படும்)
- விகுதிபெற்ற தொழிற்பெயர்
- முதனிலைத் தொழிற்பெயர்
- முதனிலைதிரிந்த தொழிற்பெயர்

**விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்:**

- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.
- **ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.**

**எ.கா. நட என்பது வினையடி**
**நடை, நடத்தை, நடத்தல்**

**எதிர்மறைத் தொழிற்பெயர்:**

- எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் ஆகும். எ.கா. நடவாமை, கொல்லாமை Q-57

**முதனிலைத் தொழிற்பெயர்:**

- விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும். எ.கா. தட்டு, உரை, அடி **இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.**

**முதனிலை திரிந்த தொழிற்பெயர்:**

- விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும். எ.கா. பேறு

| தொழிற்பெயர் | முதனிலை | முதனிலை திரிந்த தொழிற் பெயர் |
|---|---|---|
| கெடுதல் | கெடு | கேடு Q-57 |
| சுடுதல் | சுடு | சூடு |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



64

Q- 57/2023

## வினையாலணையும் பெயர்

➤ ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

எ.கா. 1) வந்தவர் அவர்தான். 2) பூமியாள்வார்.

**தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு:**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை பெயர் தன்மையாகி வினையை உணர்த்தி நிற்கும் | தொழிலை செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கு உரியது |
| எ. கா. பாடுதல் படித்தல் | எ. கா. பாடியவள், படித்தவர் |

**நினைவில் நிறுத்துவோம்**

**வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

1) காண் - காணல்
2) சிரி - சிரித்தல்
3) படி - படித்தல்
4) தடு - தடுத்தல்
5) எங்கே செல்கிறாய் - தொடர்மொழி
6) கடைக்கு - தனிமொழி
7) தேங்காய் வாங்குகிறேன் - தொடர் மொழி
8) தெற்கு - தனி மொழி
9) கோவிலுக்குச் செல்ல வேண்டும் - தொடர் மொழி
10) எந்த கோவிலுக்கு - தொடர் மொழி
11) திருத்தணி - தனி மொழி

| வினைமுற்று | தொழிற் பெயர் | வினைமுற்று | தொழிற் பெயர் |
|---|---|---|---|
| அழைக்கும் | அழைத்தல் | ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் | பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்தல் | | |

எ.கா.
வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

58) "பொய்கையிடம் போனால்
குளிர்ந்து போகிறாய்
பூக்களைத் தொட்டால்
நறுமணத்தோடு வருகிறாய்" - இப்பாடல் வரிகளை எழுதியவர்

(அ) அப்துல் ரகுமான் (ஆ) மு. மேத்தா

(இ) நா. காமராசன் (ஈ) கவி.கா.மு. ஷெரீப்

**விடை: (அ) அப்துல் ரகுமான்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 148**

TEACHER'S CARE ACADEMY

## இலக்கிய நயம் பாராட்டுக:

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

- கா. நமச்சிவாயர்

### சான்றோர் வளர் தமிழ்:

எதுகை:

தேனினும் - ஊனினும்
வானினும் – தானனி - அடி எதுகை
தேனினும் – இனியன் - சீர் எதுகை
அணி: உயர்வு நவிற்சி அணி

மோனை:

தழைத்தினி – தண்டமிழ்
ஒளிர்வுறும் – ஒண்டமிழ்

❖ குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப், பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

| மாணவர்கள் செல்லும் வழி | |
|---|---|
| இன்சொல் வழி | தீய சொல் வழி |
| பிறர் மனம் மகிழும்<br>அறம் வளரும்<br>புகழ் பெருகும்<br>நல்ல நண்பர்கள் சேருவர்<br>அன்பு நிறையும் | பிறர் மனம் வாடும்<br>அறம் தேயும்<br>இகழ் பெருகும்<br>நல்ல நண்பர்கள் விலகுவர்<br>பகைமை நிறையும் |



## 4.2.2. இயல் 2 - தொகுப்பு

### நினைவில் நிறுத்துவோம்:

அந்த இடம் காற்றே! வா
உன்னைப் பாடாமல் இருக்க முடியாது
ஏனெனில் பாட்டின் மூல ஊற்றே நீதான்
................................
பொய்கையிடம் போனால்
குளிர்ந்து போகிறாய்
பூக்களைத் தொட்டால்
நறுமணத்தோடு வருகிறாய்
புல்லாங்குழலில் புகுந்தால்
இசையாகிவிடுகிறாய்
எங்களிடம் வந்தால் மட்டுமே
அழுக்காகி விடுகிறாய்
மரங்களின் ஊமை நாவுகள் உன்னிடம் மட்டுமே
பேசுகின்றன-



-அப்துல் ரகுமான்.

கடல் அலைகள்
உன்னோடு மட்டுமே குதித்துக்
கும்மாளமிடுகின்றன
வயலின் பச்சைப் பயிர்கள்
நீ வந்தால் மட்டுமே ஆனந்த நடனம்
ஆடுகின்றன
நீ என்ன குதூகலமா?
கொண்டாட்டமா? கோலாகலமா?
நெடுநாட்களாகவே எனக்கொரு சந்தேகம்
விளக்குகளிலிருந்து பறிக்கும் சுடர்களை
பூக்களிலிருந்து திருடும் நறுமணத்தை
வீணையிலிருந்து கவர்ந்த இசையை
எங்கே கொண்டு போய்
ஒளித்து வைக்கிறாய்?

### சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க:

(இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்)

எ.கா: இன் சொல் - பண்புத்தொகை - இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

1. இன்சொல் - பண்புத்தொகை
   ➢ இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.
2. எழுகதிர் - வினைத்தொகை
   ➢ அதிகாலையில் எழுகதிர் ஒளி உடலுக்கு மிகவும் நன்மை பயக்கும்.
3. கீரிபாம்பு - உம்மைத்தொகை - கீரியும் பாம்பும்
   ➢ ரமாவும் சீதாவும் வகுப்பில் எப்போதும் கீரியும் பாம்பும் போல சண்டையிட்டுக் கொள்வார்கள்.

59) “நெட்டுருப் பண்ணினாள் நீதி நூல் திரட்டையே” - என்று பாடியவர்?

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) வாணிதாசன் (ஈ) சுரதா

**விடை: (ஆ) பாரதிதாசன்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 141**

TEACHER'S CARE ACADEMY

141

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்;<br>பேத்தி.<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே<br><br>-பாரதிதாசன் | Wondering at the lute music<br>coming feom the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation<br>- Translated by Kavignar Desini |

- lute music – யாழிசை
- chamber – அறை
- to look up – மேலே பார்க்க
- grand-daughter – பேத்தி
- rote – நெட்டுரு
- didactic compilation – செயற்கையான தொகுப்பு

(VI) Therukoothu is, as its name indicates, a

ஒப்பனைகளுடனும் தங்களை அலங்கரித்துக் கொள்வார்கள்.

- ஒரு கூத்துக் குழுவில் பதினைந்து முதல் இருபது நடிகர்கள் ஒரு சிறிய இசைக் குழுவோடு இருப்பார்கள்.
- அந்த இசைக் குழுவில் பாடகர் ஒருவர் இருந்தாலும் கூத்தாடும் கலைஞர் அனைவரும்

60) கலிவெண்பாவின் அடி வரையறை

(அ) பதின்மூன்று அடிக்கு மேல் (ஆ) பத்து அடிகள்

(இ) பன்னிரண்டு அடிகள் (ஈ) நான்கு அடிகள்

**விடை: (அ) பதின்மூன்று அடிக்கு மேல்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 91**

91

| | | |
|---|---|---|
| சீர் | ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர் வெண்சீர் மட்டுமே பயின்று வரும். | ஈரசைச் சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும். |
| தளை | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே பயின்று வரும். | ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். |
| அடி | இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்). | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். |
| முடிப்பு | ஈற்றுச் சீர் நாள், மலர் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும். | ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு. |

- ❖ குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- ❖ முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

### அலகிடுதல்

- செய்யுளின் சீரை அசை பிரித்து நேரசை, நிரையசை என்று பகுத்துக் காண்பதை முன் வகுப்பில் அறிந்துள்ளோம்.
- அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

### அசையும் வாய்ப்பாடும்

| ஓரசைச் சீர் | ஈரசைச் சீர் | மூவசைச் சீர் | |
|---|---|---|---|
| நேர் - நாள் | நேர் நேர் - தேமா | நேர் நேர் நேர் - தேமாங்காய் | நேர் நேர் நிரை - தேமாங்கனி |
| நிரை - மலர் | நிரை நேர் - புளிமா | நிரை நேர் நேர் - புளிமாங்காய் | நிரை நேர் நிரை - புளிமாங்கனி |
| நேர்பு - காசு | நிரை நிரை - கருவிளம் | நிரை நிரை நேர் - கருவிளங்காய் | நிரை நிரை நிரை - கருவிளங்கனி |
| நிரைபு - பிறப்பு | நேர் நிரை - கூவிளம் | நேர் நிரை நேர் - கூவிளங்காய் | நேர் நிரை நிரை - கூவிளங்கனி |

### அலகிடுதல்

எ.கா. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net

61) “பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக” - என்று தப்பாட்ட இசை பற்றி குறிப்பிடும் நூல்

(அ) தேவாரம் (ஆ) திருவாசகம்

(இ) திருப்புகழ் (ஈ) புறநானூறு

**விடை: (இ) திருப்புகழ்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 39**

39

### 1.6.6. பொய்க்கால் குதிரையாட்டம்

- **"போலச்செய்தல்"** பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.
- மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரைவடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம்.



- அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் **புரவி ஆட்டம்.**
- புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.
- இது மராட்டியர் காலத்தில் **தஞ்சைக்கு வந்ததாகக்** கூறப்படுகிறது.
- கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக் கொள்கின்றனர்.
- காலில் சலங்கை அணிந்தும் **அரசன் அரசி** உடையணிந்தும் கிரீடம் அணிந்தும் ஆடுகின்றனர்.
- குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் **நான்கு புறமும்** ஓடியும் ஆடுகின்றனர்.
- பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன.
- இது இராஜஸ்தானில் **கச்சிகொடி** என்றும் கேரளத்தில் **குதிரைக்களி** என்றும் அழைக்கப்படுகின்றது.

### 1.6.7. தப்பு ஆட்டம்



* 'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும்.
* ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது.
* இவ்வாட்டம் **தப்பாட்டம், தப்பட்டை, தப்பு** என்றும் அழைக்கப்படுகின்றது.
* தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி.
* கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது.
* 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

Q- 61/2023

* *“தகக தகதகக தந்தத்த தந்தகக என்று தாளம் பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக”* - திருப்புகழ், என்று **அருணகிரிநாதர்**, தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார். இதனைப் **'பறை'** என்றும் அழைப்பர்.
* ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை.



அருணகிரிநாதர்

62) பின்வரும் நூல்களின் அடிகள் / பாடல்களின் எண்ணிக்கையை தமிழ் எண்களுடன் பொருத்தி விடை தேர்க.

1) முல்லைப்பாட்டு - i) க0ரு

2) மலைபடுகடாம் - ii) ருகூகரு

3) பெருமாள் திருமொழி - iii) க0ரு

4) தேம்பாவணி - iv) ருஅரு

www.Padasalai.Net www.CBSEtips.in



(அ) 4, 1, 2, 3 (ஆ) 3, 4, 1, 2

(இ) 4, 3, 2, 1 (ஈ) 2, 1, 4, 3

**விடை: (ஆ) 3, 4, 1, 2**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 159, 182, 215, 172, 177**

159

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக:**

(தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து)

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு
வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவைதரும் மரவீடு
2. காலை ஒளியினில் மலரிதழ் அவிழும்
சோலைப் பூவினில் வண்டினம் கவிழும்
3. மலை முகட்டில் மேகம் தங்கும் – அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் தயங்கும்
4. வாழ்க்கையில் தோற்பவை மீண்டும் வெல்லும் – இதைத் தத்துவமாய்த் தோற்பாவைக் கூத்து சொல்லும்
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே விருது அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் விருந்து



## 4.2.7. இயல் 7 - தொகுப்பு

**நினைவில் நிறுத்துவோம்:**





ஏர்பிடிக்கும் கைகளுக்கே
வாழ்த்துக் கூறுவோம் – வறுமை
ஏகும்வரை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம்! – என்றும்
ஊர்செழிக்கத் தொழில்செய்யும்
உழைப்பாளிகள் – வாழ்வு
உயரும்வகை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம்!

- கவி கா.மு ஷெரீப்.

**பின்வரும் தொடர்களைக் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:**

(வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்)

➢ எ.கா. இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்.

1. எங்கள் வீட்டுக் கிணறு நீர் ________
2. இன்றைய கூட்டத்தில் நம் தலைவர் பேசிய உரையில் வெறுப்பான பேச்சு ________ அதிகம்.
3. நேற்று இரவு பிடிபட்ட திருடன், பொதுமக்களிடம் ____ முரணாகப் பேசினான்.
4. கடந்தகால வேதனைகளையும் சோதனைகளையும் ________

விடை:

1. எங்கள் வீட்டுக் கிணறு நீர் இல்லாமல் இருக்கிறது.
2. இன்றைய கூட்டத்தில் நம் தலைவர் பேசிய உரையில் வெறுப்பான பேச்சு கொஞ்சம் அதிகம்.
3. நேற்று இரவு பிடிபட்ட திருடன், பொதுமக்களிடம் முன்னுக்குப்பின் முரணாகப் பேசினான்
4. கடந்தகால வேதனைகளையும் சோதனைகளையும் மறக்க நினைக்கிறேன்.

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக:**

❖ மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்ப வர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

❖ மூவேந்தர் - மூன்று + வேந்தர் (ங)
❖ முத்தமிழ் - மூன்று + தமிழ் (ங)
❖ இருதிணை - இரண்டு + திணை (உ)
❖ நாற்றிசை - நான்கு + திசை (ச)
❖ நானிலம் - நான்கு + நிலம் (ச)
❖ முப்பால் - மூன்று + பால் (ங)
❖ ஐந்திணை - ஐந்து + திணை (ரு)
❖ எட்டுத்தொகை - எட்டு + தொகை (அ)
❖ அறுசுவை - ஆறு + சுவை (சு)
❖ பத்துப்பாட்டு - பத்து + பாட்டு (க0 / ய)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | ய/க0 |

R – 159 / 2023

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.
- பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **ஐந்தாம் திருமொழியாக உள்ளது.** த.தி.தேர்வு அக்-2022
- இதில் 105 பாடல்கள் உள்ளன.
- இதனைப் பாடியவர் குலசேகராழ்வார்.
- இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.
- வித்துவக்கோடு என்னும் ஊர், கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.
- குலசேகர ஆழ்வார் அங்குள்ள இறைவனான உய்ய வந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

**சொல்லும் பொருளும்**

சுடினும் – சுட்டாலும்,
மாளாத-தீராத, மாயம் – விளையாட்டு

## பயிற்சி வினாக்கள்

1. பெருமாள் திருமொழி என்னும் நூலை இயற்றியவர் ______
   (அ) பெரியாழ்வார் (ஆ) குலசேகராழ்வார்
   (இ) ஆண்டாள் (ஈ) நம்மாழ்வார்
2. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்" – என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்?
   (அ) முல்லைப்பாட்டு (ஆ) காசிக்காண்டம்
   (இ) பரிபாடல் (ஈ) பெருமாள் திருமொழி
3. "மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" – என்று பாடியவர்?
   (அ) பெரியாழ்வார் (ஆ) குலசேகராழ்வார்
   (இ) ஆண்டாள் (ஈ) நம்மாழ்வார்
4. வித்துவக்கோடு என்ற ஊர் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
   (அ) தமிழ்நாடு (ஆ) கேரளா
   (இ) தெலுங்கானா (ஈ) கர்நாடகம்

   (ஆ) கி.பி 6ஆம் நூற்றாண்டு
   (இ) கி.பி 7ஆம் நூற்றாண்டு
   (ஈ) கி.பி 8ஆம் நூற்றாண்டு
7. மாளாத என்னும் சொல்லின் பொருள் யாது?
   (அ) விளையாட்டு (ஆ) அடியேன்
   (இ) தீராத (ஈ) சுட்டாலும்
8. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் ______ அமைந்துள்ளது?
   (அ) திருவருட்பா (ஆ) திருமந்திரம்
   (இ) பெருமாள் திருமொழி (ஈ) கந்தரலங்காரம்
9. "மாயம்" என்பதன் பொருள் யாது?
   அ) தீராத ஆ) விளையாட்டு
   இ) மறைதல் ஈ) பெறுதல்
10. "வாளால் அறுத்தச் சுடினும் மருந்துவன் பால்" - இவ்வடிகள் இடம் பெற்ற நூல்?
    அ) பெருமாள் திருமொழி ஆ) மலைபடுகடாம்
    இ) முல்லைப்பாட்டு ஈ) நெடுநல்வாடை
11. நாலாயிரத் திவ்வியப் பிரபந்ததத்தில்



## இஸ்மத் சன்னியாசி - தூய துறவி

- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் **இஸ்மத் சன்னியாசி** என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார். த. தி. தேர்வு -அக்-2022
- இந்தப் பாரசீகச் சொல்லுக்குத் தூய துறவி என்றுபொருள்.
- தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.
- கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது.
- இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615 பாடல்களைக் கொண்டுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி.
- இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி. தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, (த. தி. தேர்வு -அக்-2022)
- தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



19) எட்டையபுரத்தின் ஏந்தல் என்று அறியப்பட்டவர்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) சி.சு. செல்லப்பா ஈ) கவிமணி

20) குழந்தைகளுக்கான நீதிகளைப் பாடலில் தந்தவர்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) தமிழ்ஒளி ஈ) தேனரசன்



## 5.2.1 முல்லைப்பாட்டு - நப்பூதனார்

### நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
- த.தி.தேர்வு அக்-2022
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
- த.தி.தேர்வு அக்-2022
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்
- அடி – 1 - 17

### முல்லைப் பாட்டின் நூல் குறிப்பு

- முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1-17 அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைபாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது; முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

### சொல்லும் பொருளும்

- நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
- நேமி - சக்கரம்
- கோடு - மலை
- கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
- நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
- தூஉய் - தூவி
- விரிச்சி - நற்சொல்
- சுவல் - தோள்

### பாடலின் பொருள்

- அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருங்கோற்றம்

www.Padasalai.Net
TEACHER'S CARE ACADEMY


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

## பொருள்



- நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவுபெறுவதற்கு வழிப்படுத்துதல்.
- பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள் எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்.
- சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்' என்று சொல்லுங்கள்.
- அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள்.
- உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.
- நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர்.
- அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

## சொல்லும் பொருளும்

Q-41

| | | |
|---|---|---|
| அசைஇ - இளைப்பாறி | வயிரியம் - கூத்தர் | வேவை - வெந்தது |
| அல்கி - தங்கி | இறடி - தினை | பொம்மல் - சோறு |
| கடும்பு - சுற்றம் | நரலும் - ஒலிக்கும் | |
| ஆரி - அருமை | படுகர் - பள்ளம் | |

Q-41 Q-41 Q-41/2023

## பகுபத உறுப்பிலக்கணம்

மலைந்து – மலை + த்(ந்) + த் + உ
மலை – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

பொழிந்த – பொழி + த்(ந்) + த் + அ
பொழி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

## நூல்குறிப்பு

Q-62/2023



- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று 'மலைபடுகடாம்' 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.
- மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் (த.தி.தேர்வு அக்-2022) பாடியது மலைபடுகடாம்.

### ஆற்றுப்படை

❖ ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

## இலக்கணக் குறிப்பு

1) அசைஇ, கெழீஇ - சொல்லிசை அளபெடைகள், 2) பரூஉக், குரூஉக்கண் - செய்யுளிசை அளபெடை

63) "கறங்கு இசை விழவின் உறந்தை" என்று தற்போதைய திருச்சி மாவட்டத்தின் உறையூரைக் குறிப்பிடும் நூல்

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு

(இ) சிலப்பதிகாரம் (ஈ) நற்றிணை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**விடை: (அ) அகநானூறு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 107**



2. புயலிலே ஒரு தோணி என்னும் புதினத்தை இயற்றியவர் யார்?
அ) ப.சிங்காரம் ஆ) மு. மேத்தா
இ) க. சமுத்திரம் ஈ) எஸ். பொன்னுதுரை

3. நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை பற்றிய குறிப்பு காணப்படும் நூல்
அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம்
இ) பெரும்பாணாற்றுப்படை ஈ) அகநானூறு

4. "பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி" – இவ்வடிகள் இடம்பெற்ற நூல்?
அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம்
இ) பெரும்பாணாற்றுப்படை ஈ) அகநானூறு

5. கொரியாலிஸ் விளைவு எதைப்பற்றிக் கூறுகிறது?
அ) புயல் ஆ) மலை இ) வெப்பம் ஈ) மண்

6. கொரியாலிஸ் விளைவு கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு?
அ) 1835 ஆ) 1836 இ) 1837 ஈ) 1838

7. கஜா என்னும் பெயரைப் புயலுக்குத் தந்த நாடு?
அ) இந்தியா ஆ) இலங்கை
இ) சீனா ஈ) ஓமன்

8. கப்பித்தான் என்பது?
அ) கப்பல் ஆ) தலைமை மாலுமி
இ) திரை ஈ) மரத்தூண்

9. தொங்கான் என்பது?
அ) கப்பல் ஆ) தலைமை மாலுமி
இ) திரை ஈ) மரத்தூண்

10. மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாகக் எழுதப்பட்ட கற்பனை கதை?
அ) புயலும் ஒரு மாலுமியும்
ஆ) புயலிலே ஒரு தோணி
இ) துறைமுகக் கரையிலே
ஈ) கடலின் கொந்தளிப்பு

## 3.3. கோபல்லபுரத்து மக்கள் - கி.ராஜநாராயணன்

### நினைவில் நிறுத்துவோம்:

- கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதை கோபல்லபுரத்து மக்கள் ஆசிரியர் தன் சொந்த ஊரான இடைசெவல் மக்கள் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையையும் புகுத்தி இந்நூலினைப் படைத்துள்ளார். இதன் ஒரு பகுதியே இங்குப் பாடமாக உள்ளது.
- இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது இந்நூல். இது 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது.




- கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன். இருபதுக்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள இவரின் கதைகள் ஒரு கதை சொல்லியின் கதைப்போக்கில் அமைந்திருக்கும்.
- இவரின் கதைகள் அனைத்தும் கி.ராஜநாராயணன் கதைகள் என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன; இவர் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார். இவர் தொடங்கிய வட்டார மரபு வாய்மொழிப் புனைக்கதைகள் 'கரிசல் இலக்கியம்' என்று அழைக்கப்படுகின்றன. எழுத்துலகில் இவர் கி.ரா. என்று குறிப்பிடப்படுகிறார்.

**முன்தோன்றிய மூத்தகுடி:**
"கறங்கு இசை விழவின் உறந்தை ..." - அகநானூறு (4:14)

திருச்சி மாவட்டத்தின் உறையூர்

கி–63/203

**கரிசல் இலக்கியம்:**

- கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம். காய்ந்தும் கெடுக்கிற, பெய்தும் கெடுக்கிற மழையைச் சார்ந்து வாழ்கிற மானாவாரி மனிதர்களின் வாழ்க்கையைச் சொல்லும் இலக்கியங்கள் இவை. கரிசல் மண்ணின் படைப்பாளி கு.அழகிரிசாமி, கி.ராஜநாயணனுக்கு முன் எழுதத் தொடங்கியவர். கரிசல் களத்தையும் அங்குள்ள மக்களையும் மையப்படுத்திக் கரிசல் இலக்கியத்தை நிலைநிறுத்தியவர் கி.ராஜநாராயணன். அந்த கரிசல் இலக்கியப் பரம்பரை இன்றளவும் தொடர்கிறது. பா.செயப்பிரகாசம், பூமணி, வீரவேலுசாமி, சோ.தர்மன், வேல ராமமூர்த்தி, இன்னும் பலரின் மூலமாக...

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

TEACHER'S CARE PUBLICATION
KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

**15-10-2023 அன்று நடைபெற்ற**
**தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் 100-க்கு 97-வினாக்கள் நமது TCA வழங்கிய முதல் பதிப்பு புத்தகத்தில் இருந்து நேரடியாக கேட்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**97 / 100**



www.Padasalai.Net

**15-10-2023 அன்று நடைபெற்ற தேர்வின்**
# வினா,விடை,விளக்கம்

**1,500 மாணவர்களுக்கு தலா 36,000 ரூபாய்**

புத்தகத்தை *amazon.in* இணையதளத்தில் பெற்று பயனடையலாம்

amazon.in

**முன் பதிவிற்க்கான எண்கள்**

95665 35080
76399 67359
93602 68118
63690 36346

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

64) 'Paradox' 'Oxymoron' - ஆகிய சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க

(அ) முரண்படு மெய்ம்மை, சொல்முரண் (ஆ) இணை ஒப்பு, எதிரிணை இசைவு

(இ) உச்சநிலை, இணை ஒப்பு (ஈ) எதிரிணை இசைவு, உச்சநிலை

**விடை: (அ) முரண்படு மெய்ம்மை, சொல்முரண்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 101**

Q-64/2023

101

சொல்லுவது முரண்படு மெய்ம்மை (Paradox)! இதோ! அதற்கும் ஓர் எடுத்துக்காட்டு இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?

சங்கப் புலவர்: மேலும்...

Q-64/2023

இணையத் தமிழன்: முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவார்கள்... கலப்பில்லாத பொய். இதைச் சொல்முரண் (Oxymoron) என்கிறோம். சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவோம்... இதனை எதிரிணை இசைவு (Antithesis) என்கிறோம். "குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்: மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!" என்று தோழர் ப.ஜீவானந்தம் எழுதியிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

சங்கப் புலவர்: கேட்கும்போதிலே சிலிர்ப்பு உண்டாகிறதே!

இணையத் தமிழன்: புலவரே! இதையும் கேளுங்கள்! விடைதரவேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவோம்! அது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவக்கூடியது! "அவர் (பெரியார் ஈ.வெ.ரா) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?... எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் - ஒரு கால கட்டம் – ஒரு திருப்பம் என்று கூறுகிறேன். இது பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா பேசியது. எப்படி இருக்கிறது ஐயா?

சங்கப் புலவர்: உணர்ச்சிப் பெருவெள்ளம்! இதன் உச்சநிலை (climax) என்ன?

சங்கப் புலவர்: மிக்க மகிழ்ச்சி! நீர் தமிழ் உரைநடைச் செழுமை பற்றிக் கூறக் கூற மேலும் அவற்றைப் படித்து இன்புற அவாவுறுகிறேன்!

இணையத் தமிழன்: அதற்கென்ன புலவரே! அடுத்த முறை வரும்போது என்னுடைய மடிக்கணினியில் சேமித்து வைத்துள்ள பல்வேறு இலக்கியங்களை உங்களுக்குத் தருகிறேன்! பயன்படுத்திக்கொள்ளுங்கள்! நேரமாகிவிட்டது. போய்வருகிறேன் புலவரே!

சங்கப் புலவர்: போய் வாரும்!... மடிக்கணினி என்று ஏதோ கூறினார்! அப்படியென்றால் என்னவென்று கேட்பதற்குள் பறந்துவிட்டாரே!

**பயிற்சி வினாக்கள்:**

1. குறிஞ்சிப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர் யார்?
அ) நப்பூதனார் ஆ) கபிலர்
இ) மாங்குடி மருதன் ஈ) நக்கீரன்

2. "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று கூறியவர்____
அ) நா. பார்த்தசாரதி ஆ) கல்கி
இ) நீல. பத்மநாபன் ஈ) சாண்டில்யன்

3. குறிஞ்சிமலர் என்னும் நூலை இயற்றியவர்?
அ) நா. பார்த்தசாரதி ஆ) கல்கி
இ) நீல. பத்மநாபன் ஈ) சாண்டில்யன்

4. உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்' என்று கூறியவர்____
அ) தொல்காப்பியர் ஆ) தண்டி
இ) பவணந்திமுனிவர் ஈ) ஐயனாரிதனார்

5."களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" என்று கூறியவர்____
அ) மு.வரதராசனார் ஆ) திரு.வி.க

65) உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடியவர்

(அ) பெரியாழ்வார் (ஆ) நம்மாழ்வார்

(இ) குலசேகராழ்வார் (ஈ) பொய்கையாழ்வார்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



**விடை: (இ) குலசேகராழ்வார்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 182**

182

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.
- பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **ஐந்தாம் திருமொழியாக உள்ளது.** த.தி.தேர்வு அக்-2022
- இதில் 105 பாடல்கள் உள்ளன.
- இதனைப் பாடியவர் குலசேகராழ்வார்.
- இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.
- வித்துவக்கோடு என்னும் **ஊர், கேரள மாநிலத்தில்** பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.
- குலசேகர ஆழ்வார் அங்குள்ள இறைவனான உய்ய வந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

Q-62/2023 Q-65/2023

**சொல்லும் பொருளும்**

**சுடினும் – சுட்டாலும்,**
**மாளாத-தீராத, மாயம் – விளையாட்டு**

**பயிற்சி வினாக்கள்**

**1. பெருமாள் திருமொழி என்னும் நூலை இயற்றியவர் ____**
(அ) பெரியாழ்வார் (ஆ) குலசேகராழ்வார்
(இ) ஆண்டாள் (ஈ) நம்மாழ்வார்

**2. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்" – என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்?**
(அ) முல்லைப்பாட்டு (ஆ) காசிக்காண்டம்
(இ) பரிபாடல் (ஈ) பெருமாள் திருமொழி

**3. "மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" – என்று பாடியவர்?**
(அ) பெரியாழ்வார் (ஆ) குலசேகராழ்வார்
(இ) ஆண்டாள் (ஈ) நம்மாழ்வார்

**4. வித்துவக்கோடு என்ற ஊர் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**
(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா
(இ) தெலுங்கானா (ஈ) கர்நாடகம்

**5. பெருமாள் திருமொழியல் உள்ள பாடல்களின் எண்ணிக்கை?**

(ஆ) கி.பி 6ஆம் நூற்றாண்டு
(இ) கி.பி 7ஆம் நூற்றாண்டு
(ஈ) கி.பி 8ஆம் நூற்றாண்டு

**7. மாளாத என்னும் சொல்லின் பொருள் யாது?**
(அ) விளையாட்டு (ஆ) அடியேன்
(இ) தீராத (ஈ) சுட்டாலும்

**8. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் ________ அமைந்துள்ளது?**
(அ) திருவருட்பா (ஆ) திருமந்திரம்
(இ) பெருமாள் திருமொழி (ஈ) கந்தரலங்காரம்

**9) "மாயம்" என்பதன் பொருள் யாது?**
அ) தீராத ஆ) விளையாட்டு
இ) மறைதல் ஈ) பெறுதல்

**10) "வாளால் அறுத்தச் சுடினும் மருந்துவன் பால்" - இவ்வடிகள் இடம் பெற்ற நூல்?**
அ) பெருமாள் திருமொழி ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) நெடுநல்வாடை

**11) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெருமாள் திருமொழி ____ ஆயிரத்தில் அமைந்துள்ளது?**

66) பொருத்தி விடை தேர்க

1) அவை - i) படர்க்கை வினை

2) படித்தனர் - ii) தன்மை வினை

3) நடந்தாய் - iii) படர்க்கைப் பெயர்

4) வந்தோம் - iv) முன்னிலை வினை

(அ) 3, 1, 2, 4 (ஆ) 3, 1, 4, 2

(இ) 4, 3, 2, 1 (ஈ) 1, 4, 3, 2

**விடை: (ஆ) 3, 1, 4, 2**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 71, 72**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

9. கட்டுரையைப் படித்தாள் என்பது?

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

10. ஒரு சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது ------ ஆகும்.

அ) இடைச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

11. மற்றொன்று என்பது எவ்வகைத் தொடர்?

அ) இடைச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

12. சாலச் சிறந்தது என்பது?

அ) இடைச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

13. 'ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ______ ஆகும்

அ) இடைச்சொல் தொடர்
ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) அடுக்குத்தொடர்

14. வருக! வருக! என்பது ______

அ) இடைச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) அடுக்குத்தொடர்

15. கேட்க வேண்டிய பாடல் என்பது _

அ) கூட்டு நிலைப் பெயரெச்சங்கள்
ஆ) வேற்றுமைத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) அடுக்குத்தொடர்

## 2.4. பொது




### இருதிணை

- ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் **அஃறிணை (அல்திணை)** என்றும் வழங்குவர்.

### ஐம்பால்

- பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் **(பால்-பகுப்பு, பிரிவு).**
- இஃது **ஐந்து** வகைப்படும்.
- **உயர்திணை - ஆண்பால், பெண்பால், பலர்பால்** என **மூன்று** பிரிவுகளை உடையது.
- **அஃறிணை -** ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

### உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்

- வீரன், அண்ணன், மருதன் - **ஆண்பால்**
- மகள், அரசி, தலைவி - **பெண்பால்**
- மக்கள், பெண்கள், ஆடவர் – **பலர்பால்**

| இடம் வினை | பெயர் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| தன்மை | தன்மைப் பெயர்கள்<br>தன்மை வினைகள் | நான், யான், நாம், யாம்,<br>வந்தேன், வந்தோம்,.... Q-66 / 2023 |
| முன்னிலை | முன்னிலைப் பெயர்கள்<br>முன்னிலை வினைகள் | நீ, நீர், நீவீர், நீங்கள்,<br>நடந்தாய், வந்தீர், சென்றிர்கள்.... Q-66 / 2023 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| படர்க்கை | படர்க்கைப் பெயர்கள்<br>படர்க்கை வினைகள் | அவன், அவள், அவர், அது, அவை.<br>வந்தான், சென்றாள், படித்தனர் பேசினார்கள்<br>பறந்தது பறந்தன... |

**அஃறிணைக்குரிய பால் பகுப்புகள்**

- அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும். எ.கா. யானை, புறா, மலை.
- அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும். எ.கா : பசுக்கள், மலைகள்.

**மூவிடம்**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

**வழு – வழாநிலை - வழுவமைதி**

1. வழு

- இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
- இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும் வழு எனப்படும்.

2. வழாநிலை

- இலக்கணப் பிழைகள் இல்லாதிருப்பின் அவை வழாநிலை எனப்படும்.

**வழுவமைதி:**

- வழுவமைதி என்பது இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

| | வழு | வழா நிலை |
|---|---|---|
| திணை | செழியன் வந்தது | செழியன் வந்தான் |
| பால் | கண்ணகி உண்டான் | கண்ணகி உண்டாள் |
| இடம் | நீ வந்தேன் | நீ வந்தாய் |
| காலம் | நேற்று வருவான் | நேற்று வந்தான் |
| வினா | ஒரு விரலை காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல். | இருவிரல்களைக் காட்டி எது சிறியது எது? பெரியது என்று கேட்டல். |
| விடை | கண்ணன் எங்கே [illegible] | |

67) சீனாவில் சிவன் கோவிலைக் கட்ட ஆணையிட்ட சீனப் பேரரசர்

(அ) கன்பூசியஸ் (ஆ) குப்லாய்கான்

(இ) மா சே துங் (ஈ) சூயென்லாய்

**விடை: (ஆ) குப்லாய்கான்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 27**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in







* சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன.
* அவை அங்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன.
* சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும்கூட அவை புரிந்துகொண்டு பதில் அளிக்கின்றன.

## 1.4.12. பெப்பர்



- ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். (த. தி. தே - அக்டோபர் - 2022)
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.
- இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

## 1.4.13. சீன நாட்டில் தமிழ்க் கல்வெட்டு!

- சீன நாட்டில் "காண்டன்" நகருக்கு 500 கல் வடக்கே குவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று.
- அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.
- அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டது.
- அது சீனப் பேரரசரான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது.
- இக்கோயிலில் சோழர் காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



சீனாவில் சிவன் கோவில்

## பயிற்சி வினாக்கள்

68) "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" - இப்பாடலின் ஆசிரியர்

(அ) மாணிக்க வாசகர் (ஆ) சுந்தரர்

(இ) அப்பர் (ஈ) திருஞானசம்பந்தர்

**விடை: (அ) மாணிக்க வாசகர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 183**

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

183

- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.
- பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. த.தி.தேர்வு அக்-2022
- பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது
- அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| விசும்பு | – வானம் |
| ஊழி | – யுகம் |
| ஊழ் | – முறை |
| தண்பெயல் | – குளிர்ந்த மழை |
| ஆர்தருபு | – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த |
| பீடு | – சிறப்பு |
| ஈண்டி | – செறிந்து திரண்டு |

Q-2 (*) 2023 (*)

**நூல்குறிப்பு**

- ➢ பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
- ➢ பாடப்பகுதியிலுள்ள பாடலை எழுதியவர் கீரந்தையார்.
- ➢ இந்நூல் "ஓங்கு பரிபாடல்" எனும் புகழுடையது.
- ➢ இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல். (த.தி.தேர்வு அக்-2022)
- ➢ உரையாசிரியர்கள் இதில் எழுபது பாடல்கள் இருப்பதாக கூறியுள்ளனர்.
- ➢ இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- ➢ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை , சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்.

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| ஊழ்ஊழ் | – அடுக்குத் தொடர் |
| வளர்வானம் | – வினைத் தொகை |
| செந்தீ | – பண்புத்தொகை |
| வாரா (ஒன்றன்) | – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| கிளர்ந்த | – கிளர் + த் (ந்) + த் + அ |
| கிளர் | – பகுதி |
| த் | – சந்தி |
| த்(ந்) | – ந் ஆனது விகாரம் |
| த் | – இறந்தகால இடைநிலை |
| அ | – பெயரெச்ச விகுதி |

**நினைவில் நிறுத்துவோம்**

- இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார். Q-68 | 2023
- 1300 ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
..........................................................
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" - (திருவாசகம் 3 - 1 - 6)

❖ அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத்துகள் போல அவை நுண்மையாக இருக்கின்றன.

69) பொருந்தாச் சொல்லைத் தேர்க

(அ) வாழ்க்கை (ஆ) ஆளல்

(இ) நடத்தல் (ஈ) பைங்கூழ்

**விடை: (ஈ) பைங்கூழ்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 63**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net

## 2.1.1. சொல்

- 'பூ மலர்ந்தது', 'மாடு புல் தின்றது'.
- ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,

மூவகைமொழி = தனிமொழி, பொதுமொழி, தொடர்மொழி.

**சொல் உணர்த்தும் பாங்கு:**

*அ) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.*
*ஆ) மூவகை இடங்களிலும் வரும்.*
*இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.*
*ஈ) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.*

### தனிமொழி

- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது தனிமொழி எனப்படும். ⟹ எ.கா. கண், படி



- பகாப்பதம்: கண்ணன், படித்தான் – பகுபதம்
- ஒருமொழி ஒருபொருளனவாம் தொடர்மொழி
- பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. - (நன்னூல்260)




### தொடர்மொழி

Q-57

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும். எ.கா. **கண்ணன் வந்தான். மலர் வீட்டுக்குச் சென்றாள்.**

### பொதுமொழி



- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும். எ.கா. **எட்டு – எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.**

  **வேங்கை** - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.

  இவையே **எள் + து** எனவும் **வேம் + கை** எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும்.

  இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் **பொது மொழியாகவும்** இருக்கிறது.

## தொழிற்பெயர்

- ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது **தொழிற்பெயர்** எனப்படும். எ.கா: ஈதல், நடத்தல்

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

Q-69/2022

தொழிற்பெயர் (மூன்று வகைப்படும்)
- விகுதிபெற்ற தொழிற்பெயர்
- முதனிலைத் தொழிற்பெயர்
- முதனிலைதிரிந்த தொழிற்பெயர்

### விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்:

- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற

70) பொருத்தி விடை தேர்க

| புலவர் | கூற்று |
|---|---|
| 1) ஆவூர் மூலங்கிழார் | - i) நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை |
| 2) ஏணிச்சேரி முடமோசியார் | - ii) வலிமை குறைந்தாரோடு போர் செய்தல் கூடாது |
| 3) நல்லந்துவனார் | - iii) செல்வத்துப் பயனே ஈதல் |
| 4) நக்கீரனார் | - iv) பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் |

(அ) 4, 3, 2, 1　　(ஆ) 2, 1, 4, 3
(இ) 2, 3, 1, 4　　(ஈ) 2, 3, 1, 4

**விடை: (ஆ) 2, 1, 4, 3**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 51, 52, 53**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net TEACHER'S

www.Padasalai.Net www.CBSEtips.in





## 1.8. சங்க இலக்கியத்தில் அறம்



* சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.
* சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம் சங்ககாலம்.
* மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் சமூகத்துக்குள்ளே அவன்.
* மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது.
* இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.
* சங்ககாலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை.



ஆர்னால்டு

* ஆனால், சங்ககால அறங்கள் இயல்பானவை. **'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு'** என்று திறனாய்வாளர் **ஆர்னால்டு** கூறுகிறார்.
* அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.
* மன்னன் மக்களுக்குக் கொடை அளிப்பது போன்ற சுவர் ஓவியம் - **சிதம்பரம் (17 ஆம் நூற்றாண்டு)**

### 1.8.1. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

- அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

***இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்***
***அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்புறம். - புறம்***

Q-70 | 2023

- எனச்சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.
- நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

### 1.8.2. அரசியல் அறம்

- சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.



### 1.8.6. உதவி

* **பிறருக்கு உதவுதல்** என்பதைச் சிறந்த அறமாகச் **சங்க இலக்கியங்கள்** காட்டுகின்றன.
* உதவி செய்தலை **ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை'** என்று குறிப்பிடுகிறார்.
* தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம்.
* பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி 139) என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

Q-70/2023

* **'உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்'** என்கிறார் நல்வேட்டனார்.

***சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்***
***புன்கண் அஞ்சும் பண்பின்***
***மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)***

Q-97/2023

* உறவினர் கெடவாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார்.
* இதனால்தான் **"செல்வம் என்பது சிந்தையின் நிறைவு"** என்கிறது தமிழ் இலக்கியம்.
* **'நிறைவடைகிறவனே செல்வன்'** என்கிறது சீன நாட்டுத் தாவோயியம்.
* உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும்.

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





- மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.



துலாக்கோல்

### 1.8.4. போர் அறம்

- தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.
- போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வாராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது.
- தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆலூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.
- எறியார் எறிதல் யாவணது எறிந்தோர் எதிர்சென்று எறிதலும் செல்லான் - புறம் 301.

### 1.8.5. கொடை

- வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
- ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.
- *செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறம் 189:7–8)* என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (த.தி. தேர்வு அக்டோபர் - 2022)
- கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுகின்றனர்.
- பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.
- எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.
- ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன.
- பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.
- புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.
- அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.
- வள்ளல்கள் 'இல்லோர் ஒக்கல் தலைவன்' 'பசிப்பிணி மருத்துவன்' என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். (த.தி. தே - அக்டோபர் - 2022)
- வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார் (த. தி. தேர்வு - அக்டோபர் - 2022)
- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.

71) பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர்

(அ) திருவாரூர் (ஆ) எட்டயபுரம்

(இ) திருமறைக்காடு (ஈ) திருச்செந்தூர்

**விடை: (இ) திருமறைக்காடு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 188**

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





**இறைவனின் பதில்**

6. ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உனை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத் தில் யாம் வைத்த அருளினா ல் வந்தேம் என்னா . (2637)

சொல்லும் பொருளும் : நீபவனம் – கடம்பவனம்

பொருள்: இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்றார்.

**மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனிடம் வேண்டுதல்**

7. பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரமயோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே (2638)

சொல்லும் பொருளும்: மீனவன் – பாண்டிய மன்னன்

பொருள்: வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், உமையை ஒரு பாகத்திற் கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

**மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்**

8. விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி. (2641)

சொல்லும் பொருளும் : கவரி – சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது. அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரண கும்பம் கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப்பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

**மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்**

9. புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார் க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத் தீத் தணிந்தது என்னா (2644)

சொல்லும் பொருளும் : நுவன்ற – சொல்லிய, என்னா – அசைச் சொல்

பொருள்: பாண்டியன், " புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், " மன்னா , நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர் .

Q – 71 | 2023

**நினைவில் நிறுத்துவோம்**



- பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர்
- பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சிவபக்தி மிக்கவர்.
- **இயற்றியவை:** வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி
- திருவிளையாடற் கதைகள் சிலப்பதிகாரம் முதற்கொண்டு கூறப்பட்டு வந்தாலும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமே விரிவும் சிறப்பும் கொண்டது.

72) பஞ்சுரப்பண், செவ்வழிப்பண் - கருப்பொருள்களின் நிலங்கள் முறையே

(அ) பாலை, நெய்தல்   (ஆ) முல்லை, நெய்தல்

(இ) நெய்தல், பாலை   (ஈ) நெய்தல், முல்லை

**விடை: (அ) பாலை, நெய்தல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 83**

| கருப் பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல் ஆயர். ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |

83

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல் வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

Q-72/2023

**நினைவில் நிறுத்துவோம்!**

- கவிதையில் உரிப்பொருளை இக்கருப்பொருள் பின்னணியில் அமைத்து பாடுவது நம் மரபு.
- ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே தெய்வம் முதலாகத் தொழில் வரையில் தனித்தனியே இடம் பெற்றுள்ளது.
- ✓ மருதநிலக் கருப்பொருள் பட்டியலில் இடம்பெறாத பறவை ____ விடை: வாத்து
  - (த.தி.தே.அ 22-23)

73) தகவல்களைக் கொடுத்தால் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கித் தரும் மென்பொருள்

(அ) இலா (ஆ) பெப்பர்

(இ) வேர்டுஸ்மித் (ஈ) வாட்சன்

**விடை: (இ) வேர்டுஸ்மித்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 23**

## 1.4. செயற்கை நுண்ணறிவு

### 1.4.1. மின்னணுப் புரட்சி



- 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் (Personal Computers) வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் (Digital Revolution) காரணமாயின.
- அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.
- அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே, அதனுள் பொதிந்திருப்பது **செயற்கை நுண்ணறிவு.**
- "அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம்; இதுவே சுருக்கமான வழி' என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.
- நமது திறன்பேசியோ, கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் தேர்ந்தெடுத்துத் திரையில் காண்பிக்கிறதல்லவா? அங்கு இணைந்திருப்பது செயற்கை நுண்ணறிவுதான்.
- செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது.
- கண் அறுவை மருத்துவம் செய்கிறது; சமைக்கிறது; சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.
7. "கறங்கு இசை விழவின் உறந்தை" - இவ்வரிகள் இடம் பெற்ற நூல்?
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) பரிபாடல்

8. "கறங்கு இசை விழவின் உறந்தை" என்பதில் உறந்தை என்பது?
அ) கரந்தை ஆ) கூடல்
இ) உறையூர் ஈ) மூதூர்

9. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினம் சாகித்திய அகாதமி விருது பெற்ற ஆண்டு?
அ) 1991 ஆ) 1992
இ) 1993 ஈ) 1994

10. கீழ்க்கண்டவர்களுள் கரிசல் இலக்கியத்துடன் தொடர்பில்லாதவர்?
அ) பா. செயப்பிரகாசம் ஆ) வீரவேலுச்சாமி
இ) சுஜாதா ஈ) சோ. தர்மன்

11. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினத்திற்காகச் சாகித்திய அகாதமி விருது பெற்றவர் யார்?
அ) ப.சிங்காரம் ஆ) மு. மேத்தா
இ) சு. சமுத்திரம் ஈ) கி.ராஜநாராயணன்

12. கரிசல் இலக்கியத்தை முதலில் எழுதியவர்?
அ) பா. செயப்பிரகாசம் ஆ) வீரவேலுச்சாமி
இ) கு. அழகிரிசாமி ஈ) கி.ராஜநாராயணன்

13) கோபல்லபுரத்து மக்கள் புதினம் ____ மக்களின் வாழ்வியல் காட்சிகளைக் குறிப்பிடுகிறது.
அ) கரிசல் பூமி ஆ) இடைசெவல்
இ) உறையூர் ஈ) இடைசெருவல்

14) ____ ஐ சுற்றிய வட்டாரப்பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம்.
அ) திருப்பரங்குன்றம் ஆ) சிவகிரி
இ) கோவில்பட்டி ஈ) காளையூர்

## 3.4. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை



### நினைவில் நிறுத்துவோம்:




- ஸ்டீபன் ஹாக்கிங் (Stephen Hawking) எழுதிய நூல்களுள், "காலத்தின் சுருக்கமான வரலாறு" என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.
- 1988 ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடி படிகளுக்கு மேல் விற்பனையானது.
- பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் (Big Bang Theory) உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார். இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்தார். பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை" என்றார் ஸ்டீபன் ஹாக்கிங்.

> தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதி தான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்.
> - ஸ்டீபன் ஹாக்கிங்



**முன்தோன்றிய மூத்தகுடி:**

"கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை"
-அகநானூறு 93:20-21

கரூர் மாவட்டத்தின்
கருவூர் (கரூர்)

2-88/2023

26. நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தவர் யார்?
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

27. "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" என்ற அமைப்பை உருவாக்கியவர்?
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

28. "உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்" என்று கூறியவர்?
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

29. "களஞ்சியம்" என்னும் பெயரில் மகளிர் குழுவை ஆரம்பித்தவர் யார்?
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

30. நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு வாஜ்பாய் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றவர் ____
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

31. சின்னப்பிள்ளை அவர்கள் பற்றிய கூற்றுக்களில் தவறானது எது?
அ) இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு சுனாமி வந்து ஊரெல்லாம் பாதிப்பு அடைந்தபோது குழுவாகச் சென்று மீட்பு பணி செய்தனர்.
ஆ) நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றவர்.
இ) தாமரைத்திரு விருது மட்டும் இன்னும் இவருக்குக் கிடைக்கவில்லை.
ஈ) தமிழக அரசின் ஔவை விருதையும் தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார்.

32. சின்னப்பிள்ளை அவர்கள் பெறாத விருது?
அ) ஔவை விருது ஆ) தாமரைத்திரு விருது
இ) தாமரைச் செல்வணி ஈ) ஸ்திரீ சக்தி புரஸ்கார்

33. மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கண்மாயில்மீன் பிடிக்கும் குத்தகையைப் பெற்றவர் ____
அ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆ) பால சரஸ்வதி
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) சின்னப்பிள்ளை

## 3.8. இராமானுசர் - நாடகம்

### நினைவில் நிறுத்துவோம்:

- நாளுக்கு ஒருமுறை மலர்வது சண்பகம்
- ◆ ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது – பிரம்ம கமலம். ◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)
- பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது – குறிஞ்சி.
- தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே மலர்வது – மூங்கில்.
- மேற்குறிப்பிட்டவைகளைப் போன்றே நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்கள் – ஞானிகள்.

**முன்தோன்றிய மூத்தகுடி:**
"கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேவண் பாரிதன் பறம்பு நாடே!"
- புறநானூறு 118: 4-5

சிவகங்கை மாவட்டத்தின்
பிரான் மலை (பறம்பு மலை) ◆
◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)

### காட்சி - 1

இடம்: திருக்கோட்டியூர் பூரணர் இல்லம்
பாத்திரங்கள்: இராமானுசர் - கூரேசர் – முதலியாண்டான் – பூரணர்

**முதலியாண்டான்:** (இராமானுசரைப் பார்த்து) சுவாமிகளே! புனித திருமந்திரத் திருவருள் வேண்டி மீண்டும் இங்கு வந்துள்ளோம். இன்றாவது நமது விருப்பம் நிறைவேறுமா?

**இராமானுசர்:** முதலி, இதுவரை எத்தனை முறை வந்துள்ளோம்?

**முதலியாண்டான்:** பெரிய நம்பிகள் கூறினாரென்று பதினெட்டு முறை வந்துள்ளோம் சுவாமிகளே!

**இராமானுசர்:** வருந்த வேண்டாம் முதலியாண்டார் நம் விருப்பம் இன்று உறுதியாக நிறைவேறும்.

**முதலியாண்டான்:** எப்படிக் கூறுகிறீர்கள் சுவாமி?

**இராமானுசர்:** திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச்

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

## 3.6. பாய்ச்சல் - சா. கந்தசாமி

### நினைவில் நிறுத்துவோம்:

- 'தக்கையின் மீது நான்கு கண்கள்' என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சா.கந்தசாமி. இவர் மயிலாடுதுறை நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகத்தில் மிகவும் புகழ்பெற்றார். 'விசாரணைக் கமிஷன்' என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார். Q-28/2023
- சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார்.
- நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.






**முன்தோன்றிய மூத்தகுடி:**

"ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்து தொண்டியோர்" Q-88/2023

- சிலப்பதிகாரம், ஊர்காண்காதை 107-108

இராமநாதபுரம் மாவட்டத்தின் தொண்டி

- உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான்.
- கலைநிகழ்வின் ஊடாக அவன் பெருமிதம் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும்.
- தன் கலையைப் பின்பற்ற, தகுந்த வாரிசு உருவாகிறபோது அவன் கொள்கிற மகிழ்ச்சி அளப்பரியது.

**பாய்ச்சல்:**

- தெருமுனையில் ஏதோ சத்தம் ஆளோடித் தூணைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த அழகு தலையை நீட்டிப் பார்த்தான், இவனையொத்த சிறுவர்கள் பாதி பறக்க ஓடிக்
- ஆள் உயரக் குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தான் கண்டதை இவனால் நம்ப முடியவில்லை. கண்ணுக்குத் தெரிந்தது நிஜமா என்கிற தவிப்பு.

89) "முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத
<u>முனிவு</u> ஈர்ப்ப ....." என்னும் பாடலடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்க.

(அ) பயம் (ஆ) வியப்பு

(இ) சினம் (ஈ) ஐயம்

**விடை: (இ) சினம்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் -**

TEACHER'S CARE ACADEMY

சொல்லும் பொருளும் : கேள்வியினான் – நூல் வல்லான், கேண்மையினான் – நட்பினன்
பொருள் : குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன்' எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார் .

**மன்னன் தன் புலமையை மதிக்காமை குறித்து இறைவனிடம் முறையிடல்**

2. சந்நிதியில் வீழ்ந் து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன்நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தா ன் சிறிது முடி துளக்கான் ஆகி. (2617)

சொல்லும் பொருளும் : தார் - மாலை, முடி – தலை
பொருள்: இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே ! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.

3. என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமைப் பாவை
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி. (2619)

சொல்லும் பொருளும் : முனிவு - சினம் → உ– 89 | 2023

பொருள்: இடைக்காடனார் இறைவனிடம், "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார் அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

90) கண்ணிற்கு காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்

(அ) பாங்கர் மலர் (ஆ) பலா மலர்

(இ) பூளை மலர் (ஈ) கள்ளி மலர்

**விடை: (ஆ) பலா மலர்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் -**

TEACHER'S CARE ACADEMY

4. பூங்குழலி வந்தாள் - இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.
 - பள்ளியில் மணி ஒலித்தவுடன் பூங்குழலி வந்தாள் .

5. மலை வாழ்வார் - ஏழாம் வேற்றுமைத் தொகை
 - மலை வாழ்வார் மரங்களை அதிகம் வளர்ப்பவர்கள்.

6. முத்துப்பல் - உவமைத்தொகை
 - பல் வரிசை சீராக இருக்கும் பெண்ணை முத்துப்பல் அழகி என்பர்.

**வினாக்கள்:**

1. இன்சொல் இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) ஏழாம் வேற்றுமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை

2. இலக்கணக் குறிப்பு தருக - மலை வாழ்வார்
அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) ஏழாம் வேற்றுமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை

3. முத்துப்பல் இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) ஏழாம் வேற்றுமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை

4. கீரிபாம்பு இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) ஏழாம் வேற்றுமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை

5. எழுகதிர் இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பண்புத்தொகை
ஆ) வினைத்தொகை
இ) ஏழாம் வேற்றுமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

- பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்
- பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள்: ஆல மலர்: பலா மலர்.
  Q-90 | 2023
- மலர் உண்டு: பெயரும் உண்டு: ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர்.
- அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா. ◆ (த.தி.தே.அ-2022)
- பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.
- இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும் - கோவை. இளஞ்சேரன்

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



91) கூற்று 1: தேவராட்டத்தில் எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது.

கூற்று 2: மாதவி ஆடிய ஆடல் வகைகள் பன்னிரண்டு ஆகும்.

கூற்று 3: மயிலாட்டத்தில் "கம்பீரத்துடன் ஆடுதல்" என்பது தனிச்சிறப்பானது.

(அ) கூற்று 1 தவறு, கூற்று 2 மற்றும் 3 சரியானவை

(ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 மற்றும் 3 தவறானவை

(இ) கூற்று 1, 2 சரியானவை, கூற்று 3 தவறானவை

(ஈ) கூற்று 1, 2 தவறானவை, கூற்று 1 சரியானது

**விடை: (ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 மற்றும் 3 தவறானவை**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 37, 38**

37

## 1. 6. நிகழ்கலை



- நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன.
- மக்கள் பண்பாட்டின் பதிவுகள் நிகழ்கலைகள்.
- சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன நிகழ்கலை ஆகும்.
- சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.
- இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.
- பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

### 1.6.1. கரகாட்டம்

- பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம்.
- 'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது, கரகாட்டம்.



- இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.
- கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர்.
- தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர்.
- கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர்.
- இதற்கு நையாண்டி மேள இசையும் (நாகசுரம், தவில், பம்பை) போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. (த.தி. தேர்வு. அக். 2022)




- ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு.
- கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.
- "நீரற வறியாக் கரகத்து" (புறம்.1) என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது.

Q-91/2023

- சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.
- இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது. இது தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

TEACHER'S CARE ACADEMY
www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY



- (ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல்) ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக் காட்டுவர்.

### 1.6.3. காவடியாட்டம்

Q–37/2023



- கா-என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்
- இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.
- மரத்தண்டின் இரு முனைகளிலும் சிறப்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர்.
- அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர்.
- மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர்.
- காவடியின் அமைப்புக்கேற்ப **மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி** என்று அவற்றை அழைக்கின்றனர்.
- இலங்கை, மலேசியா உட்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

### 1.6.4. ஒயிலாட்டம்

- ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம்.
- உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறி மாறி, மனத்தை ஈர்க்கும். Q–91/2023



- இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.
- ஒயிலாட்டத்தை **இருவரிசையாக** நின்றும் ஆடுகின்றனர்.
- ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகிநின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் **ஆண்கள் ஆடுவதே** வழக்கில் உள்ளது.
- ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு.
- இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட **குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு** போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. (த.தி. தேர்வு. அக்டோபர் 2022)

### 1.6.5. தேவராட்டம், சேர்வையாட்டம்



- தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.
- இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.
- **உறுமி** எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. (த.தி. தேர்வு. அக்டோபர் 2022)
- இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது.
- இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது **பொது மரபாக** உள்ளது. Q–91/2023
- **தேவராட்டம்** குறிப்பாகச் **சடங்கு சார்பாக** ஆடப்படுகின்றது.
- தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம்.
- ஆட்டக்கலைஞர்கள் **சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா** ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர். இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

92) "அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை" - இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் தொகுப்பு

(அ) மீட்சி விண்ணப்பம் | (ஆ) குயில் பாட்டு

(இ) கோடை வயல் | (ஈ) ஓர் இரவு

**விடை: (இ) கோடை வயல்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 209**



35. "நெடுவேற்குன்றம்" - என்று அழைக்கப்படுவது?
(அ) திருச்செந்தூர் (ஆ) திருமலை
(இ) சுருளிமாலை (ஈ) திருமால் குன்றம்

36) கோவலன், கண்ணகி, மாதவி போன்றவர்களின் வாழ்க்கையைப் பாடும் காப்பியம்?
அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி

37) துகிர் - என்பதன் பொருள்?
அ) முத்து ஆ) பவளம்
இ) மாணிக்கம் ஈ) புஷ்பராகம்

38) சிற்பியைக்குறிப்பிடும் சொல்லைத் தேர்க?
அ) கண்ணுள் வினைஞர் ஆ) மண்ணீட்டாளர்
இ) சாலியர் ஈ) பாசவர்

39) சிலப்பதிகாரத்தின் முதற்காண்டம்?
அ) மதுரை ஆ) புகார்
இ) வஞ்சி ஈ) காஞ்சி

40) கண்ணகி கணவனை இழந்த இடம்?
அ) புகார் ஆ) மதுரை
இ) வஞ்சி ஈ) திருமால் குன்றம்

41) திருமால் குன்றம் என்பது?
அ) சுவாமிமலை ஆ) அழகர்மலை
இ) கொடும்பாளூர் ஈ) திருவரங்கம்

42) கோவலன் கண்ணகி கதையை இளங்கோவடிகளுக்கு கூறியவர்?
அ) கம்பர் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) சேக்கிழார் ஈ) திருத்தக்கதேவர்

43) "குழலினும் யாழினும் குரல் முதலும் ஏழும்" - இவ்வடிகளில் "ஏழும்" என்பது?
அ) குணங்கள் ஆ) இசைகள்
இ) விருத்தங்கள் ஈ) பொருத்தங்கள்

44) நாட்டுப்படலம் - இடம் பெற்ற காண்டம்?
அ) அயோத்தியா காண்டம் ஆ) பாலகாண்டம்
இ) யுத்த காண்டம் ஈ) கிட்கிந்தா காண்டம்

45) கங்கைப்படலம் - இடம் பெற்ற காண்டம்?
அ) அயோத்தியா காண்டம் ஆ) பாலகாண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) ஆரண்ய காண்டம்

## 5.8. ஞானம் - தி.சொ.வேணுகோபாலன்





சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்,
தெருப்புழுதி வந்தொட்டும்.
கரையான் மண் வீடு கட்டும்.
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருத்தினேன்.
காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை:
அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!

Q-92/2023

- கோடை வயல் - தொகுப்பு

### பாடலின் பொருள்




- இடையறாது செய்யும் அறப்பணியாம் சமூகப் பணியை உணர்த்துகிறது. வீட்டின் சாளரத்தில் எத்தனை முறை புழுதி ஒட்டினாலும் கரையான் மண்வீடு கட்டினாலும் துடைக்கிறோம்; சுத்தப்படுத்துகிறோம். சுத்தப்படுத்தும் இப்பணியை முதிய வயதாகும்வரை செய்துகொண்டேதான் இருக்கிறோம்.
- சமுதாயத்திலும் சீர்கேடுகள் தொடர்ந்து ஏற்படும்; அவலங்கள் நடந்துகொண்டேதான் இருக்கும் எனினும் அவற்றைக் தடுத்து சமுகத்தைச் சீர்படுத்தும் பணியான அறப்பணியை நாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதை, '**ஞானம்**' கவிதை உணர்த்திகிறது.

### நினைவில் நிறுத்துவோம்

- நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்ட கவிதை தி.சொ.வேணுகோபாலனின் '**கோடை வயல்**' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- இவர் திருவையாற்றில் பிறந்தவர், மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர். மேலும், '**எழுத்து**' காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர்.
- இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு **மீட்சி விண்ணப்பம்.**

### பயிற்சி வினாக்கள்

1. ஞானம் என்னும் கவிதையை இயற்றியவர்?
(அ) கண்ணதாசன் (ஆ) உமா மகேஸ்வரி (இ) கு.ப.ராஜகோபாலன் (ஈ) தி. சொ. வேணுகோபாலன்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



93) "பஞ்சபூதங்களின் அறிவியல் கதைகள்" என்னும் நூலின் ஆசிரியர்

(அ) ச. தமிழ்ச் செல்வன் (ஆ) ச. முகமது அலி

(இ) திலகவதி (ஈ) நீலமணி

**விடை: (ஈ) நீலமணி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 143**

143

## 4.1.3. தமிழ் நூல்களும் ஆசிரியரும்

1. நாம் என் தமிழ் கற்க வேண்டும் - முனைவர் சேதுமணி மணியன்
2. தவறின்றித் தமிழ் எழுதுவோம் - மா. நன்னன்
3. பச்சை நிழல் - உதயசங்கர்
4. குயில்பாட்டு - பாரதியார்
5. அதோ அந்தப் பறவை போல - ச. முகமது அலி
6. உலகின் மிகச்சிறிய தவளை - எஸ்.ராமகிருஷ்ணன்
7. திருக்குறள் தெளிவுரை - வ.உ.சிதம்பரனார்
8. சிறுவர் நாடோடிக் கதைகள் - கி.ராஜநாராயணன்
9. ஆறாம் திணை - மருத்துவர் கு.சிவராமன்
10. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் - நீலமணி
11. அன்றாட வாழ்வில் அறிவியல் - ச.தமிழ்ச்செல்வன்
12. காலம் - ஸ்டீபன் ஹாக்கிங்
13. சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று - தமிழில் வல்லிக்கண்ணன்
14. குட்டி இளவரசன் - தமிழில் வெ.ஸ்ரீராம்
15. ஆசிரியரின் டைரி - தமிழில் எம்.பி.அகிலா
16. தேன்மழை - சுரதா
17. திருக்குறள் நீதி இலக்கியம் - க.த.திருநாவுக்கரசு
18. நாட்டார் கலைகள் - அ.கா.பெருமாள்
19. என் கதை - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்
20. வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்
21. நாற்காலிக்காரர் (நாடகம்) - ந.முத்துசாமி ◆ (த.தி.தேர்வு, அக்-2022)
22. அறமும் அரசியலும் - மு.வரதராசனார்
23. அபி கவிதைகள் - அபி
24. எண்ணங்கள் - எம்.எஸ். உதயமூர்த்தி
25. யானை சவாரி - பாவண்ணன்
26. கல்மரம் - திலகவதி
27. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் - ந. முருகேசபாண்டியன்










94) "கானடை" என்னும் சொல் பிரிபடும் முறைகளில் சரியானவற்றைத் தேர்க.

1) கா + னடை

2) கான் + அடை

3) கான் + நடை

4) கால் + நடை

(அ) 2, 3 மட்டும் (ஆ) 1, 2, 3 மட்டும்

(இ) 2, 3, 4 மட்டும் (ஈ) அனைத்தும் சரி

**விடை: (இ) 2, 3, 4 மட்டும்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 162**

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





**நயம் பாராட்டுக:**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
◆ "ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே"
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

◆ (த.தி. தேர்வு, அக்டோபர் 2022)



- வள்ளலார்

**இடம் பெற்ற முக்கிய நயங்கள்:-**

அணி: உயர்வு நவிற்சி அணி

எதுகை: கோடையிலே ஓடையிலே மேடையிலே ஆடையிலே

மோனை: கோடையிலே – குளிர்தருவே; மேடையிலே – மென் காற்றில்
ஓடையிலே – உகந்தக் கண்ணீர்; ஆடையிலே – ஆடுகின்ற

**கண்டுபிடித்து எழுதுக:**

❖ ஔவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் ஆத்திசூடி ஆகிய இரண்டு நூல்கள் எழுத்துப் பற்றி அறிய துணை நிற்கிறது.

**ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.**

ஒன்று:
கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

இரண்டு:
தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்.

மூன்று:
காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

நான்கு:
அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காறு இயன்றது அறம்.

ஐந்து:
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

ஒன்பது:
திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் ஒன்பது (9). ஒன்பது என்ற எண்ணை திருவள்ளுவர் தம் நூலில் எங்கும் பயன்படுத்தவில்லை

பத்து:
நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

**சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக:**

1. கானடை
   கான் அடை - காட்டைச் சேர்
   கான் நடை - காட்டுக்கு நடத்தல்
   கால் நடை - காலால் நடத்தல்
2. வருந்தாமரை
   வரும் தாமரை - தாமரை மலர்

Q–94/2023

95) "எச்சரிக்கையாக இரு பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்" - இக்குறிப்புகளுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்க.

(அ) அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு.

(ஆ) தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.

(இ) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு.

(ஈ) அறனினும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.

**விடை: (ஆ) தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 199**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in





பொருள்: மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.

**8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.**

Q–38/2023

பொருள்: தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

அணி: உவமை அணி

**9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில்.**

பொருள்: ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

### கூடாநட்பு (83)

**10. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.**

பொருள்: பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர்அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

Q–95/2023

### பகைமாட்சி (87)

**11. அன்பிலான் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு**

பொருள்: சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும் வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்?

**12. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான் தஞ்சம் எளியன் பகைக்கு.**

Q–74/2023

பொருள்: மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

### குடிசெயல் வகை (103)

**13. ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின் நீள்வினையால் நீளும் குடி.**

பொருள்: விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

**14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு.**

பொருள்: குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயர்ச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

### நல்குரவு (105)

**15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னா தது.**

பொருள்: ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும். அணி: சொற்பொருள் பின்வருநிலை அணி

### இரவு (106)

**16. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.**

பொருள்: தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

**17. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்ப துடைத்து.**

பொருள்: இகழ்ந்து எள்ளல் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

### கயமை (108)

**18. மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரி யாம்கண்ட தில். (த.தி.தே. அக்-22)**

பொருள்: கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

அணி: உவமையணி

**19. தேவர் அனையர் கயவர் அவரும்தாம் மேவன செய்தொழுக லான்.**

பொருள்: தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர். அணி: வஞ்சப் புகழ்ச்சி அணி

**20. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்.**

பொருள்: ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவிசெய்வர் சான்றோர்; கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

அணி: உவமை அணி

96) பொருத்தி விடை தேர்க.

| | |
|---|---|
| 1) Aesthetics | - i) தொன்மம் |
| 2) Tempest | - ii) ஒப்பெழுத்து |
| 3) Myth | - iii) அழகியல் |
| 4) Homograph | - iv) பெருங்காற்று |

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

(அ) 3, 1, 4, 2 (ஆ) 3, 4, 1, 2

(இ) 4, 1, 3, 2 (ஈ) 2, 3, 1, 4

**விடை: (ஆ) 3, 4, 1, 2**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 138**

138

## 4. மொழிப்பயிற்சி

### 4.1.1. கலைச் சொற்கள்

1. Vowel - உயிரெழுத்து
2. Consonant - மெய்யெழுத்து
3. Homograph - ஒப்பெழுத்து
4. Monolingual - ஒரு மொழி
5. Conversation - உரையாடல்
6. Discussion - கலந்துரையாடல்
7. Storm - புயல்
8. Land Breeze - நிலக்காற்று
9. Tornado - சூறாவளி
10. Sea Breeze - கடற்காற்று
11. Tempest - பெருங்காற்று
12. Whirlwind - சுழல்காற்று
13. Classical literature - செவ்வியல் இலக்கியம்
14. Epic literature - காப்பிய இலக்கியம்
15. Devotional literature - பக்தி இலக்கியம்
16. Ancient literature - பண்டைய இலக்கியம்
17. Regional literature - வட்டார இலக்கியம்
18. Folk literature - நாட்டுப்புற இலக்கியம்
19. Modern literature - நவீன இலக்கியம்
20. Nanotechnology - மீநுண் தொழில்நுட்பம்
21. Space Technology - விண்வெளித் தொழில்நுட்பம்
22. Biotechnology - உயிரித் தொழில்நுட்பம்
23. Cosmic rays - விண்வெளிக் கதிர்கள் ◆
   ◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)
24. Ultraviolet rays - புற ஊதாக் கதிர்கள் ◆
   ◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)
25. Infrared rays - அகச்சிவப்புக் கதிர்கள்
26. Emblem - சின்னம்
27. Intellectual - அறிவாளர்
28. Thesis - ஆய்வேடு
29. Symbolism - குறியீட்டியல்
30. Aesthetics - அழகியல், முருகியல்
31. Terminology - கலைச் சொல்
32. Artifacts - கலைப் படைப்புகள்
33. Myth - தொன்மம்
34. Consulate - துணைத்தூதரகம்
35. Patent - காப்புரிமை
36. Document - ஆவணம்
37. Guild - வணிகக்குழு
38. Irrigation - பாசனம்
39. Territory - நிலப்பகுதி
40. Belief - நம்பிக்கை
41. Philosopher - மெய்யியலாளர்
42. Renaissance - மறுமலர்ச்சி ◆
   ◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)
43. Revivalism - மீட்டுருவாக்கம் ◆
   ◆ (தமிழ் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022)
44. Humanism - மனிதநேயம்
45. Cultural Boundaries - பண்பாட்டு எல்லை
46. Cabinet - அமைச்சரவை
47. Cultural values - பண்பாட்டு விழுமியங்கள்

**வினாக்கள்:**

1. Vowel என்னும் சொல்லுக்கான கலைச்சொல்

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து

இ) ஒப்பெழுத்து ஈ) குற்றெழுத்து

2. பொருத்தி விடை தேர்க

a) Monolingual - 1) உயிரெழுத்து

b) Homograph - 2) மெய்யெழுத்து

c) Consonant - 3) ஒப்பெழுத்து

d) Vowel - 4) ஒரு மொழி

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3

இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

3. பொருந்தாத இணைகளைத் தேர்க.

1) Conversation - உரையாடல்

2) Storm - நிலக்காற்று

3) Land Breeze - புயல்

4) Discussion - கலந்துரையாடல்

அ) 2, 3 ஆ) 2,1 இ) 4, 3 ஈ) 4, 1

4. Tornado என்னும் சொல்லுக்கான கலைச் சொல்லைத் தேர்க

அ) நிலக்காற்று ஆ) கடற்காற்று

இ) சூறாவளி ஈ) புயல்

5. பொருத்தி விடை தேர்க

a) Land Breeze - 1) கடற்காற்று

b) Tempest - 2) நிலக்காற்று

c) Sea Breeze - 3) சுழல்காற்று

d) Whirlwind - 4) பெருங்காற்று

அ) 2 ,4, 1, 3 ஆ) 2, 1, 4, 3

இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

6. பொருத்தி விடை தேர்க

a) Classical literature 1) காப்பிய இலக்கியம்

b) Epic literature 2) பண்டைய இலக்கியம்

c) Devotional literature 3) இன்னிசை அளபெடை

d) Ancient literature 4) செவ்வியல் இலக்கியம்

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 4, 3

இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3

7. Regional literature என்னும் சொல்லின் கலைச்சொல்லைத் தேர்க

அ) காப்பிய இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்

இ) வட்டார இலக்கியம் ஈ) நவீன இலக்கியம்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

97) “புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே” - இப்பாடலடிகள் உணர்த்தும் சரியான கூற்று.

(அ) உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும்

(ஆ) செல்வம் என்பது சிந்தையின் நிறைவு

(இ) நிறைவடைகிறவனே செல்வன்

(ஈ) உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்

**விடை: (ஈ) உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 53**

53

### 1.8.6. உதவி

- பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.
- உதவி செய்தலை **ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை'** என்று குறிப்பிடுகிறார்.
- தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம்.
- பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி 139) என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.
- **'உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்'** என்கிறார் நல்வேட்டனார்.

*சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்*
*புன்கண் அஞ்சும் பண்பின்*
*மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)*

Q-70/2023 Q-97/2023

- உறவினர் கெடவாழ்பவனின் பொலிவு அழியும் என்று **பெருங்கடுங்கோ** குறிப்பிடுகிறார்.
- இதனால்தான் **"செல்வம் என்பது சிந்தையின் நிறைவு"** என்கிறது தமிழ் இலக்கியம்.
- **'நிறைவடைகிறவனே செல்வன்'** என்கிறது சீன நாட்டுத் தாவோயியம்.
- உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும்.

### 1.8.7. வாய்மை

- வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே **உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா"** என்று இலக்கியங்கள் கூறுகின்றன.
- நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான்.
- மெய் பேசும் **நா மனிதனை** உயர்த்துகிறது. **பொய்பேசும்** நா மனிதனைத் தாழ்த்துகிறது.
- **'பிழையா நன்மொழி'** என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் **'பொய் மொழிக் கொடுஞ்சொல்'** என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. **(த. தி. தேர்வு - அக்டோபர் - 2022)**
- நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.
- வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

98) “நனந்தலை உலகம்....” என்று தொடங்கும் முல்லைப்பாட்டில் வரும் மன்னனின் பெயர்

(அ) சேரன் செங்குட்டுவன் (ஆ) மனுநீதிச் சோழன்

(இ) மாவலி (ஈ) பொற்கைப் பாண்டியன்

**விடை: (இ) மாவலி**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 172**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

19) எட்டையபுரத்தின் ஏந்தல் என்று அறியப்பட்டவர்?
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) சி.சு. செல்லப்பா ஈ) கவிமணி

20) குழந்தைகளுக்கான நீதிகளைப் பாடலில் தந்தவர்?
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) தமிழ்ஒளி ஈ) தேனரசன்



## 5.2.1 முல்லைப்பாட்டு - நப்பூதனார்

### நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
- த.தி.தேர்வு அக்-2022
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
- த.தி.தேர்வு அக்-2022
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்
- அடி – 1 - 17

### முல்லைப் பாட்டின் நூல் குறிப்பு

- முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1-17 அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைபாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது; முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

### சொல்லும் பொருளும்

- நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
- நேமி - சக்கரம்
- கோடு - மலை
- கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
- நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
- தூஉய் - தூவி
- விரிச்சி - நற்சொல்
- சுவல் - தோள்

### பாடலின் பொருள்

- அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.
- துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.
- அங்கு, சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஒர் இடைமகள் கண்டாள். குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஒட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

99) "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" - இக்குறட்பாவில் பயின்று வரும் தொடை நயம்.

(அ) முரண்தொடை (ஆ) அளபெடைத்தொடை
(இ) இரட்டைத்தொடை (ஈ) செந்தொடை

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.CBSEtips.in



TEACHER'S CARE ACADEMY

விடை: (அ) முரண்தொடை

விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 178

178

2. பொருத்தி விடை தேர்க.

(a) அசைஇ - 1) சுற்றம்
(b) கடும்பு - 2) அருமை
(c) ஆரி - 3) கூத்தர்
(d) வயிரியம் - 4) இளைப்பாறி

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3
(இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

3. பொருத்தி விடை தேர்க.

(a) இறடி - 1) தங்கி
(b) அல்கி - 2) தினை
(c) நரலும் - 3) சோறு
(d) பொம்மல் - 4) ஒலிக்கும்

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3
(இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

4. சொல்லிசை அளபெடை அல்லாததைத் தேர்க.

(அ) அசைஇ (ஆ) நசைஇ
(இ) எடுப்பதூஉம் (ஈ) கெழீஇ

5. மலைபடுகடாமின் மற்றொரு பெயர்?

(அ) திருமுருகாற்றுப்படை
(ஆ) சிறுபாணாற்றுப்படை
(இ) பெரும்பாணாற்றுப்படை
(ஈ) கூத்தராற்றுப்படை

6. மலையை யானையாக உருவம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் ____ என்று பெயர்

(அ) திருமுருகாற்றுப்படை
(ஆ) சிறுபாணாற்றுப்படை
(இ) பெரும்பாணாற்றுப்படை
(ஈ) மலைபடுகடாம்

7. நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெருங்கௌசிகனார் பாடியது____

(அ) திருமுருகாற்றுப்படை
(ஆ) சிறுபாணாற்றுப்படை
(இ) பெரும்பாணாற்றுப்படை (ஈ) மலைபடுகடாம்

8. மலைந்து பகுபத உறுப்பிலக்கணம் தருக

(அ) மலை+த்(ந்)+த்+உ (ஆ) மலைத்+ உ
(இ) மலை+த்+உ (ஈ) மலை+ந்+உ

9. பொழிந்த என்பதில் உள்ள இடைநிலையைத் தேர்க?

(அ) இறந்தகால இடைநிலை
(ஆ) எதிர்கால இடைநிலை
(இ) நிகழ்கால இடைநிலை
(ஈ) எதிர்கால இடைநிலை

10. "அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்" என்ற வரிகள் இடம் பெற்ற நூல் ____

(அ) திருமுருகாற்றுப்படை
(ஆ) சிறுபாணாற்றுப்படை
(இ) பெரும்பாணாற்றுப்படை
(ஈ) மலைபடுகடாம்

11. பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில் பெறாத கூத்தனிடம் நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ______

(அ) சிற்றிலக்கியம் (ஆ) ஆற்றுப்படை
(இ) குறவஞ்சி (ஈ) பள்ளு

12. மலைபடுகடாமில் இடம்பெற்றுள்ள பாடல் அடிகளின் எண்ணிக்கை _____

(அ) 269 (ஆ) 103 (இ) 248 (ஈ) 583

13. "கிழவியர் போலக் கேளாது கெழீஇ" - இப்பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?

(அ) பெருங்கௌசிகனார்
(ஆ) அதிவீரராம பாண்டியர்
(இ) நப்பூதனார் (ஈ) பாரதியார்

14. "குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவர்" – இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

(அ) காசிக்காண்டம் (ஆ) முல்லைப்பாட்டு
(இ) மலைபடுகடாம் (ஈ) விவேக சிந்தாமணி

15. மலைபடுகடாம் ____ நூல்களுள் ஒன்றாகும்

(அ) எட்டுத்தொகை (ஆ) பத்துப்பாட்டு
(இ) நீதிநூல்கள் (ஈ) பக்தி இலக்கியம்

16. மலைபடுகடாம் எந்தக் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது

(அ) நன்னன் (ஆ) நார்முடிச்சேரல்
(இ) நல்லி (ஈ) பாரி

17. "நும்இல் போல நில்லாது புக்கு" - இவ்வடிகள் இடம்பெற்ற நூல்?

(அ) திருமுருகாற்றுப்படை
(ஆ) சிறுபாணாற்றுப்படை
(இ) பெரும்பாணாற்றுப்படை
(ஈ) மலைபடுகடாம்

## 5.3.2 திருக்குறள் – திருவள்ளுவர்



B-99/2023

### ஒழுக்கமுடைமை (14)

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள்: ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் பேணிக்காக்க வேண்டும்.

2. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள்: ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுபவர் அடையக்கூடாத பழிகளை அடைவர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



100) “மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” ….. என்னும் தொடர் இடம்பெறும் நூல்

(அ) தென்றல் விடுதூது (ஆ) குற்றாலக் குறவஞ்சி

(இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் (ஈ) முக்கூடற்பள்ளு

**விடை: (ஈ) முக்கூடற்பள்ளு**

**விளக்கம்: த.மொ. இ.தி.தே. TCA Book பக்கம் - 151**

151

| | |
|---|---|
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும் மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |



## 4.2.3. இயல் 3 - தொகுப்பு

**நினைவில் நிறுத்துவோம்:**

**சர்க்கரைப் பொங்கல்:**

- இளஞ்சிவப்பாக வறுத்த, பாதி உடைத்த பருப்பும் பச்சை அரிசியும் பானையில் கொப்புளமிட்டுக் கொதிக்க, மென்துணியில் வடிகட்டிய வெல்லக் கரைசல் நார்ப்பாகு பதத்தில் வெந்த பொங்கலுடன் கலக்கின்றது. உலர்ந்த திராட்சைகள் பசு நெய்யில் தங்கமென ஊதி உருண்டு வர, பிறை போன்ற முந்திரிப் பருப்புகள் அதனுள் சேர்ந்து மின்னுகின்றன. காற்றெங்கும் பால் கலந்த இனிப்பின் வாசம். இனி, இடித்த எலக்காய் தூவ, எல்லாமும் பொங்கலுடன் இணைந்து குழைய, இந்தச் சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பு திகட்டாது. நறுக்கிய ஈர வாழையிலையில் ஒரு அகப்பை சுடும் பொங்கலிட, அது விழுந்தெழுப்பும் மணம், அறுவடையின் மகிழ்வு அது! சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை (திருக்குறள் 1031).

**பழையசோறு:**

- பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பைக், கடுப்பு மணத்தைச், சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும், விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நார்த்தங்காய் அதனுடன் சேர்ந்து கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு – அது கிராமத்து உன்னதம்.

Q-100 / 2023

"மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" ……முக்கூடற்பள்ளு

கண்ணன், பிரசாந்தி சேகரம் – அடிசில் 2017

**நயம் பாராட்டுக:**

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்" - காளமேகப் புலவர்

| எதுகை | மோனை: |
|---|---|
| கத்தும் - கத்து | அத்த – அரிசி |
| இலை - உலை | அகப்பை- அன்னம் - அரிசி |

**விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி அந்த எழுத்துக்களை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

| | |
|---|---|
| ➢ இறகு (பறவையிடம் இருப்பது) | ➢ அக்கா (தங்கைக்கு மூத்தவள்) |
| ➢ குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்) | ➢ மதி (அறிவின் மறுபெயர்) |
| ➢ வாள் (மன்னரிடம் இருப்பது) | ➢ படகு (நீரில் செல்வது) |

TEACHER'S CARE ACADEMY



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

TEACHER'S CARE PUBLICATION TCA KANCHIPURAM

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு
## 2023 - 2024

**15-10-2023 அன்று நடைபெற்ற தமிழ்மொழி இலக்கியத் திறனறித்தேர்வில் 100-க்கு 97-வினாக்கள் நமது TCA வழங்கிய முதல் பதிப்பு புத்தகத்தில் இருந்து நேரடியாக கேட்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**97 / 100**



15-10-2023 அன்று நடைபெற்ற தேர்வின்

# வினா,விடை,விளக்கம்

1,500 மாணவர்களுக்கு தலா 36,000 ரூபாய்

புத்தகத்தை amazon.in இணையதளத்தில் பெற்று பயனடையலாம்

amazon.in

முன் பதிவிற்க்கான எண்கள்

95665 35080
76399 67359
93602 68118
63690 36346

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வில் வெற்றிக்கு வலுசேர்க்கும் வகையில்.....

**Online Full Test (பத்து முழு மாதிரி தேர்வு) பயனுள்ள முறையில் பயிற்சி பெறுவதற்கான வினாத் தொகுப்பு குறைந்த பட்ச கட்டணத்தில் www.tcaexamguide.com எனும் website -ல் login செய்து (ம) QR Scan செய்து பயிற்சி பெறலாம்.**






## அனைவரும் தேர்வில் வெற்றிப்பெற வாழ்த்துகள்

**TCAEXAMGUIDE**

www.Padasalai.Net

# TEACHER'S CARE PUBLICATION

HEAD OFFICE : 21/46, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1.
CONTACT : 95665 35080, 97862 69980

**BRANCH OFFICES**

Branch Office 1 : 14, 1st Floor, 63 KPRS Tower, Thennur High Road, Trichy-620017.

Branch Office 2 : 266-C, Advaitha Ashram Road, (Opp. To New Bus Stand), Salem-636004

Branch Office 3 : 23, North Veliveethi, Pooja Complex, Simmakkal, Madurai- 625001

TRICHY : 76399 67359, SALEM : 9360268118, MADURAI : 96555 37380

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide


# தமிழ் மொழி

# இலக்கியத் திறனறித் தேர்வு

# 2023 - 2024

## மேல்நிலைப் பள்ளி - முதலாம் ஆண்டு


**MORE INFORMATION**

Website : www.tcaexamguide.com

Play Store : tcaexamguide

Mail : tcaexamguide@gmail.com

facebook : tcaexamguide

Whatsapp : 95665 35080

Mobile : 97862 69980; 93602 68118; 76399 67359; 9655537380


www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# 11-ஆம் வகுப்பு
# தமிழ்
# திறனறித் தேர்வு
**Study Material**




## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு
## மேல்நிலை முதலாமாண்டு

### இவ்வுரை நூலில்.....

- தமிழ் திறனறித் தேர்விற்கு தேவையான அனைத்தும் உள்ளடங்கியுள்ளது
- விரிவான விளக்கம்
- வினா விடை பகுதி
- முந்தைய ஆண்டு தேர்வுகளின் வினாக்கள்
- ஒலி ஒளி காட்சி வீடியோக்கள்
- இணைய வழி தேர்வு
- மாதிரி வினாத்தாள்கள்

கல்வி என்பது எழுத்தறிவைமட்டுமே கொடுக்கக் கூடியதாக இருக்கக்கூடாது!
அது மனிதனைச் சிந்திக்க வைக்கக் கூடியதாகவும்,
புரிந்துகொள்ள வைப்பதாகவும், பொறுமையை வளர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.
-டாக்டர் ராதாகிருஷ்ணன்

TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

1st Edition

Kindly send me your study materials to padasalai.net@gmail.com